திங்கள்

சித்திரை · அணு - 8

சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

	ரூ.	அ	பை
வான வீதி (பாலு)	1	8	0
நக்ஷத்திரமாலே (குண்டூசி)	1	0	0
ராஜா சாண்டோ (ராமநாத்)	2	0	0
மனோரதம் (கே. ஸ்ரீ.)	1	4	0
ரேஷன் காலம் (,,)	1	4	0
நினைவு (நாகர்கோவில் மஹாதேவன்)	2	0	0
மீனுவின் பூனைகள் (எஸ். ஒய். சுப்ரமணியம்)	1	4	0
புதுமணத் தம்பதிகள் (இளவேனில்)	2	4	0
நான் டைரக்டரானேன் (கொத்தமங்கலம் சுப்பு)	0	8	0

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
மின்மினி	1	0	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதி மயக்கம்	1	0	0
காதலன் கொலே வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
இரட்டைக் கொலே	1	4	0
மர்மக்கொலே	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்
17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

போன் : 63 தந்தி : SIMCO



தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி விடுகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; .சிம்கோ ஊட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனு லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள் கடற்கரை, குளிர் பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

★

சிம்கோ, சிவகாசி.

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு ஒரு வருஷம்	ரூ.	6
,, அரை வருஷம்	ரூ.	3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ.	8
தனிப்பிரதி விலை	அணா	8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ.	100
,, அரைப்பக்கம்	ரூ.	50
,, கால்பக்கம்	ரூ.	30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ.	300
உள் அட்டை	ரூ.	150
முகப்புப் பக்கம்	ரூ.	150

கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறுது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ், சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம்:

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திங்கள்

ஏப்ரல் 1956

ஆண்டு 1 ★ துன்முகி—சித்திரை ★ மாதம் - 4

இம்மாதம்

பயிர்த்தொழிலுக்கு ஒரு திட்டம் ... 8
புதுமைக் கவி இளங்கோ ... 11
மேனுடுகளில் வேதாந்தம் ... 13
புனித ஏப்ரல் ... 23
தமிழ் இலக்கியம் ... 27
காஷ்மீரம் ... 41
மருதாணி ... 49
பரிமளகமகம ... 53
எண்ணெய் வரலாறு ... 55
தமிழில் துப்பறியும் கதைகள் ... 65
தும்மல் ... 70
பாரதநாட்டில் நடந்தே சுற்றுப்பிரயாணம் ... 73
நறி வெங்காயம் ... 78
சர்வம் பிளாஸ்டிக் மயம் ... 90
மறதியின் மகிமை! ... 93
நாட்டுப்பாடல் ... 98
கவி பிர்தவ்ஸி ... 102
விசித்திர விவாகங்கள் ... 105
சிறுவருக்கான சீரிய சிறை ... 110
கால் நூற்ருண்டில்...? ... 115

மற்றும் பல

படக் கட்டுரைகள் :

எண்ணெய் வரலாறு — அணைத்திட்டங்கள்
ரஷ்ய உடல் பயிற்சியாளர்

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

[stamp]

திங்கள்

வணக்கம்

'திங்கள்' வாசகர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்.

இம்மாதம், இளங்கோவின் தினம் சித்ரா பூர்ணிமையன்று கொண்டாடப்படவிருக்கிறது. அதையொட்டி திரு ம. பொ. சி. யின் கட்டுரை இவ்விதழில் வெளியாகியிருக்கிறது. தமிழ் இலக்கியத்தை பற்றி ஒரு சிறு கட்டுரையில் எல்லாம் எழுதிவிட முடியாது. ஆனால் அதில் உள்ளவை எவை என்பதை அறிய ஒரு பொது நோக்கு விமர்சனமாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இன்று இன்னும் தீராப்பிரச்னையாக இருப்பது காஷ்மீரம். அதைப்பற்றிய விவரமான கட்டுரை இவ்விதழில் வெளியாகியுள்ளது. 'புனித ஏப்ரல்', 'மறதியின் மகிமை!', 'தமிழில் துப்பறியும் கதைகள்', 'சிறுவருக்கான சீரிய சிறை' இவை எல்லாம் நிறைய விவரங்களைத் தரும் சுவை மிகுந்த கட்டுரைகளாகும்.

படக்கட்டுரைகள் சம்பந்தமாக இவ்விதழில் அணை திட்டங்கள், ரஷ்ய உடல் பயிற்சியாளர், எண்ணெய் வரலாறு தவிர, மயிலை உற்சவம் பற்றிய படங்களும் வெளியாகியுள்ளன.

தேகப்பயிற்சி விஷயமாக நாம் விசேஷ அக்கறை செலுத்துவதில்லை. இவ்விஷயம் பற்றி நாம் ரஷ்யர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியவை அதிகமுள்ளன. அதை உத்தேசித்து இவ்விதழில் அந்நாட்டு நிபுணர்களின் உடற்பயிற்சி படங்களை வெளியிட்டுள்ளோம்.

அடுத்த இதழ் வைகாசி பூர்ணமிக்கு முன் வெளியாகிறது. மகான் புத்தரின் 2500 வருஷ பிறந்த தினத்தை யொட்டி, புத்தரை பற்றி விசேஷ கட்டுரைகள், சாஞ்சி பற்றிய படங்கள் எல்லாம் வெளிவரவிருக்கின்றன என்பதை நேயர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திங்களுக்குத் திங்கள்

எட்டு வருஷங்களாகியும் இன்னும் காஷ்மீர் பிரச்னை என்னவோ தீர்ந்தபாடில்லை. சீக்கிரம் தீரும் என்பதற்கான அறிகுறிகளும் காணவில்லை. இதற்கு பாரதநாடு எவ்விதத்திலும் பொறுப்பாளியல்ல. காஷ்மீரின் எதிர்காலத்தை சர்வஜன வாக்கு எடுப்பதன் மூலம் காஷ்மீர் மக்களே முடிவு செய்யவேண்டும் என்பது பாகிஸ்தானின் உண்மையான நோக்கமாக இருந்தால், காஷ்மீரிலிருந்து தங்கள் துருப்புகளை வாபஸ் பெற்றிருக்கும். போர்த்தளவாட இறக்குமதி, இராணுவ நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிராது. "முதலில் படைகளை வாபஸ் பெற்றபின்தான் மற்றவை கவனிக்கப்படும். இப்போதுள்ள நிலையில் வாக்கெடுப்புக்கே அவசியமில்லை" என்று நேருஜி தெளிவாக்கி விட்டார்.

* * *

காஷ்மீர் பிரச்னை ஒன்றில் மட்டும் பாகிஸ்தான் சண்டித்தனம் செய்கிறது என்பது அல்ல. அடிக்கடி இந்திய எல்லைப்புறத்தை பாக் துருப்புகள் கடந்து விஷமம் செய்தும் தொல்லை கொடுக்கின்றன. பாகிஸ்தானிலிருந்து ஹிந்துக்கள் வெளியேறிவருவது இன்னும் நின்றபாடில்லை. சென்ற ஏழுவருஷ காலத்தில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து சுமார் 40 லட்சம் ஹிந்துக்கள் இந்தியாவுக்கு ஓடிவந்துள்ளனர். இன்னும் வந்துகொண்டிருக்கின்றனர். இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான், கோவா சர்க்காருக்கு பலவிதத்திலும் உதவி செய்து வருகிறது. இதை எல்லாம் பார்த்தால் இந்திய-பாக் சௌஜன்யம் லேசில் ஏற்படும் என்று எப்படிகூற முடியும்? ஆனாலும் நேரு அஹிம்ஸா மார்க்கத்தை கைவிட உத்தேசிக்கவில்லை.

* * *

ஆனால் பாகிஸ்தானில் ராணுவத் தளவாடங்கள் வந்து குவியும்போது இந்தியா எவ்வித முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும் செய்யாமல் சும்மா இருக்கலாமா? என்று சிலர் கவலைப்படுகிறார்கள். விநோபாஜி இதற்கு ஒரு யோசனை கூறியிருக்கிறார். "நாமும் படைபலத்தைப் பெருக்க ஆரம்பித்து விட்டால் உலகத்திலுள்ள பைத்தியக்காரர்களைப்போல் நாமும் ஆகிவிடுவோம். ராணுவச் செலவை அதிகரித்தால் நம் ஏழை நாடு பாரம் தாங்காமல் அமுங்கிப் போய்விடும். பாகிஸ்தான் முஸ்தீபுகளைக் கண்டு நாம் பயப்படக் காரணமில்லை. ராணுவச் செலவை பாதியாக குறைத்துவிட்டால் உலகில் நம் செல்வாக்கு இரட்டிப்பு மடங்காகும்." இவர் சொல்வது போல நடக்க முடியாவிட்டாலும் உள்நாட்டுப் பாதுகாப்புக்கான ராணுவத்தை திரட்டுவதில் நாம் அசிரத்தையாக இருக்கக்கூடாது.

* * *

ராஜ்ய புனரமைப்பு சீர்திருத்த மசோதா பிரசுரிக்கப்

பட்டு ராஜ்ய சட்டசபையிலும் சொற்ப திருத்தங்களுடன் நிறைவேறி விட்டது. இதன்படி 15 ராஜ்யங்களும், 7 மத்ய ஆட்சிப் பகுதிகளும் தான் இருக்கும். இம் மசோதாவில் தக்ஷிணபிரதேசம் பற்றிய பிரஸ்தாபமே இல்லை. சென்னை, திரு-கொச்சி, கேரளா — கர்நாடக இணைப்புப் பிரஸ்தாபமும் இல்லை. நிர்வாக வசதியை முன்னிட்டு சில ராஜ்யங்களின் எல்லைகளில் சில சிறிய மாறுதல்கள் செய்ய நேரலாம் என்று இந்திய சர்க்கார் எதிர்பார்க்கிறார்கள். அவசியமானால் பின்னர் சர்க்கார் எல்லைக் கமிஷன்களை நியமிக்கும் எனத்தெரிகிறது. அக்டோபர் முதல்தேதி முதல் இப்புது ஏற்பாடு அமுலுக்கு வரும் என்று இம்மசோதாவில் காணப்படுகிறது.

சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடப்பட வேண்டும் என்கிற திருத்தம் தோல்வியுற்றது.

சட்டசபையில் ராஜ்ய புது அமைப்பு சட்டத்தை எதிர்த்து காங்கிரஸ்காரர்கள் பேசக் கூடாது என்று காங்கிரஸ்கட்சி தடைபோட்டதை ஆட்சேபித்து, சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியிலிருந்து ஸ்ரீஸி.ராஜகோபாலாச்சாரியார் விலகிவிட்டார். (இவர் ராஜிநாமா சட்டசபை காங்கிரஸ் கட்சியிலிருந்துதான், காங்கிரஸிலிருந்து அல்ல.)

மேல் சபையில் ராஜாஜியின் பதவி காலம் இம்மாதம் 20உ யுடன் முடிகிறது. மீண்டும் அவரை நியமனம் செய்வதாக கவர்னர் ஸ்ரீ பிரகாசா கூறியதை ராஜாஜி நிராகரித்து விட்டாராம்.

சென்னை சர்க்கார் தங்கள் கல்வித்திட்டத்தை 'வெள்ளையறிக்கை'யாக வெளியிட்டிருக்கிறார்கள். இதில் விசேஷ புதுமையோ மாறுதலோ எதையும் காணோம். ஆரம்பப் படிப்பு, எலிமெண்டரி படிப்பு இவை எட்டுஆண்டுகள் என்றிருந்ததை ஏழு ஆண்டுகளாக குறைக்கப் பட்டிருக்கிறது. உயர்நிலை படிப்பு மூன்று ஆண்டுகளாக இருந்ததை, நான்கு ஆண்டுகளாக அதிகரித்திருக்கிறார்கள். இத்துடன் ஆங்கிலத்தை கட்டாய பாடமாகவும், ஹிந்தியை இஷ்டபாடமாகவும் செய்திருக்கிறார்கள்.

வகுப்புகளில் 60 மாணவர்களுக்கு மேற்பட்டு விட்டால் முப்பது மாணவர்களை தோட்ட வேலை முதலிய வெளிவேலைகளை செய்யும்படி விட்டு விட்டு, பாக்கி 30 பேர்களுக்கு மூன்று மணிநேரம் பாடம் நடத்தலாம். ராஜாஜி கல்வி திட்டத்திலும் அடிப்படை அம்சம் இது தானே! இவ்வளவுக்கும் கடைசியாக ஆசிரியர்களின் நிலைமையும் உயரவேண்டும்! ஆனால் நிதிநிலைமை அதற்கு இடம் கொடுக்க வில்லையே என்ற பல்லவியையே சர்க்கார் பாடி வருகிறது.

* * *

இலங்கைப் பொதுதேர்தலில் கொத்தலவாலா கட்சி மண்ணை கவ்விவிட்டது. ஐக்கிய முன்னணிக் கட்சிக்கு பூரண மெஜாரிட்டி கிடைத்துள்ளது. இக்கட்சியின் தலைவர் ஸ்ரீ பண்டாரநாயகா தனக்கும் நேருஜிக்குமிடைய நெருக்கமான நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக கூறியிருக்கிறார். நேருஜியின் அயல்நாட்டு க்கொள்கையைத்



இந்தியாவின் புது ராஜ்யங்கள்.

தான் மனப்பூர்வமாக ஆதரிப்பதாகவும், இலங்கை இந்தியா போன்ற ஒரு குடியரசாக இருக்கவே விரும்புகிறது என்றும் அவர் கூறினர்.

* * *

காந்தி மகன் மணிலால் காந்தி காலமானுர். இவர் தென்னுப்பிரிக்காவில் காந்தி ஆரம்பித்து நடத்திய இந்தியன் ஒபினியன் என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக சேவை செய்தவர்.

வெள்ளையர்கள் தங்கள் நலனைக் கருதி எப்போதுமே பிரித்தாளும் உபாயத்தை கடைப்பிடித்து வருகின்றனர் என்பது சரித்திர உண்மை. தென்னுப்பிரிக்காவிலும் இந்தியர்-சுதேசிகள் இவ்விருவரும் ஒன்று சேராமல் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொள்ள வெள்ளையர் வழி செய்து வந்தனர். மணிலால் காந்தி சேவை தான் இருதரப்பாளரிடையேயும் செளஜன்ய நிலையை ஏற்படச் செய்தது. ★

பயிர்த்தொழிலுக்கு ஒரு திட்டம்

ஆசிரியர் ராமநாத்

இந்தியா ஒரு விவசாய நாடு. ஆகவே என்னதான் கைத்தொழிலில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் விவசாயத் துறையில் கவனம் செலுத்தாமலிருக்க முடியாது. அந்நியர் ஆட்சியில் நம் விவசாயத்தை விருத்தி செய்வதைப் பற்றி அக்கறை காட்டப்படவில்லை. ஆனால் இப்போது நாம் சுதந்திரம் பெற்று விட்டதால் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இந்த யோசனை நிபுணர்கள் கவனத்திற்குரியது.

இந்தியாவின் ஜீவநாடி பயிர்த் தொழில். மேனாடுகளில் கைத்தொழில்புரட்சி ஏற்பட்ட காலம் முதற் கொண்டு ஆசிய நாடுகளை விடப் பன்மடங்கு முன்னேற்றமடைந்து அந்நாடுகள் செழிப்புற்று விளங்க ஆரம்பித்தன. இதற்கு முன் இந்தியா போன்ற நாடுகள் உலகத்திலேயே முதன்மை ஸ்தானம் வகித்து வந்து, மேனாடுகளின் கவனத்தையும் கவர்ந்து அவைகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு விட்டன. இன்றைய நிலையில் கைத்தொழில்கள் முன்னேறுவிடில் நாடுகள் சுபிட்சம் பெற முடியாது.

ஜனத்தொகை பெருகி வந்த காரணத்தினால் ஒவ்வொரு நாட்டிலும் தேவை மிகுந்து விடுகிறது. வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் என்று கருதப்பட்டு வந்த பொருள்கள் முற்காலத்தில் எல்லாம் மிகவும் சொற்பமே. இப்பொழுதோ வாழ்க்கையை வளம்படுத்த உணவு, உடை, தங்குமிடம் ஆகிய மூன்று இன்றியமையாதவைகளுடன் மேலும் பல பொருள்கள் தேவைப்படுகின்றன. விமானம் முதலிய பிரயாண வசதிகள், புத்தகங்கள், பத்திரிகைகள் போன்ற அறிவு வளர்ச்சி சாதனங்கள், சினிமா, ரேடியோ போன்ற பொழுது போக்கு சாதனங்கள், அன்றாட உபயோகத்திற்குத் தேவைப்படும் ஆயிரக்கணக்கான பொருள்கள் இவையெல்லாம் வாழ்க்கையை வளம்படுத்த உபயோகப்படுகின்றன.

மேற்கூறிய பலவித பொருள்களும் நாட்டின் தேவைக்கு உகந்தவாறு நம் நாட்டிலேயே உற்பத்தி செய்வது மிகவும் அவசியமாகும். ஆயினும் இந்தியா ஆதிகாலந் தொட்டே ஒரு பயிர்த்தொழில் நாடாக இருந்து வந்திருக்கிறது. இதன் காரணமாகவே மூலப்பொருள்கள் இந்தியாவினின்று பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, பிறநாடுகளில் தயார் செய்யப்பட்ட சாமான்கள் திரும்பவும் நம் நாட்டிற்கே வந்து விற்பனையாகின்றன. இதனால் நம் நாட்டுச் செல்வம் பிறநாடுகளுக்குப் போய் விடுவது சாத்தியமாகிறது. இந்தியா சுபிட்சப் பாதையில் முன்னேற வேண்டுமானால்,

மூலப் பொருள்கள் இந்தியாவிலேயே நிறுத்தி வைக்கப்பட்டு, அவைகளினின்றும் பலதரப்பட்ட உபயோகமான பொருள்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

இந்நிலை ஏற்படும்போது நாம் பயிர்த்தொழிலை கவனிக்காமல் விட்டு விடுவோமானால், மூலப் பொருள்களுக்கு இந்தியா பிற தேசங்களை நாடவேண்டியிருக்கும்.

இரண்டாம் மகாயுத்தத்திற்குப் பிறகு இந்தியாவின் உணவு பற்றாக்குறையை ஆராய்வோமானால், நமது நிலைமை நன்கு விளங்கும். பல நூற்றாண்டுகளாக பயிர்த்தொழில் பழைய முறையைப் பின்பற்றியே நடத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்தியாவின் ஜனத்தொகை விருத்தியும் பற்றாக்குறையை அதிகப்படுத்தி விட்டது. இன்றைய தேவைக்கு ஏற்றாற்போல் மூலப்பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டுமானால், பழைய முறைகளை கைவிட்டு விட்டு, நூதன சாதனங்களை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இதற்கு பல இடையூறுகள் இருக்கின்றன. முதலாவதாக இந்தியக் குடும்பங்கள் சிதறுண்டு போனது முக்கிய காரணம். சில வருஷங்களுக்குமுன் நிலம் ஏக குடும்பங்களின் பொதுச் சொத்தாக இருந்தது, பெரிய பெரிய பண்ணைகள் ஒரே குடும்பத்தின் கைவசத்தில் இருந்தன. சமூக நிலைமை மாறுபட்டதின் காரணமாக நிலம் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுபோயின. இன்றைய நிலையில் கூட்டுப் பண்ணைகள் நடத்துவது மிகவும் சிரமமான காரியம். 50 ஏகரா முதல் 1000 ஏகரா வரை ஒரே பண்ணையின் நிர்வாகத்தில் இருக்குமானால், நவீன சாதனங்களைக்கொண்டு பயிர்த்தொழில் விருத்திசெய்து, மாசூலில் ஒன்றிற்கு இரண்டு மடங்காகப் பெருக்கமுடியும். இம்மாதிரி செய்வதற்கு தற்போதைய நிலையை அனுசரித்தே ஒரு திட்டம் தேவைப்படுகிறது.

நவீன சாதனங்களைக் கொண்டு பயிர்த்தொழில் செய்வதற்கு, குறைந்தது பத்து கிராமங்கள் கொண்ட ஒரு கூட்டுப் பண்ணை ஏற்படுத்தலாம். சீனாவில் சென்ற இருபது ஆண்டுகளுக்குள் இம்மாதிரி கூட்டுப் பண்ணையின் மூலம் பயிர்த்தொழிலை மிகவும் விருத்தி செய்திருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி பயிர்த்தொழிலை விருத்தி செய்யக் கூடாதா? என்று கேட்கலாம். சமீபத்தில் இந்தியப் பிரதமர் நேரு இதை ஆதரித்துப் பேசி இருக்கிறார். ஆனால் கூட்டுறவு சங்கங்களின் சட்டம் இவைகளுக்குப் பிரயோசனப்படாது. நிலசொந்தக்காரர், தான் பரம்பரையாக அனுபவித்து வரும் நிலத்தின் உரிமையை லேசில் விட்டுக் கொடுக்க சம்மதிக்க மாட்டார். நிலசொந்தக்காரருக்கு அது தன்னுடைய நிலமாகவே இருக்கவேண்டும் என்ற அவா இருக்கும். மேற்கொண்டு தன் நிலத்திலிருந்து கிடைக்கும் விளைபொருள்களை தானே உபயோகிக்க விரும்புவார்.

எஞ்சியதையே விற்று தனக்கு வேண்டிய இதர சாமான்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவார். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நிலக் கம்பெனிகள் ஸ்தாபிதம் செய்வதற்கான சட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். சுமார் 10 கிராமங்கள் அடங்கிய இக்கூட்டுப்

பண்ணைகளுக்கு சில விசேஷ சலுகைகள் காட்ட வேண்டும். உதாரணமாக நவீன யந்திர சாதனங்கள் வாங்குவதற்காக சர்க்கார் நிலக் கம்பெனிகளுக்கு கடன் கொடுத்து உதவ வேண்டும்.

தற்போது இந்தியாவிலிருக்கும் பயிர்த்தொழில் ஆராய்ச்சி மன்றங்கள் இந்தியா போன்ற பெரியதொரு நாட்டின் தேவைக்குப் போதுமானதல்ல. பயிர்த்தொழிலில் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்ததே. இவைகளை ஒன்றுக்கு பத்துமடங்காகப் பெருக்கினுலொழிய, நிலைமை திருப்திகரமாக விளங்கும் என்று கூறமுடியாது. கோயமுத்தூர் பயிர் கல்லூரி போன்றவைகள் ஜில்லாவிற்கு ஒன்ருக ஏற்படுத்தப்பட வேண்டும். அல்லது தற்போதுள்ள கல்லூரிகளிலேயே பயிர்க் கல்வியைப் புகட்டி இன்னும் 10 ஆண்டுகளில் ஒவ்வொரு கூட்டுப் பண்ணைக்கும் நிர்வாகஸ்தராக பட்டம்பெற்ற ஒருவர் நியமனம் செய்யப்படும் அளவிற்கு பயிர்த் தொழில் நிபுணர்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

நிலத்தீர்வை விஷயமாக சர்க்கார் கொள்கையேமாற வேண்டும். ராஜ்ய சர்க்கார்களின் மேற்பார்வையிலும் ஆதரவிலும் கூட்டுப்பண்ணைகள் ஸ்தாபிதம் செய்யப்படுமாகையால்,ராஜ்யசர்க்கார்கள் நிலவரி வசூல் அமைப்பையே திருத்தவேண்டும். நிலக் கம்பெனிகளின் வருமானத்திலிருந்து ஒரு பங்கை வரியாக விதித்து, ராஜ்ய சர்க்கார்கள் அந்த வரியைப் பெறுமானுல் நிலவரியையே ரத்து செய்து விடலாம்.

மேலே கூறப்பட்டபடி நிலக் கம்பெனிகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டால் அக்கம்பெனிகள் தேவைக்குத் தகுந்த சிறு கைத்தொழில்களை அவைகளே மேற்கொள்ளலாம். உதாரணமாக நெல் விளையும் பிராந்தியங்களில் மாவுமில் போன்ற தொழில்களை கம்பெனிகளே மேற்கொள்ளலாம். பழங்கள் விளையும் பிரதேசங்களில் பழங்களை டின்களில் அடைப்பது போன்ற தொழில்களும் அக்கம்பெனிகளின் நோக்கங்களில் ஒன்ருகும்.

இக்கம்பெனிகளுக்கு பண வசதி ஏற்படுத்திக் கொடுக்க சில விசேஷ ஸ்தாபனங்களை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும்.

கம்பெனிகளுக்கு விதைகள் வினியோகம் செய்வதில் விசேஷ சலுகை காட்டப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமொன்று உடனடியாகத் தயாரிக்கப்பட்டு, நடைபெற்று வரும் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்படவேண்டும். ★

★ வீணையை மீட்டினுல் தான் அதன் இனிய நாதத்தை கேட்டு ரஸிக்க முடியும்; திறமைசாலி ஆதரிக்கப்பட்டால் தான் அவன் திறமை வெளிப்பட இயலும்.

—கவி தாகூர்

★ தூய்மையான இதயத்தின் தூதுவன், நேர்மையான பேச்சு.

—திருவள்ளுவர்

இம்மாதத்தில் முதல் தடவையாக தமிழகத்தில் கொண்டாட விருக்கும் இளங்கோ தினத்தை யொட்டி இக்கட்டுரை.

புதுமைக்கவி இளங்கோ

ம. பொ. சிவஞானம்

சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள், தமிழ்ப் புலவர் பரம்பரையின் 'தலைவர்' என்று கூறலாம். அவருக்கு முன் தோன்றிய பேரறிஞர் வள்ளுவர் கூட, வாழ்க்கை இலக்கணமாக நீதி நூல்தான் எழுதினார். இளங்கோவடிகளோ, நீதி போதனைகள் நிறைந்த காப்பியத்தை யாத்தருளினார். எந்த வகையில் பார்த்தாலும், தமக்கு முன்னும் பின்னும் தோன்றிய புலவர்களுக்குத் தலைவராகவே இளங்கோ விளங்குகின்றார்.

தமிழ்க் காப்பியங்களை வரிசைப்படுத்தினால், காலத்தாற் முற்பட்டது இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரமே. அதோடு ஏனைய காப்பியங்களெல்லாம் சமயச் சார்புடையவையே. இளங்கோவின் சிலப்பதிகாரம் ஒன்றுதான் சமய பேதங்களைக் கடந்த சமுதாய இலக்கியமாக விளங்குகின்றது. இன்று நம் கையிலுள்ள காப்பியங்களில் பண்டைப் பெருமையோடு விளங்கும் ஒரே நாடகக் காப்பியம் சிலப்பதிகாரம்தான். மற்றும் கற்பனைகளை குறைவாகவும் உண்மையில் நிகழ்ந்த சம்பவங்களை அதிகமாகவும் கொண்ட சரித்திரக் காப்பியமாக விளங்குவதும் சிலப்பதிகாரம் ஒன்றேயாகும்.

சிலப்பதிகாரத்திற்கு முன் தோன்றிய இலக்கியங்களனைத்தும் வெறும் அகவற்பாக்களால் இயற்றப்பட்டவையாகும். சிலப்பதிகாரமோ, கானல் வரி, ஆச்சியார் குறவை போன்ற இசைப் பாடல்களையும் தன்னகத்தே கொண்ட முதல் இலக்கியமாக விளங்குகிறது.

இளங்கோ வடிகள், தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தின் மூலம் 'பத்தினித் தெய்வம்' என்ற ஒரு புதிய தெய்வத்தையே தோற்றுவித்து விட்டார். வட ஆரியமன்னரும், பௌத்த சமயத்தைச் சார்ந்த இலங்கை கயவாகுவும், தமிழக மூவேந்தர்களும் ஒருங்கு சேர்ந்து பத்தினித் தெய்வத்தை வழிபடும்படி செய்து வைத்திருக்கிறார் இளங்கோ.

தமிழகத்தின் அரசியலிலே கொடுங்கோல் அரசை எதிர்த்து குடிமக்கள் புரட்சி செய்த செய்தி சரித்திரத்தில் இல்லை. ஆனால் சிலப்பதிகாரம் ஒன்று மட்டும் இதற்கு விதிவிலக்கு. வழிவழி பழியறியாத பாண்டிய மரபில் பிறந்த நெடுஞ்செழியன், விதிவசத்தால் கொடுங்கோலன் ஆனதன் விளைவாக அவனுடைய ஆயுளை முடித்து, அணி மதுரையைக் கொளுத்தி, அரசையும் அழிக்கின்றாள் கண்ணகிதேவி.

இந்த அரசியல் புரட்சி இலக்கிய உலகில் இளங்கோ காட்டும் புதுமையாகும்.

இளங்கோ காலத் தமிழகம் சேர, சோழ, பாண்டிய மன்னர் பரம்பரைகளால் மூன்று தனித்தனி நாடுகளாக சேதப்பட்டுச் சிதறிக்கிடந்தது. சிலப்பதிகாரத்திற்கு முன்புள்ள எந்த இலக்கியத்தை எடுத்தாலும் சேரநாட்டார் பாண்டிய நாட்டாரோடு போரிட்ட செய்தியும், இந்த இரு நாட்டாரும் சோழநாட்டாரோடு சண்டையிட்ட சம்பவமுமே காணக்கிடக்கின்றன.

இதற்கெல்லாம் மாருக தமிழ்நாட்டு வேந்தர், வட வேந்தரை எதிர்த்துப் போரிட்ட செய்தியை தெளிவாகக்கூறும் ஒரே இலக்கியம் இளங்கோ இயற்றிய சிலப்பதிகாரம்தான்.

அரசியல் வழி, சேர, சோழ, பாண்டியர் வெவ்வேறு குலத்தவராயினும், மொழிவழி அவர்கள் ஒரே இனத்தவர் என்பதை சேரன் செங்குட்டுவன் மூலம் நமக்கு அறிவிக்கின்ருர் இளங்கோ வடிகள். ஆச்சியர் குறவையில், முல்லை நிலத்தில் ஆயர்குலப் பெண்டிர் இராமனைத் திருமால் என்றே கூறி வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

இப்படி இலக்கிய உலகிலும், அரசியல் துறையிலும், சமூக இயலிலும், கலாச்சார வழிகளிலும் எத்தனை யெத்தனையோ புதுமைகளைத் துவக்கி வைத்திருக்கிருர் இளங்கோ வடிகள். அத்தனைப் புதுமைகளையும் இத்தனைநாள் வரையும் தமிழ்ப் புலவர் உலகம்கூட முற்றிலும் அறிந்து கொள்ளவில்லை. இனி புலவர்களேயன்றி, சாதாரண மக்களும் இளங்கோவின் திறமையை. சிலப்பதிகாரத்தின் பெருமையை தெள்ளத் தெளிய உணர்வதற்கு இவ்வாண்டில் துவங்கும் இளங்கோ வழிபாடு பயன் படுவதாக.

ஆரிய மன்னரான கனக விசயர், காவா நாவினராய் பழித்துப் பேசியது தன்னையல்ல. சோழ — பாண்டியரைத்தான் என்று சொல்லக் கேட்டும், ''தமிழரில் யாரைப் பழித்தாலும் என்னையும் பழித்தது போலத்தான்'' என்று செங்குட்டுவன் கூறுவது இன ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

பண்டை நாளில். அரசியலில் மட்டுமின்றி, கலாச்சாரத்துறையிலும் தெற்கிற்கும் வடக்கிற்கும் இடையே இணைக்க முடியாத அளவில் அகலமான இடைவெளி இருந்தது. சிலப்பதிகாரத்தின் மூலம் அந்த இடைவெளியைக் கடப்பதற்கு பாலம் போட்டுத் தந்தார் இளங்கோ வடிகள். இந்திய கலாச்சாரத் துறையில் இத்தகைய புரட்சியைச் செய்தவர்கள் இளங்கோவிற்கு முன்பு வேறு யாரும் இருந்ததில்லை. இந்திய தேசீய ஒற்றுமையை விரும்பும் ஒவ்வொருவரும் இளங்கோவிற்கு நன்றி செலுத்த வேண்டும்.

இராமாயணத் தலைவனை இராமனை திருமாலாக — தெய்வமாக — நமக்கு அறிமுகப்படுத்தும் முதல் தமிழ் இலக்கியம் சிலப்பதிகாரம்தான்.

தமிழன்னையின் அணிகலன்களில் ஒன்ருன சிலப்பதிகாரத்தை உருவாக்கிய இளங்கோவின் பிறந்ததினம் இம்மாதம் தமிழ் நாடெங்கும் கொண்டாட விருப்பது, தமிழ் மக்கள் அவருக்குச் செலுத்தும் நன்றிக்கடனுகும். ★

மேனுடுகளில் வேதாந்தம்

டாக்டர் டி. எம். பி. மகாதேவன்

வேதாந்தம் இந்தியாவில் தான் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டதென்ருலும், அது இந்தியாவிற்கு மட்டுமே உரித்தானதல்ல. அதற்கு நிறபேதம், இனபேதம் எதுவும் கிடையாது. அதை யாரும் அப்யசிக்கலாம். குறிப்பிட்ட குடும்பத்தில்தான் பிறந்திருக்க வேண்டும் என்றெல்லாம் எவ்விதக் கட்டுப்பாடுகளும் கிடையாது. வேதாந்தத்தின் அங்கங்களான உபநிஷத்துகளில், எல்லோரையும் குழந்தைகளே என்று வருணிக்கப்படுகிறது. அந்த உபநிஷத்துகளில் அடங்கியுள்ள தத்துவ விசாரம் ஆத்மா விரும்பும் தேவைகளை அளிக்கக்கூடியவை. இம்மாதிரி ஆழ்ந்து அறியவேண்டும் என்ற ஞானம் சிலருக்கு உண்டாகாமல் போகலாம். இந்த ஆதி ஸ்வானுபவத்தை கேட்பதே கஷ்டமாகலாம். இதை எடுத்துச் சொல்வது என்பது பெரிய அதிசயம். இதை அறிந்து கொள்வது என்பது மிகப் பெரிய காரியம் என்று உபநிஷத் சொல்கிறது. ஆத்மாவைக் கண்டறிவது கஷ்டமாதலின் இதைத் தேடுபவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே தான் இருக்கிறது. இந்த ஆத்மாவுக்கு அழிவு இல்லை. காலம், நேரம் முதலியவை இதைக் கட்டுப்படுத்தாது.

இந்தியா தேசத்தின் எல்லை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு உட்பட்டு இருக்கலாம். ஆனுல் இந்த ஆத்மீக வளர்ச்சிக்கு எவ்வித எல்லைக் கோட்பாடுகளும் இல்லை. இதை தவருக உணர்வதே 'மாயை' என்பதாகும்.

மேனுடுகளில், முக்கியமாக அமெரிக்காவில் வேதாந்தத் துறையில் மக்கள் இப்போது சிரத்தைகாட்டிவருவதுசிறுகச் சிறுக அதிகரித்து வருகிறது. இதற்கு அங்கு சேவை செய்து வரும் சில ஸ்வாமிஜிகளே காரணம். மேனுட்டு அறிஞர்களில் பலர் வேதாந்தத்தின் அருமை பெருமைகளை நன்கு உணர ஆரம்பித்திருக்கின்றனர். அதன் வழிகளையும் அவர்கள் பின்பற்றி வருகின்றனர்.

வேதாந்தத்தில் மேனுட்டினருக்கும் அக்கறை ஏற்படுவது மனித சரித்திரத்திரத்திலேயே புது சகாப்தமாகும்.

1948-49-ல் யுனைடெட் ஸ்டேட்ஸில் நான் தங்கி இருந்தபோது ராமகிருஷ்ண மிஷன் அந்த நாட்டில் நடத்தும் பல வேதாந்த கழகங்களுக்குச் சென்றிருந்தேன். ஹாலிவுட் வேதாந்த கழகத்தைச் சேர்ந்த ஸ்வாமி பிரபவானந்தா என்பவருடன் ஒரு வாரம் தங்கி இருந்து, நான் பெற்ற அனுபவத்தை ஒரு நாளும் மறக்கமுடியாது.

நாகரீகம் நர்த்தனமிடும் அந்த பகட்டு ஹாலிவுட்டில் கவர்ச்சியற்ற அமைதியான ஒரு இடம். இக்கழகத்தில் மத்தியில் உள்ள வெள்ளைக் கட்டிடம் தாஜ் போன்ற பெருமை மிக்க தோற்றத்தையும், ஆலயம் போன்ற புனிதத் தன்மையையும் அளிப்பதாக இருந்தது.

இதன் அருகில் ஸ்பானிய குடிசை போன்ற ஒரு கட்டிடம் இருந்தது. இந்தக் கட்டிடம் சகோதரி லலிதா என்பவருடையது. அவர் விவேகானந்தரின் அமெரிக்க சிஷ்யைகளில் ஒருவர். வயதின் முதிர்ச்சி அவர் தோற்றத்தில் காணப்பட்டது. இவர் பிரபவானந்தாவுடன் இந்தியா வந்திருந்தபோது அவரை நான் சந்தித்திருக்கிறேன். இன்று அவர் இல்லை. ஆனால் வேதாந்தத்திற்காக அவர் பெரும் சேவையைச் செய்து விட்டுப் போயிருக்கிறார்.

தன்னிடம் வேதாந்த விஷயங்களைக் குறித்து அறிய ஆவலாக வருபவர்களுக்கு ஸ்வாமி மிக எளிதில் புரியும்படி விஷயங்களை விளக்குகிறார்.

பிரபல எழுத்தாளர்களான ஆல்டுவஸ் ஹக்ஸ்லி, ஜெரால்ட் ஹெர்ட், கிருஸ்டபர் கிஷர்வுட் போன்றவர்கள் தவிர, எவ்வளவோ யுவர்களும் யுவதிகளும் இவரிடம் போதனை கேட்க வருகின்றனர்.

வேதாந்த விஷயங்களைப் போதிக்க பலமுறைகள் உள்ளன. வேதாந்தத்தின் நோக்கம் ஒன்றே தான் என்றாலும் இந்தியாவில் அதை வெளிப்படுத்த அத்வைதம், த்வைதம், வசிஷ்டாத்வைதம் என்ற முறைகள் உள்ளன. இவைகள் எல்லாம் வேதங்களையே ஆதாரமாகக் காட்டுபவைகள்.

பிரும்மம் என்பதை கடவுள் என்று உருவகப் படுத்துவதா அல்லது உருவம் அற்ற ஒரு சக்தி என்று கருதுவதா என்பதுதான் உள்ள வித்தியாசம். ஆதிசங்கரரின் அத்வைதம் பின்னர் சொல்லப் பட்டதை ஆதரிக்கிறது. மேனாட்டினருக்கு ஏற்றபடி வேதாந்த கருத்துகளை வெளியிட அத்வைதமே சிறந்தது என்று ஸ்வாமி விவேகானந்தர் கருதினார். அவர் சொல்வது எவ்வளவு சரி என்பதை இந்த வேதாந்த போதனையில் ஈடுபட்டவர்கள் சீக்கிரமே உணர்ந்தார்கள்.

அத்வைதவேதாந்தமே மேனாட்டுக்கு ஏற்றது என்பதற்கான வேறுகாரணங்களும் உண்டு. அத்வைதமற்ற முறைகளைப்போல இதர முறைகள் மேனாடுகளில் உண்டு. ஆனால் அத்வைதத்திற்கு இணையாக எதுவும் இல்லை. அத்வைதத்தில் கடவுளுக்கு இடமில்லை என்று வாதிப்பது தவறாகும். ஆதிசங்கரர் கடவுள் வழிபாட்டுக்காக ஏராள பக்தி நூல்களைச் செய்திருக்கிறார்.

மேனாட்டினருக்கு அத்வைதம் நன்கு எடுபட்டிருக்கிறது. அத்வைதத்தில் எவ்வித 'இஸம்'களுக்கும் இடமில்லை. ''இது இப்படிதான். அதை ஒப்புக்கொள்ள வேண்டும்'' என்கிறமாதிரி அத்வைதம் சொல்லவில்லை. பெறும் அனுபவத்தை விளக்கிக்கூற ஞானமும் அவசியம் என்பதையே வற்புறுத்துகிறது.

அத்வைதம் ஒரு பெரிய நதியைப் போன்றது. ஆரம்பித்த இடமும் முடியும் இடமும் ஒன்றேதான். ஆனால் நடுவில் பல கிளைகளாகப் பிரிந்து பலருக்குப் பயன்படுகிறது. அதுபோல் அத்வைத விசாரம் சொல்பவர்கள் பல முறைகளைக் கையாண்டிருக்கின்றனர்.

ஆகவே மேனாட்டினருக்கு ஏற்ற முறையில் அத்வைத போதனைக்கு இடமிருக்கிறது என்பதை இதில் சிரத்தை உள்ளவர்கள் கவனித்து வருகிறார்கள். ★

லார்ட் மவுண்ட்பேட்டன்

லார்ட் மவுண்ட்பேட்டன் சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்தார்.

இவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சிறந்த யுத்த நிபுணர்களில் ஒருவர். சென்ற மாபெரும் யுத்தத்தின்போது அவருடைய போர்த் திறமையுடன் அரசியல் நிபுணத்துவமும் நன்கு வெளியாயிற்று. இது காரணமாகவே ஆட்லியை தலைவராகக் கொண்ட பிரிட்டிஷ் சர்க்கார் மிகச் சிக்கலான இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் பொருட்டு இவரைக் கடைசி கவர்னர் ஜெனரலாக அனுப்பி வைத்தார்கள். அதிகாரத்தை மாற்றிக் கொடுக்கும் விஷயத்தில் அவசரமும் ஆற்றலும் காட்டினார் இவர். இந்தியர்களால் நியமிக்கப்பட்ட முதல் இந்திய கவர்னர் ஜெனரல் இவரே.

முன்பு இவர் சென்னைக்கு விஜயம் செய்தபோது சாரணச் சிறுவர் கூட்டமொன்றில் பேசினார். அவர் தன் பேச்சை முடிக்கும் போது திடீரென்று தமிழில் பேச ஆரம்பித்து, சிரிப்பையும் திகைப்பையும் உண்டு பண்ணினார். "எல்லோருக்கும் என் ஆசீர்வாதம்" என்பதை கொச்சை தமிழில் அவர் கூறினார். சமீப விஜயத்தின் போதும் அவர் சென்னையை மறக்கவில்லை.

பண்டித நேரு ஒரு சமயம் சிங்கப்பூருக்குச் சென்றபோது லார்ட் மவுண்பேட்டனை முதல் தடவையாக சந்தித்துப் பேசும் சந்தர்ப்பத்திலேயே, அவர் திறமையை மதிப்பிட்டு விட்டார். லார்ட் வேவல் இந்திய அரசியல் துறையில் ஏகமாக குட்டை குழப்பியபோது, நேருதான் மவுண்ட்பேட்டனை வைஸ்ராயாக அனுப்பும்படி யோசனை கூறியவர் என்பது அநேகருக்குத் தெரிந்திராது. இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த பின்பும் நேருதான் அவருடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வழி செய்தார். இதன் காரணமாகவே இந்தியா-பிரிட்டன் நல்லெண்ணமும் உறவும் பலப்பட்டன. ★

ரஷ்ய உடல் பயிற்சியாளர்

தேகபலமே தேசபலம் என்பதை நன்கறிந்திருக்கிருர்கள் ரஷ்யர்கள். உடல் பயிற்சிக்காக ரஷ்யாவில் காட்டப்படும் அக்கறையை நாம் அவசியம் பின்பற்ற வேண்டும். ரஷ்ய உடல் பயிற்சியாளர்களைக் கண்டு பேசியபோது எனக்கு இந்த எண்ணம்தான் தோன்றியது.

சென்னைக்கு விஜயம் செய்த இக்கோஷ்டியில் மொத்தம் 15 பேர். இவர்களில் 10 பேர்கள்தான் சாம்பியன்கள். ஒருவர் டாக்டர், ஒருவர் பியானோ வாசிப்பவர், ஒருவர் மொழி பெயர்ப்பவர். ஒருவர் பயிற்சியாளர், ஒருவர் கோஷ்டித் தலைவர். ஆண்களில் 5 பேர்கள், பெண்களில் 5 பேர்கள். பெண்கள் எல்லாரையும் அழகிகள் என்று சொல்லிவிட முடியாது. இருந்தாலும் இவர்களது தேக ஆரோக்யத்தைக் கண்டு வியக்கவே வேண்டும்.

இக்கோஷ்டியின் தலைவர் இவான் சுடினுவ், மாஸ்கோ தேகப்பயிற்சி கழகத்தில் லெக்சரர்ராக சேவை செய்பவர். அவர் சென்னை விஜயம் குறித்து மிகவும் திருப்தி தெரிவித்தார். இந்தியாவில் பல இடங்களில் சிறந்த உடல்பயிற்சியாளர்கள் பலரைச் சந்தித்தாராம். அவர்களுக்கு இன்னும் பயிற்சி அளித்து ஊக்கமும் அளித்தால் அவர்களால் நாட்டிற்கு நிச்சயம் புகழ் ஏற்படும் என்று கூறினுர்.

ஒலிம்பிக் விளையாட்டுகளில் இந்த உடல்பயிற்சி நிகழ்ச்சிகள் முக்கியமானதொரு அம்சமாகும். இந்த கோஷ்டியிலுள்ளவர்கள் எல்லாருமே ஒலிம்பிக் சாம்பியன்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் தான் நிபுணர் என்பதில்லை. எல்லாரும் எல்லாவித அயிட்டங்களையும் செய்கிருர்கள். உடல் பயிற்சியில் திறமை பெற்ற பெண் குடும்பத்தை நடத்துவதற்கேற்றபெண்மணியாக விளங்கமுடியுமா? என்ற கேள்வியை கேட்டுவைத்தேன். அந்த வீரப் பெண்களிடமிருந்து இதற்குப் பதிலாக சிரிப்புதான் வந்தது. மொழி பெயர்க்கும் அம்மாள், "ஏன் முடியாது? மிக சுகமாக வாழ்க்கையை நடத்தி நல்ல தேகாரோக்யமுள்ள குழந்தைகளுக்கு தாயாராக முடியுமே!" என்ருர். இவர்களில் 4 பேர் மணமானவர்கள். பெண்களுக்குண்டான நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு இவைகள் உடல் பயிற்சியில் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்பது என்னவோ உண்மை.

இவர்கள் எதை சாப்பிட வேண்டும் என்ருலும் கூட வந்திருக்கும் டாக்டர் அனுமதியளித்தால்தான் இவர்கள் சாப்பிடலாம்.

இக்கோஷ்டியின் இந்திய மானேஜர் ராம்தயாளிடம் இந்தக் கட்டுப்பாடு எதற்கு என்று கேட்டபோது, "ரஷ்யாவின் செல்வங்களாயிற்றே இவர்கள்! ஆகவே ரஷ்ய சர்க்கார் இவர்கள் விஷயத்தில் விசேஷ சிரத்தை காட்டுகிறது!" என்ருர்.

இக்கட்டுரை சம்பந்தமான படங்கள் இவ்விதழில் வேறு பக்கங்களில் வெளியாகியுள்ளன. ஆ-ர்.

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

தவறும் தண்டனையும்

ஒரு சமயம் நான் தஞ்சை ஜில்லாவில் இரண்டு ஊர்களை இணைக்கும் சாலையில் நடந்து கொண்டிருந்தேன். ஒரு குரங்குக் கூட்டம் மரத்துக்கு மரம் தாவிக் கொண்டிருந்தது. அவற்றில் ஒரு பெரிய குரங்கு ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரம் தாவும்போது, குறி தவறித் தரையில் பொத்தென்று விழுந்து விட்டது! குரங்கு ஜாதியில், தாவும்போது குறி தவறிக் கீழே விழுந்து விட்டால், அக்குரங்கை தங்கள் ஜாதியிலே குரங்குகள் வைத்திருக்க மாட்டா. உடனே மற்ற எல்லாக் குரங்குகளும் அக்குரங்கின் மீது பாய்ந்து, அதைப் பிராண்டி கொன்று விட்டன. முப்பது குரங்குகளுக்கு மத்தியில் அந்தப் பெரிய குரங்கின் நிலை பரிதாபகரமாக இருந்தது. அதற்குமுன் குரங்குகளினுடைய இந்த ஜாதிக் கட்டுப்பாட்டைப்பற்றி நான் கேள்விப்பட்டு மட்டும்இருந்தேன்; நேரில் பார்த்தது கிடையாது. அந்தப் பெரிய குரங்கை இப்போது நினைத்தாலும் என் கண்களில் நீர் வழிகிறது.

மனிதர்களிலும் வழிதவறும் மக்களுக்கு இந்த தண்டனையைக் கொடுத்தால்?

வி. சந்தானம்,
ஹைதராபாத்.

முதல் சம்பளம்

நான்கு வருஷங்களுக்கு முன்பு, நான் நடுத்தர வசதி உள்ளவனுகயிருக்கும்போது, எனக்கு என் வாழ்நாளிலே மறக்க முடியாதபடி தண்டபாணி என்ற ஏழை நண்பன் ஒருவன் கிடைத்தான். அவனுடைய பெற்றோர்கள் மிகவும்ஏழையாகயிருந்ததால், அவன் எஸ். எஸ். எல். ஸி. படிக்கும்போது அவனுக்குத் தேவையான உணவு, உடை, படிக்க இடவசதி கூட இல்லாமல் கஷ்டப்பட்டான். அவனது சிறந்த அறிவும், படிப்பில் நல்ல ஆர்வமும் அவன் காட்டி வந்ததால், நானும் அவனிடம் மிகுந்த அன்பு கொண்டு, அவனுக்கு தேவைப்பட்ட எல்லா உதவிகளும் செய்து, சுமார் 300 ரூபாய் வரை அவனுக்காக செலவு செய்தேன். அவனும் நன்ருகப் பாடுபட்டு, படித்து பரீக்ஷையில் நல்ல மார்க்குகளுடன் பாஸ் செய்தான். மேலும் அவன் சொந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெருத ஆசிரியர் வேலைப் பார்த்து வந்தான். அப்போது எங்களுக்கிடையே ஒரு சிறு மனஸ்தாபம் ஏற்பட்டு நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்காமலிருந்து வந்தோம். ஆனுலும் அவன் முதன் முதலாக வாங்கிய முதல் மாதத்திய சம்பளப் பணத்தைத் தன் பெற்றோர்களிடம் கூட கொடுக்காமல், நானும் எதிர்

பார்க்காதபடி, என்னிடம் வந்து என் கையில் அவனது சம்பளப் பணத்தை முழுவதும் கொடுத்து, நமஸ்காரமும் செய்து சிரித்தான்.

''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பித்து விட்டான். அதனுல் நான் என் நண்பன் தண்டபாணியை மறந்தாலும், அவன் செய்த காரியத்தை மறக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள்.

எஸ். ஆர். ஜகன்னுதன்,
குத்தாலம்.

விளையாட்டு வினையாயிற்று

நான்கு வருடங்களுக்கு முன்பு எனக்கு ''கிட்டிப்புள்'' விளையாட்டு என்ருல் மிகவும் பிரியம். லீவு விட்டால் போதும். பசி, தாகம், வீடு எல்லாவற்றையும் மறந்து: விளையாட்டில் ஈடுபட்டு விடுவேன். என் தகப்பனுர் கோபத்திற்கு பயந்து, மறைவாக ஆடுவேன். ஒருநாள் மும்முரமாய் ஆடுகையில், நான் அடித்த கில்லி, என்னுடன் ஆடிக்கொண்டிருந்த என் நண்பன் சோமுவின் முகத்தில் நன்ருகத் தாக்கி விட்டது. 'ஐயோ' என்று கதறியபடி சோமு உட்கார்ந்து விட்டான். நான் நடுங்கி விட்டேன். சோமு கண்களைத் திறக்க முடியவில்லை, அதனுல் அவனை கைத்தாங்கலாக டாக்டர் வீட்டுக்கு அழைத்துப்போனேன். டாக்டர், சோமுவின் கண்களைப் பார்த்துவிட்டு, ''அடடா! விழியே தெரியாமல் கண் சிவந்து விட்டதே! ரத்தம் தேங்கிவிட்டது! விழிகளை எடுத்துவிட்டு, ஆபரேஷன் மூலம் ஆட்டு விழிதான் வைக்கவேண்டும்'' என்ருர். நான் பட்டபாடு என்றும் மறக்க முடியாது. சோமுவோ வலியைவிட அவன் தந்தையை நினைத்து பயந்து விட்டான். பிறகு இருவரும் தர்ம வைத்தியசாலை சென்ருேம். அங்குள்ள ஒரு வயதான வைத்தியர், சோமுவைப் பரிசோதித்து விட்டு, ''ரத்தம் குழம்பி விட்டது. அடி பலம்தான். ஆனுல் கண்களுக்கு அபாயமில்லை'' என தைரியம் சொல்லி மருந்து போட்டார். மறுநாளே சோமுவுக்கு குணமாகி விட்டது. ஆனுல் அன்றுமுதல் நான் கில்லி விளையாட்டு என்ருல் போகவே மாட்டேன். நாங்கள் பயந்ததையும், ஏற்ருற்போல் ஒரு டாக்டர் அதிக பயம் காட்டியதையும் மறக்கவே முடியவில்லை.

எம். ராஜாராம்,
சென்னை.

குற்றமுள்ள நெஞ்சு

ஆறு ஆண்டுகளுக்கு முன் நான் பத்திரிகை ஏஜண்டு ஒருவரிடம் வேலை பார்த்து வந்தேன்.

இங்கிலையில் ஒரு நாள் காலையில் வரவேண்டிய பத்திரிகை மந்தியானம் வந்தது. துரிதமாக சப்ளை செய்யவேண்டி, சைக்கிளை உபயோகிக்க விரும்பி, சக்கரங்களுக்கு காற்றடித்துக் கொண்டு திரும்பினேன். வரும் வழியில், பிரேக் கையை விட்டு நழுவியது. எதிரில் வந்த ஒரு பெண்ணின் மீது, சைக்கிள் ஏறியது. ''ஐயோ, அவனைப் பிடியுங்கள், பிடியுங்கள்'' என்று பல குரல்கள் எழுந்தன. நானும் நிற்காது ஓடி விட்டேன்.

அந்தச் சமயத்தில் என்னை ஒரு போலீஸ்காரர் கூப்பிடவே, என் பயம் அதிகரித்தது. குற்றமுள்ள நெஞ்சாயிற்றே! ஆகவே பயம் மிகுதியால் ஓடிவிட்டேன். இதை என் நண்பனெருவன் கவனித்து விட்டு, மாலையில் என்னை சந்தித்தான். என்னை விசாரித்தபோது, நான் என் பயத்தின் காரணத்தை கூறினேன். ''நீ பயப்பட்டது போல் உன்னைப் பிடிக்க போலீஸ்காரர் கூப்பிடவில்லை. உன் ஏஜண்டிடமிருந்து அவருக்கு ஏதோ பத்திரிகை தேவையாம். அதற்காகத்தான் கூப்பிட்டார். நீ இப்படி நடுங்கி விட்டாயே!'' என்ருன் நண்பன். இச்சம்பவத்தை நான் எப்படி மறப்பது?

மு. சிவம்,
ராஜபாளையம்.

தேரும்
திருவிழாவும்



யாஊே என்ருலே குழந்தைகளுக்கு குதூகலம். உல்லாசப் பொழுதுபோக்குக்கு ராட்டினங்கள். முன்னதாக இருப்பது சோம்பேறி ராட்டினம்; பின்னர் இருப்பது ரங்க ராட்டினம்.



பாமரர்களும் கல்வி கற்றவர்களும், பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்றுகூடி நடத்தும் விழாக்கள் சமுதாயத்தின் உயிருக்கு உயிர். பூவும் காயுமே பிரதானம் என்று இலைகளை எல்லாம் பறித்துவிட்டால், சீக்கிரத்திலேயே செடி உலர்ந்துபோய்விடும். மகிழ்ச்சிக்குரிய விளையாட்டுகளையும் விழாக்களையும் நீக்கிவிட்டால், சமுதாய வாழ்க்கை வெறும் போட்டியிலும் துன்பத்திலும் சிக்கிக்கொண்டு அழிந்து போகும்.

விழாக்களும், கூத்துக்களும், ஆடல் பாடலும், தேரும் திருநாளும், பூசைகளும் உற்சவங்களும் சமுதாய மகிழ்ச்சிக்கு வேண்டிய அவசியமான சாமக்கிரியைகள். நம் விழாக்கள் அறிவீனத்தினாலோ, மூடபக்தியினாலோ ஏற்பட்டவை அல்ல. சமுதாய வாழ்க்கைக்கு அவசியமான சிறந்த சாதனங்கள்.

—ராஜாஜி.



மயிலாப்பூர் அதிகாரநந்தி சேர்வை கண்கொள்ளாக் காட்சியாகும். முன்புறத்தில் அறுபத்திமூவர் பவனி. இந்தியாவிற்கு சமீபத்தில் விஜயம் செய்த ரஷ்யப் படப்பிடிப்பாளர்கள் இந்த உற்சவக் காட்சிகளை எல்லாம் படமெடுத்திருக்கிறார்கள். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புனித ஏப்ரல்

வி. ஆர். ராதாகிருஷ்ணன்

ஏப்ரல் முதல் தேதியை 'முட்டாள் தினமாக' ஐரோப்பியர்கள் கொண்டாடுகின்றனர். பெரிய மனிதர்களை 'பொய் விருந்தி'ற்கு அழைத்து ஏமாற்றுவார்கள். 'நான் ஒரு முட்டாள்' என்று ஸ்டாம்பு செய்து மற்றவர்களுக்குத் தெரியாமல் சட்டையில் குத்தி விடுவார்கள். ஐரோப்பிய முறையைப் பின்பற்றி நம் நாட்டிலும் இம்மாதிரி ஏப்ரல் முதல் தேதி அன்று செய்யும் வழக்கம் சில நகரங்களில் இருந்து வந்தது.

ஆனால் பாரத நாட்டின் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் மிகவும் விசேஷம் பொருந்தியதாக ஏப்ரல் மாதம் விளங்குகிறது.

அது மாத்திரமல்ல, தமிழர்களின் வருஷப் பிறப்பு பண்டிகை இம்மாதம்தான் வருகிறது. அநேகமாக தெலுங்கு வருஷப் பிறப்பும் இம்மாதம்தான் வரும். சாதாரணமாக கம்பெனிகளும் வியாபாரிகளும் புதுகணக்கை இம்மாதத்தில் ஆரம்பிக்கின்றனர். நாம் கடைக்காரர்களுக்குப் பாக்கிக் கொடுக்க வேண்டியிருந்தால் இவ்வாண்டு கணக்கை மார்ச் மாதத்தோடு முடித்து, ஏப்ரல் மாதத்தில் ''புதுகணக்கு எழுத வேண்டும்; தயவு செய்து பாக்கியைக் கொடுத்து விடுங்கள்'' என்று நச்சரித்து விடுவதை பலரும் அனுபவிக்காமலில்லை.

சர்க்கார் கூட தங்கள் வரவு செலவுகளை இம்மாத முதலிலிருந்துதான் புதிதாகத்துவக்குகின்றனர். அதனால்தான் எல்லா ராஜ்ய சர்க்கார்களும் யூனியன் அரசாங்கமும் தங்கள் 'பட்ஜெட்டை' மார்ச் மாதமே



ஜாலியன் வாலாபாக்கிலுள்ள சுவர். குண்டு காயங்களை சுவரில் காணலாம்.

சட்ட சபைகளின் சம்மதத்திற்குச் சமர்ப்பிக்கின்றனர்.

தமிழக ஆலயங்களில் விசேஷ திருவிழாக்கள் இம்மாதத்தில் நடைபெறுகின்றன. மாணவ மாணவிகள் படித்து பரீட்சை எழுதி, ஓய்வு எடுத்துக் கொள்ளும் மாதமும் ஏப்ரல்தான்! இப்பொழுது கிராம சேவைக்காக மாணவர்களைத் திரட்டி இம்மாதத்தில் முகாம்கள் பயிற்சி அளிக்கின்றனர்.

இவ்விதம் பல வழிகளிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற ஏப்ரல் மாதம், சுதந்திரப் போராட்ட சரித்திரத்திலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

அகில இந்திய ரீதியில் சத்தியாகிரக இயக்கத்தை மகாத்மா காந்தி துவக்கிய மாதம் ஏப்ரல்! முதலாவது உலக மகா யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு காந்திஜி மனப்பூர்வமாக உதவி அளித்து ஒத்துழைத்தார். யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவின் விடுதலைக்கு பிரிட்டிஷார் வழிகோலுவார்கள் என்று நம்பினார் காந்திஜி. ஆனால் யுத்தத்தில் வெற்றி பெற்ற பிரிட்டன், இந்திய தேசிய இயக்கத்தை அடியோடு ஒழித்துக் கட்டும் நோக்கத்தோடு அடக்குமுறை அவசர சட்டங்களை அவசர மவசரமாக அமலுக்குக் கொண்டு வந்தது. ரௌலட் சட்டம் அம்மாதிரி வந்த ஒரு அவசர சட்டமாகும். மக்களின் சாதாரண உரிமைகளைக்கூடப் பறிக்கும் பயங்கரமான சட்டம் அது. இதை மிதவாதிகள்கூட கடுமையாகக் கண்டித்தனர் என்றால் இந்த சட்டத்தைப்பற்றி வேறு என்ன சொல்லவேண்டும்?

ஜெயங்கொண்ட இறுமாப்பினால் இந்தியர்களின் ஒன்றுபட்ட கோரிக்கைகளை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் அலட்சியம் செய்தனர். இந்த கொடுமைமிக்க பயங்கர அவசரச் சட்டத்தை எதிர்த்து நாடெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டுமென்று காந்திஜி விரும்பினார். அப்பொழுது அவர் சென்னைக்கு வந்து, ராஜாஜி போன்ற மற்ற தலைவர்களுடன் கலந்து பேசி ஏப்ரல் 6-ம் தேதி அகில இந்திய ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்று அறிக்கை ஒன்று வெளியிட்டார்.

ஆனால் நிலைமை முற்றிலும் தங்களுக்கு எதிராக இருப்பதைக்கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் ஆத்திரமடைந்தது.

அமிருத சரஸில் ராமலீலா கொண்டாடுவதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் கூடியிருந்தனர். நிராயுதபாணிகளான பாமரமக்கள் மீது ஏப்ரல் மாதம் 13ம் தேதி ஜெனரல் டயர் என்ற கொடுங்கோலன் பீரங்கிப் பிரயோகம் செய்து நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று விட்டான். "சுட்டேன்; சுட்டேன்; கடைசி குண்டு இருக்கும் வரை சுட்டேன்" என்று அகம்பாவத்தோடு கொக்கரித்தான் அந்த ஆணவக்காரன்!

பிரிட்டிஷ் கட்சியாளர்களின் இந்த அடக்குமுறையினால் 1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதி இந்தியாவில் 'காந்தி சகாப்தம்' அகில இந்திய ரீதியில் ஆரம்பமாயிற்று என்று சொன்னால் மிகையாகாது. எல்லா இடங்களிலும்கடைகள் மூடப்பட்டன: தொழிலாளர்கள்வேலை நிறுத்தம் செய்தனர்; கோர்ட்டுகளுக்கு வக்கீல்கள் வரவில்லை; மாணவர்கள் பள்

ளிக் கூடங்களைப் பகிஷ்கரித்தனர்.

பஞ்சாபில் இந்த ஹர்த்தால் பரிபூர்ண வெற்றியாக நடைபெற்றதைக் கண்டு, ஆட்சியாளர்கள் கலக்கமுற்றனர். ராணுவத்தில் பெரும்பாலோர் பஞ்சாபிகள். பிரிட்டிஷார் தங்களிடம் அவர்கள் மிகவும் விசுவாசமாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்தனர்.

சுதந்திர வேட்கையை ஒடுக்கிவிடலாமென்று கனவு கண்டார்கள். ஜாலியன்வாலாபாக் சம்பவம் தூங்கிக்கிடந்த இந்திய மக்களை விழிப்புறச் செய்துவிட்டது. மகாகவி தாகூர் தனக்கு பிரிட்டிஷார் அளித்த 'சர்' பட்டத்தை உதறி எறிந்தார். சென்னையில் பிரபல வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் பணியாற்றிய ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யரும் தனது 'சர்' பட்டத்தை உதறித்தள்ளினர். இப்பட்டங்கள் 'அடிமைச் சின்னம்' என்று ஊரறிய கூறிவிட்டார்கள் பேரறிஞர்கள்.

அதற்குப்பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 6-ம் தேதியிலிருந்து 13-ம் தேதிவரை தேசீய வாரம் என்று காங்கிரஸ் கொண்டாடி, சுதந்திர இயக்கத்தைக் கட்டி வளர்த்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் அடுத்த கட்டம் உப்பு சத்தியாகிரகமாகும். இந்த சத்தியாகிரகம் ஆரம்பம் ஆகியது ஏப்ரல் மாதம்தான்! 1930-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ம் தேதி சபர்மதி ஆச்ரமத்திலிருந்து புறப்பட்டார் காந்திஜி. ஏப்ரல் 5-ம் தேதி தண்டியை அடைந்தார். 6-ம் தேதி உப்பை அள்ளினர். அரசாங்கம் அவரை கைது செய்தது. நாடெங்கும் உப்பு சத்தியாகிரகம் அன்றே ஆரம்பமாகி விட்டது.



ஜாலியன் வாலாபாக்கிலுள்ள கிணறு. டயரின் குண்டுக்குப் பயந்து இதில் விழுந்து மாண்டவர் அநேகர்.

சுதந்திரமடைந்த பிறகும் நம் நாட்டில் மற்றொரு புரட்சிகரமான நிகழ்ச்சி இம்மாதம் நடந்துள்ளது.

அரசியல் சுதந்திரமடைந்துள்ள இந்தியாவில் பொருளாதார முன்னேற்றமும், சமத்துவமும் இல்லாத அரசியல் சுதந்திரம் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்க முடியாதென்பதை உணர்ந்துதான் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற முயலுகின்றனர். 1951-ம் ஆண்டு ஏப்ரலில்தான் முதல் ஐந்தாண்டு திட்டம் துவக்கப்பட்டது. இந்த ஆண்டு ஏப்ரலில் முதல் ஐந்தாண்டு திட்டம் முடிவடைந்து, இரண்டாவது ஐந்தாண்டு திட்டமும் ஆரம்பமாகிவிட்டது.

அரசாங்க முயற்சிகளினால் மாத்திரம் பொருளாதார விடுதலை கிட்டிவிடாது. இதை காந்திஜி பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறார். சட்டங்கள் செய்து மாத்திரம்

சமுதாய அமைப்பை மாற்றி விட முடியாது. சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் எண்ணங்களும், குணங்களும் மாற வேண்டும். சட்டம் மனித உள்ளத்தைத் தொட முடியாது. ஆகவே மனித உள்ளத்தை மாற்ற ஒரு இயக்கம் வேண்டும். இக்கருத்தை காந்திஜி வற்புறுத்தியுள்ளார். இத்துறைகளில் காந்தீய கருத்துகளை நடை முறையில் நிறைவேற்றும் சக்தி படைத்த புரட்சி ஒன்றும் ஏப்ரல் மாதத்தில்தான் உதயமாயிற்று.

1951–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம்தேதி இப்புதுமைப் புரட்சி பூத்திட்டது.

கடந்த ஐந்தாண்டுகளிலே பொங்கி எழுந்த இப்புதுமைப் புரட்சி நாடெங்கும் வேகமாகப் பரவி வருகிறது.

இப்புரட்சி உதயமான இடம் தெலங்கானுவில் போச்சம் பள்ளி என்ற சிறிய கிராமமாகும்.

அங்கு கம்யூனிஸ்டுகள் புரட்சி என்ற பெயரில் கொலை, கொள்ளை முதலிய அக்கிரமங்களில் ஈடுபட்டனர். இவர்களை ஒடுக்க அடக்குமுறை கையாளப்பட்டது.

இச்சூழ் நிலையில்தான் காந்தி வழியை உண்மையாகவே உணர்ந்து பின்பற்றும் உத்தமர் விநோபா தெலங்கானுவிற்கு விரைந்தார் கிராமம் கிராமமாக நடந்தே சென்றுர் அவர். அஹிம்சை தத்துவங்களை போதித்தார்: அன்பு மார்க்கத்தை உபதேசித்தார்.

''ஜமீன்தார்களின் கைக்கூலி, முதலாளிகளின் ஏஜெண்ட், மோசக்கார சாமியார்'' என்று ஏசினர் கம்யூனிஸ்டுகள். ஆனுல் இவர் சற்றும் மனந் தளரவில்லை.

போகும் வழியிலே போச்சம் பள்ளி என்று ஓர் கிராமம். அங்கே கூட்டத்தில் கூடியிருந்த ஹரிஜனங்கள், ''உழைத்து வாழ தயாராக இருக்கிறேம். நிலம் வேண்டும்'' என்று விநோபா விடத்தில் கேட்டார்கள்.

''இவர்களுக்கு நிலம் வேண்டுமாம். இருப்பவர்கள் தந்து உதவக் கூடாதா?'' என்று அங்கே கூட்டத்திலிருந்தவர்களைக் கேட்டார் விநோபா. ''நூறு ஏக்கர் தருகிறேன்'' என்று அங்கேயே எழுதி கையெழுத்திட்டும் கொடுத்து விட்டார் ராமச்சந்திர ரெட்டியார் என்ற மிராசுதார்.

அன்றே நிலமில்லாதவர்களுக்கு நிலத்தைப் பங்கு செய்து கொடுக்கும் புரட்சி உதயமாகிவிட்டது. இது நடந்தது ஏப்ரல் மாதம்தான்.

இது நடந்ததும் ஏப்ரல் மாதம்தான்.

''உங்களை நிலம் கேட்க என்னைத் தூண்டும் ஈசன் உங்களையும் நிலம் கொடுக்கத் தூண்டுவான்'' என்ற நம்பிக்கையோடு நாடெங்கும் நடந்தே சென்று நாற்பத்தெட்டு லக்ஷம் ஏக்கர் நிலங்களை வாங்கி, விவசாயிகளிடையே விநியோகித்து வரும் விநோபா, தமிழகத்திற்கு அடுத்த மாதம் வருகிருர்.

அவரது புனித தரிசனத்தால் நாமும் புனிதமடைவோம்! புனித ஏப்ரலில் அவர் காட்டும் வழியைப் புரிந்து கொள்ள முயலுவோமாக! ★

தமிழ் இலக்கியம்

எஸ். நடராஜன். பி. ஏ.

நமது தமிழ்மொழி ஈடு இணை யற்றது. மிகத் தொன்மை வாய்ந்தது. அகஸ்தியர், பொதிய மலைக்குப் போகும்படி உத்திரவிடப்பட்டபோது, ''தென்பூமி தமிழ்பூமி என்கிறீர்களே, நான் பாஷை தெரியாமல் அந்த ஜனங்களுடன் எப்படிப் பழகுவேன்?'' என்று சிவ பெருமானைக் கேட்டாராம். உடனே சிவபெருமான் அகஸ்தியருக்கு தமிழ் கற்பித்தாராம்.

முருகப் பெருமான்தான் தமிழைக் கற்பித்தவர் என்றும் சொல்வதுண்டு. பௌத்தர்கள் அவலோகிதன் என்ற பௌத்த ஞானிதான் அகஸ்தியருக்கு தமிழ் கற்பித்தார் என்று சொல்கிறார்கள்.

தொன்மையானது

தமிழ், வேத காலத்திற்கும் முற்பட்டது என்று நிரூபிப்பதற்கான ருஜுக்களும் இருக்கின்றன. 'அகஸ்தியர் பொதிய மலையில் இருந்துக்கொண்டு சங்கம் வளர்த்தார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இலக்கணமும் கொண்டதுதான் 'அகத்தியம்' என்பது. இது வெகு காலத்திற்கு முன்பே வழங்காமல் போய்விட்டது. அகத்தியம் இன்று இல்லாவிட்டாலும் அகஸ்தியர் தமிழுக்காக செய்த சேவையை யாரும் மறக்க மாட்டார்கள்.

ராவணன் ஒருசமயம் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வர திட்டமிட்டானும். ''தமிழ் நாட்டின் மீது படையெடுக்கு முன் பொதிய மலைக்கு வந்து என்னை வென்றுவிட்டுப் போய்விட வேண்டும்'' என்ற நிபந்தனையையும் அகஸ்தியர் விதித்தார். போட்டி இதுதான். கல்லும் உருகப் பாட வேண்டும். முனிவரைமுதலில் பாடும்படி ராவணன் கேட்டுக் கொண்டான். முனிவர் பாடினார். கல்உருகிற்று. பின்னர் ராவணன் பாடினான். உறுகியது முன்

தமிழ் வளர்த்த அகஸ்தியர்



போல இறுகிக் கல்லாகிவிட்டது. ராவணன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, தமிழ் நாட்டின் பக்கம்கூட பார்க்காமல் போய் விட்டானாம். அகஸ்தியருக்கு தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையிபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாபரன், அவினையன், காக்கை பாடினியர், நற்றத்தன், வாமனன் எனப்பன்னிரு மாணாக்கர்கள் இருந்ததாகவும், அவர்தம் பேரைக்கொண்டு வெவ்வெறு பன்னிரண்டு இலக்கணங்களும், அனைவரும் ஒன்று சேர்ந்து புறப்பொருட் பன்னிரு படலமென ஒரு நூலும் இயற்றினதாகக் கூறுவர். இதில் தொல்காப்பியம் ஒன்றே நமக்கு கிடைத்துள்ளது.

பழமையான இலக்கணம்

இந்தியாவில் வழங்கும் வேறு எந்த மொழிக்கும் 'தொல்காப்பியம்' போல பழமையான இலக்கணமே கிடையாது. தொல்காப்பியத்தின் வயது 2000 வருஷங்களுக்கு மேல் இருக்கும் என்று கூறுகிறார்கள்.

ஒரு பாஷைக்கு பழைமை என்ற பெருமைமட்டும் போதாது. வளர்ச்சி அடையும் உரிமையும் வேண்டும். அந்த வகையில் தமிழ்மொழி நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்தே வருகிறது.

தமிழுக்கே தனிப் பெருமையளிக்கும் "ழ" என்ற எழுத்து வேறு எந்த பாஷைகளிலுமே கிடையாது. தமிழ் மொழியின் பெருமை யெல்லாம் எண்ணற்ற கவிதைகளில், செய்யுள்களில், பாசுரங்களில் ஒளிந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு செல்வம் இருக்கிறதென்பதை தமிழர்கள் இப்போது தான் அறிந்து

தமிழன்னையின் ஆபரணங்கள்

கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். (இதற்கான சேவை செய்து வருபவர்களில் முக்கியமாக, கி. வா. ஜகந்நாதன். ஆர். பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசனார், பி. ஸ்ரீ ஆகிய இவர்களைக் குறிப்பிட வேண்டும்).

எட்டுத் தொகை!

தொல்காப்பியத்திற்கு விளக்கம் எழுதிய உரையாசிரியர்கள் 'தொகையும் பாட்டும்' என்று குறிப்பிட்டு இடை சங்ககாலக்கவிதைகள் என்று எழுதியுள்ளனர். தொகை என்பது இலக்கிய சங்கிரகமாகும். அவைகள் எட்டு.

(1) கலித்தொகை, (2) பரிபாடல். (3) ஐங்குறுநூறு, (4) பதிற்றுப்பத்து, (5) புறநானூறு, (6) அகநானூறு, (7) நற்றிணை, (8) குறுந்தொகை.

கலிப்பா என்பது மேனாடுகளில் 'ஸானெட்' என்று வழங்கப்படுவதை ஒத்தது. பரிபாடல் என்பது நாடக மேடையில் நடத்தப்படும் 'ஒபேரா' என்ற சங்கீத அமைப்பு கொண்டது. ஐங்குறு நூறு 5 வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்ட 500 செய்யுட்களைக் கொண்டது. எதுகை இல்லாத செய்யுள்ளாக இவையுள்ளன. பதிற்றுப் பத்து, பத்து சேர மன்னர்களைப் பாராட்டும் கவிதைகளைக் கொண்டது. இதில் முதல் 10 செய்யுள் தொகுதியும் கடைசி 10 செய்யுள் தொகுதியும் கரையானுக்கு இரையாகி விட்டன.

அகநானூறு, புறநானூறு ஒவ்வொன்றும் 400 செய்யுட்களைக் கொண்டவை. மன்னர்கள், படைத்தலைவர்கள், கொடை வள்ளல்கள் இவர்களுடைய புகழ்கள், சாதனைகள் இவைபற்றியெல்லாம் இதில் காணலாம். இவை நாடகத்தில் உபயோகிக்கும் (ஸாலிலோகி) தனிமொழி முறையில் அமைக்கப்பட்டுள்ளன. நற்றிணையில் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதற்கான வழி முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. 4 முதல் 8 அடிகளைக் கொண்டது குறுந்தொகை.

ஐவகை நிலத்திற்கான தெய்வங்கள்

ஆதிகால கவிதைகள் அகம் என்றும் புறம் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

பத்துப் 'பாடல்'

சங்ககாலத்திலேயே விளக்கமாக எழுத வேண்டும் என்ற ஆவல் இருந்திருக்க வேண்டும். இதனுல்தான் 100 வரிகளுக்கு மேற்பட்ட செய்யுட்கள் காணப்படுகின்றன. இவைகளைப் பத்துப் பாட்டு என்று வழங்குகிருர்கள். இவைகளில் ஐந்து, கலை, இலக்கியம் இவைகளை ஆதரித்த வள்ளல்களை வாயார வாழ்த்துவதாகும். ஆற்றுப்படுத்தும் முறை, அதாவது 'அந்த இடத்துக்குப்போனுல் உனக்கு பல சௌகர்யங்கள் கிடைக்கும்' என்று வழிகாட்டும் தோரணையில் செய்யுள்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. முருகனிடம் ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப் படையை செய்தவர் நக்கீரர். மற்றபாடல்கள்பொருநாருற்றுப்படைசிறுபாணுற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, முல்லைபாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிபாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம். பட்டினப்பாலை உள்பட இதர நான்கு பாட்டுகள் குறிஞ்சி, பாலை, முல்லை,நெய்தல் என்கிற நான்கு துறைகளைப் பற்றியுள்ளன. நெய்தல் பற்றியதுதான் நெடுநல்வாடையாகும்.

பதினெண் கீழ்கணக்கு

பதினெண் கீழ்கணக்கு எனப்படும் இவை தனிப்பட்ட கவிகள் செய்த பாடல்களின் தொகுப்பு. புத்தமதம், ஜைன மதம் தலைதூக்கியதன் விளைவாக நீதிநூல்களையே கவிகள் கவிதைகளாக உருவாக்கினர். நீண்டிருக்கக் கூடிய பாட்டுகள் வெண்பாக்களுக்கு இடமளித்தன. இவை நாலடியார், நான் மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னு நாற்பது, கார் நாற்பது,களவழி நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்ச மூலம், முது மொழிக்காஞ்சி, ஏலாதி, ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திருக்குறள், கைநிலை, (ஆக 18)

திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் இம்மூன்றும் அற்புத ஔஷதங்களின் பெயர்கள். நல்வாழ்க்கை நடத்த இந்த செய்யுட்களில் கூறப்படும் விஷயங்கள் மருந்து போன்றவை. என்ற கருத்தை விளக்கவே இப்பெயர் அறிவிக்கப் பட்டுள்ளன. திரிகடுகம், சுக்கு, மிளகு திப்பிலி கொண்டது. சிறுபஞ்சமூலம், கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுண்வேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர், ஆகிய ஐந்து வேர்கள் கொண்டது.

நாலடியார் 800 ஜைன முனிவர்களால் ஆளுக்கொன்ருக இயற்றப்பட்டதென்பர். இதில் 400போன இடம் தெரியவில்லை. மிஞ்சியது 400தான்.

திருக்குறள்

திருவள்ளுவர் இயற்றிய குறளில் முதல் பகுதி அறம் (தருமம்) பற்றியும், இரண்டாவது பகுதி பொருள் (அர்த்தம்) பற்றியும், மூன்ருவது பகுதி காதல் (காமம்) பற்றியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நான்காவதான மோட்சம் (வீடு) பற்றிய விஷயங்களை வள்ளுவனர் அறத்துப்பாலிலேயே கொண்டுவந்து விட்டார். காமத்துப்பாலில் விவரிக்கப்பட்டுள்ளது இதர காமசாஸ்திரங்களிலுள்ளதைப்

போல் அல்ல. அன்பு, காதல் விவரிக்கப்பட்டுள்ளது.

காவியங்கள்

தமிழிலுள்ள பஞ்ச காவியங்கள் சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சிலப்பதிகாரம். இவை ஐந்தும் தமிழ்த்தாயின் ஆபரணங்களாக விளங்குகின்றன. வளையாபதி, குண்டலகேசி இவை இரண்டையும் பற்றி கதை இருக்கின்றனவேயொழிய நூல் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த ஐந்தைத் தவிர, யசோதர காவியம், உதயணன் கதை, நாககுமார காவியம், சூளாமணி, நீலகேசி போன்ற சிறு காவியங்கள் இருந்தன.

பின்னர் ராமாயணம், மகாபாரதம் வெண்பாக்களில் அமைக்கப்பட்டன. இந்தபழங்கால ராமாயணம் நமக்குக் கிடைக்கவில்லை. பெருந்தேவனுர் பாரதத்தைப் பாடினுர்.

பக்தி வெள்ளம்

சங்க காலத்தில் பிரதானமாக விளங்கிய காதல், பிற்காலத்தில் பக்தி மயத்திற்கு இடம் கொடுத்தது. திருமூலர், ஆண்டாள், பட்டினத்தார், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பக்தி ரஸ பாடல்களைப் பாடி குவித்துவிட்டனர். இப்பாடல்கள் வெண்பாக்களாகவும் விருத்தங்களாகவும் பெரும்பாலும் இருக்கின்றன.

கம்பராமாயணம்

மத்யகால சோழர் ஆட்சியின் பின்பகுதியில் தோன்றிய நூல்களில் சிறந்தது கம்பராமாயணம். கம்பராமாயணத்தில் கோசல நகர் அயோத்தி நகர்களின் வருணனையைப்பற்றி கூறியிருந்தாலும் அவை உண்மையில் கம்பர் காலத்து சோழ நாட்டின் வருணனையேயாகும்.

மத்யகால சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் உரையாசிரியர்கள் பலர் இருந்திருக்கின்றனர். இளம்பூரணர், நச்சினுர்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், சேனுவரையர் முதலியவர்கள் தமிழிலுள்ள முக்கியமான நூல்களுக்கு உரை எழுதியவர்கள், இவர்களின் நூல் இல்லை என்ருல் அந்த நூல்களின் பெருமையை அவ்வளவாகத் தெரிந்து கொள்ள முடியாது.

பொற்காலம்

மூன்ருவது கடைச்சங்க காலம்தான் தமிழ் மொழியின் பொற்காலம் என்று கூறப்படுகிறது.

கி.பி. 10-வது நூற்ருண்டின் பின் பகுதியிலிருந்து உத்தேசமாக 200 ஆண்டுகள் பொற்காலம் எனலாம். கோயில்களும் தமிழ் இலக்கியங்களும் அக்காலத்தில் பெருகின. ராஜராஜசோழன், நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு தேவாரத் திருமுறைகளை செப்புத்தகட்டில் எழுதுவித்தான். அன்றுமுதல் சிவாலயங்களில் தேவாரப்பாராயணம் தொடங்கியது.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம், ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி, ஒட்டக் கூத்தரின் தக்கயாக பரணி மற்றநூல்கள், தண்டி அலங்காரம் என்கிற இலக்கண நூல் யாப்பருங்கலக் காரிகை என்ற நூல் எல்லாம் இக்காலத்தில் ஏற்பட்டவையே.

பதினைன்காம் நூற்ருண்டில் கவி காளமேகம் வாழ்ந்தார்.

இவர் காலத்தில் இரட்டை விருத்தம் என்ற முறை பிரபலமாகி இருந்தது. சிந்தும் அப்போது பிரபலமாகி இருந்ததாகத் தெரிகிறது. திருவாழிப்பினன் குட்டன் என்பவருடைய சிந்துகள் பிரபலமானவை. விஜயநகர ஆட்சியில் தமிழும் ஆதரிக்கப் படலாயிற்று. 16 வதுநூற்றுண்டில் அதிவீரராம பாண்டியன் நைடதத்தை தமிழில் மொழிபெயர்த்தார். ரேவனசித்தர் என்பவர் இந்த நூற்றுண்டில்தான் தமிழில் அகராதியைமுதன்முதலில் வெளியிட்டார்.

மேற்கு நாட்டினரில் சிலர் தமிழில் சிரத்தை கொண்டு தமிழைக் கற்று, நூல்கள் எழுத ஆரம்பித்தனர். தமிழ்வசன நடை அபிவிருத்திக்கு காரணஸ்தர்கள் கிறிஸ்துவ பாதிரிகள் என்று சொல்வதில் தவறு இருக்க முடியாது. 18-வது நூற்றுண்டில் சிவஞான ஸ்வாமிகள் வாழ்ந்தார். இக்காலத்தில் ராமநாடகம், நாடோடிப்பாடல்களான பள்ளுகள், குறவஞ்சிகள், நொண்டிச் சிந்துகள் எல்லாம் ஏற்பட்டன. 19 நூற்றுண்டின் பிற்பகுதியில் திருவருட்பா இயற்றிய ராமலிங்க ஸ்வாமிகள் வாழ்ந்தார். எழுதும் தமிழ் வேறு, பேசும்தமிழ் வேறு என்று இருந்த காலம் போய் பேசக்கூடிய தமிழிலேயே எழுதலாம் என்ற நிலையை ஏற்படுத்தியவர்கள் திரு. வி. க., டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ஆகியோராவர்.

பாரதியாரின் கவிதைகள் தமிழ்நாட்டில் ஒரு விழிப்பை ஏற்படுத்தியது. புது சகாப்தம் ஏற்படுள்ளதை மக்களுக்கு உணர்த்தியது.

இந்த நூற்றுண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து பெரும் புஸ்தகமே எழுதலாம்.

இந்திய விமானப்படை!

இந்திய விமானப் படையின் இருபத்தி மூன்றுது வருஷாந்திர விழா ஏப்ரல் முதல் தேதி கொண்டாடப்பட்டது. இந்தியர் ஒருவர் இப்படைக்குத் தலைமை வகிக்கத் தொடங்கி இரண்டாண்டுகளாகி விட்டன.

1927 லேயே ஸான்ட்ஹர்ஸ் கமிட்டி விமானப் படையை ஏற்படுத்த வேண்டுமென்று கூறியிருந்த போதிலும் 1933 ஏப்ரல் முதல் தேதிதான் உருவாகியது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது இந்திய விமானப்படை சிறியதாகவே இருந்தது. 1941-ல் இரண்டு ஸ்குவாட்ரன்கள் ஏற்படுத்தப்பட்டன. பர்மா போர் முனையில் இந்திய விமானப்படைக்கு நல்ல பெயர் இருந்து வருகிறது. யுத்த முடிவில் இப்படையில் 9 ஸ்குவாட்ரன்கள் இருந்தன.

நாடு சுதந்திரம் பெற்றபின் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய ஏராளமான மக்களைக் காப்பாற்றிக் கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பும், காஷ்மீர் பாதுகாப்புப் போராட்டப் பொறுப்பும் அதன் தலையில் சுமந்தன.

நாட்டில் பல தடவை வெள்ளம், பூகம்பம், பஞ்சம முதலிய இயற்கை அனர்த்தங்கள் விளைந்தபோது மின்னல் வேகத்தில் இப்படை பரோபகார சேவை செய்து வந்திருக்கிறது.

இயற்கை அன்னையின் சௌந்தரியத்தை பரிபூரணமாகப் பெற்றது காஷ்மீரம். தனி மனிதனின் எதேச்சாதிகார ஆட்சியையும் நில பிரபுத்துவ சுரண்டல் முறையையும் எதிர்த்து காஷ்மீர மக்கள் நடத்திய போராட்டம் மகத்தானது.

காஷ்மீரின் ஜனத்தொகையில் மிகப் பெரும் பான்மையோர் முஸ்லிம்கள். இதை வியாஜ்யமாக வைத்துக்கொண்டு பாகிஸ்தான் காஷ்மீரத்தின் மீது தன் திருஷ்டியைச் செலுத்த ஆரம்பித்தது. பலாத்காரத்தினால் தன் எண்ணத்தை சாதித்துக் கொண்டுவிட முடியும் என்று நினைத்து பாகிஸ்தான் காஷ்மீர் மீது படையெடுத்தது. இந்திய சர்க்கார் உடனடியாக காஷ்மீரத்திற்கு உதவியளித்திராவிட்டால் இன்று சரித்திரத்தின் போக்கே வேறு விதமாக இருந்திருக்கக்கூடும்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு காஷ்மீர் எவ்வளவு கேந்திரஸ்தானம் என்பதை இந்திய தேசப்படத்தைப் பார்த்தால் விளங்கும். காஷ்மீர் பிரச்னை விஷயமாக இந்திய சர்க்கார் எவ்வளவு பொறுமையுடனும் எவ்வளவு நியாயத்துடனும் நடந்துகொண்டிருக்கிற தென்பதை இந்த கட்டுரையைப் படித்தால் நன்கு அறியலாம்.



'மார்த்தாண்ட்'டிலுள்ள சூரியன் கோயில்
லலிதாதித்ய மன்னன் கட்டியது

இயற்கை அழகு நிரம்பிய காஷ்மீரின் பழைய சரித்திரம் பற்றி கல்ஹானர் என்பவர் எழுதிய ராஜதரங்கிணி என்கிற நூலில் ஏராளமான தகவல்கள் கிடைக்கின்றன. இந்நூல் கி. பி. 12-ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது.

த்யாகரணன், மேகவாகனன், ஜயபிதா, அவந்திவர்மா முதலிய மன்னர்கள் சிறப்புற காஷ்மீரில் ஆட்சி செலுத்தி யிருக்கின்றனர்.

லலிதாதித்யன் என்ற அரசன் தான் மிகவும் புகழ் பெற்று விளங்கியவன். நாட்டில் அமைதியை நிலைநாட்டிய பின் ஆப்கானிஸ்தான், துருக்கி இவைகளை ஜெயித்த இவன் அரசாங்கச் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தான்.

பிரசித்தி பெற்ற சீன யாத்ரீகரான ஹுவன்-ஸுவாங் இந்தியாவுக்கு வந்தபோது துர்லபவர்த்தன் என்ற அரசன் காஷ்மீரை ஆண்டு வந்தான். இலக்கியத் துறையில் காஷ்மீர் தலை தூக்கியது இக்காலத்தில்தானும். புகழ்பெற்ற வியாகரண ஆசிரியர் பதஞ்சலி காஷ்மீரில் வசித்தவர் தான்.

'கொக்கோகம்' என்ற ஆண் பெண் உறவு நூலை எழுதிய கொக்கோக முனிவரும் காஷ்மீரைச் சேர்ந்தவரே.

காஷ்மீரை ஆண்ட வசுநந்தனன் என்ற அரசன் சிருங்காரப் பிரியன். அவனுக்காகவே கொக்கோக முனிவர் இந்நூலை எழுதினர். ஹுவன்-ஸுவாங் குறிப்புகளிலிருந்து அக்காலத்தில் சமஸ்கிருதம் அரசாங்க பாஷையாக இருந்ததென்றும் குடிகள் மட்டும் பிராகிருதம் மொழியைப் பேசினர்கள் என்றும் தெரிய வருகிறது.

சரித்திர வரலாறு

14-ம் நூற்றுண்டில் தார்த்தாரிகள் படையெடுப்புக்குப் பயந்த திபேத் அரசகுமாரன் ரெண்ட்சென், காஷ்மீர் மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். இவன் நன்றியை மறந்து காஷ்மீர் அரசைக் கைப்பற்றினன். இவன் பின்னர் இஸ்லாம் மதத்தைத் தழுவினன். இதன்பின்தான் காஷ்மீரில் சுல்தான் ஆட்சி தொடங்கியது. ஜைன் உல் அபிதீன் என்ற சுல்தான் எல்லோரும் புகழும் படி அரசு நடத்தியவர். இவர் காலத்தில் ராஜதரங்கிணி, மகாபாரதம் இரண்டையும் முல்லா அகமது அல்லாமா என்பவர் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

ஹிரொடோடெஸ், டாலமி போன்ற பல கவிஞர்கள் காஷ்மீரைப் பற்றி கவிதைகள் புனைந்திருக்கிருர்கள். இவைகளே இந்நாட்டின் மீது அன்னியரைப் படையெடுத்து வரத் தூண்டின.

கி. மு. 500-வது ஆண்டில் பாரசீகத்தை ஆண்ட முதலாவது டாரியஸ் காஷ்மீரைக் கைப்பற்றினான். அசோகர், கனிஷ்கர் ஆட்சியில் அவர்கள் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது காஷ்மீர். காஸா என்ற மலைஜாதியினர் படையெடுத்துக் கைப்பற்றிய பின்னரே காஷ்மீரம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

அக்பர் ஆட்சிக்குப்பின் காஷ்மீர் ஆப்கன் ஆட்சியில் பல வருஷங்கள் இருந்தது. 1819-ல் காஷ்மீரை சீக்கிய அரசர் ரஞ்சித்சிங் கைப்பற்றினர். பிரிட்டிஷாருடன் போரிட்டு அதற்கு நஷ்டஈடாக காஷ்மீரை சீக்கியர்கள் பிரிட்டிஷ்காரர்களுக்கு கொடுத்து விட்டனர். டோக்ரா என்ற ரஜபுத்ர வம்சத்தினனான குலாப்சிங் என்பவன் ரஞ்சித்சிங்கை முறியடிக்க பிரிட்டிஷாருக்கு உதவியதினால் பிரிட்டிஷார் காஷ்மீரை அவனுக்கு 75 லட்ச ரூபாய்க்கு விற்று விட்டனர். இதற்குதான் அமிருதசரஸ் ஒப்பந்தம் என்று பெயர். இந்த குலாப்சிங்கின் வம்சவழி வந்த ஹரிசிங் 1925-ல் அரசனானார்.

காஷ்மீரின் விஸ்தீரணம் 84,471 சதுர மைல்கள். ஜனத்தொகை 40,21,616 பேர். 9,000 கிராமங்கள் அடங்கியது. விவசாயமே பிரதானமான தொழில். கம்பளி நெசவும் பிரதான தொழில் என்று சொல்ல வேண்டும்.

ஸ்திரீகள் நல்ல உழைப்பாளிகள்

காஷ்மீரிப் பெண்கள் நல்ல உயரம், நல்ல அழகு; நல்ல தேகக்கட்டு. ஆனால் அவர்கள் நிலைமை, உழைத்தால் தான் சாப்பாடு. கோஷா முறையை வெறுப்பவர்கள்.

குடும்பத்தை நடத்துவது, படகு ஓட்டுவது, வயல்களில் வேலை செய்வது இவை எல்லாம் செய்வதில் அவர்கள் நிபுணர்கள். காஷ்மீரில் பழங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. இவைகளைப் பறித்து கூடைகளில் வைத்துக் கட்டுவதில் காஷ்மீரிப் பெண்கள் மிக சாமர்த்தியசாலிகள். விருந்தினர்களை உபசரிப்பதில் காஷ்மீர் பெண்மணிகளை யாரும் மிஞ்ச முடியாது.

காஷ்மீரப் பெண்மணிகள் முஸ்லிமானாலும் சரி, ஹிந்துவானாலும் சரி ஒரே மாதிரி உடையைத்தான் அணிவார்கள். (Pheram Biram) பெரம் பிரான் என்று சொல்லப்படும் முழங்கால் அளவுள்ள அங்கி ஒன்றும் ஏயார் (Yeyar) எனப்படும் உடையையும் எல்லாரும் அணிகிறார்கள். கலியாணங்கள் எல்லாம் சாதாரணமாக குளிர் காலங்களில்தான் நடைபெறும். வெள்ளி நகைதான் அவர்கள் அதிகமாக அணிவது.

காஷ்மீரிகளின் முக்கிய உணவுப் பொருள் அரிசியும் சோளமுமே தான். மாமிசம் சாப்பிடாதவர்களே





காஷ்மீரில் விசேஷமாகக்
காணப்படும் சினர் மரங்கள்

இருக்க மாட்டார்கள். குளிர்காலம் முழுதும் எங்கும் ஒரே பனிமயம் தான். ஆகவே இக்காலத்திற்கான உணவு வகைகளை அவர்கள் முன்னதாகவே சேமித்து வைக்க வேண்டும்.

தேயிலை பானத்தில் உப்பு

காஷ்மீரிகளுக்கு நல்ல "திக்"காக டீ போட்டு சாப்பிடுவதென்றால் மிகவும் இஷ்டம். இவர்கள் உபயோகிக்கும் டீ, நாம் உபயோகிப்பது போல் அல்ல. காஷ்மீரில் கிடைக்கும் சில மூலிகைகளைக் கொண்டு இப்பானம் தயாரிக்கப்படுகிறது. பார்க்க கன்னங்கரேல் என்று இருக்கும். இதற்கு சர்க்கரை, பால் எதுவும் சேர்க்க மாட்டார்கள். ருசிக்காக ஒரு துளி உப்பை போட்டுக் கொள்வார்கள்.

ஜம்மு பெண்கள் சற்று குள்ளமாகவும் மாநிறமாகவும் காணப்படுகிறார்கள். மல்லிகைப்பூ என்றால் அவர்களுக்கு உயிர். இவர்கள் வழக்கமாகப்பாடும் பஹரி என்ற கீதங்கள் நாடெங்கும் பிரசித்தமானவை.

படகு வீடுகள்

காஷ்மீரில் படகுகளிலேயே வீடுகள் உண்டு. ஒவ்வொரு படகு வீட்டிற்கும் ஒரு பெயர் உண்டு. இப்படகு வீட்டிலிருந்து அருகிலுள்ள இடங்களுக்குச் சென்றுவர ஷிகாரா என்று சொல்லப்படும் சிறிய படகுகள் உண்டு. இந்த ஷிகாராக்களில் திண்டு தலையணை எல்லாம் இருக்கும். படகு வீட்டில் தங்குபவர்களுக்கு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 18 கட்டணம் வசூலிக்கிறார்கள். சாப்பாடு செலவும் இதில் அடங்கியுள்ளது. வீதிகளில் சாமான்கள் விற்பதுபோல வியாபாரிகள் தங்கள் சிறிய படகுகளில் சாமான்களைக் கொண்டு வந்து படகு வீட்டிற்கே விற்க வந்து விடுகின்றனர்.

காஷ்மீரத்தில் சினர் மரங்கள் இப்போது ஏராளமாக இருக்கின்றன. சினர் என்பது முன்னாளில் பாரசீகத்திற்கே உரித்தானதாம். மொகலாயர் ஆட்சி காலத்தில் ஒன்றிரண்டு சினர் மரங்கள் நடப்பட்டனவாம்.

விடுதலைப்போர்

*1928-29*ல் காஷ்மீர் மகாராஜாவின் சர்வாதிகாரம் கேட்பாரற்று நடந்து கொண்டிருந்தது. சமஸ்தானத்தின் மூன்றரை கோடி ரூபாய் வருஷ வருமானத்தில் மகாராஜாவின் சொந்த செலவுக்கு பன்னிரண்டரை லட்சம் செலவிடப்பட்டது. பொதுஜன நன்மைக்காக செலவிடப்பட்டது வருஷத்தில் இரண்டரை லட்சம் ரூபாய்களே. காஷ்மீர், மீர்பூர், ராஜெளரி ஆகிய இடங்களிலுள்ள நிலங்கள் அனைத்தும் மகாராஜாவுக்குச் சொந்தமானது. உழுது பயிரிடும் விவசாயிக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லை. இதை எல்லாம் எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர். அடக்குமுறை அமர்க்களப்பட்டது. புதிது புதிதாக அவசரச் சட்டங்கள் முளைத்தன.

*1939*ல் முஸ்லிம் மகா நாட்டின் விசேஷக் கூட்டத்தில் அதை தேசிய மகாநாடு என்று மாற்றுவ

தாகவும், சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி ஏற்படவேண்டும் என்று விரும்புபவர்கள் அவ்வளவு பேர்களும் ஜாதிமத வித்யாசமின்றி இதில் சேரலாம் என்ற தீர்மானம் பிரேரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1939ல் இறுதியில் பண்டித நேரு காஷ்மீருக்கு விஜயம் செய்தார். அவருக்கு தேசீய மகாநாடு மகத்தான வரவேற்பு அளித்தது. அதுமுதல் காஷ்மீரத்திற்கும் தேசீய காங்கிரஸுக்கும் தொடர்பு அதிகரித்தது.

இந்தச் சமயத்தில் ஜின்னுவின் தூபம் முஸ்லிம்களிடையே வேலை செய்ய ஆரம்பித்தது. அடிப்படையில் வேற்றுமை இருந்த போதிலும் ஒரு தலைவர் என்ற முறையில் காஷ்மீர் வந்த ஜின்னுவுக்கு தேசீய மகாநாடு வரவேற்பு அளித்தது. இந்த மகத்தான வரவேற்பைக் கண்டு மருண்டு விட்டார் ஜின்னு. முஸ்லிம் மகாநாட்டின் கொடியின் கீழ் திரண்டு போராடும்படி காஷ்மீர முஸ்லிம்களை கேட்டுக் கொள்வதாக ஜின்னு பேசினர். தேசீய மகா நாட்டில் பிளவு ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட தந்திரம் இது. இதைத் தொடர்ந்து பெரும் போராட்டம் நடந்தது. வகுப்பு வாதத்தை கிளறிவிட்டு பொதுஜன இயக்கத்தை குழி தோண்டிப் புதைக்க சர்க்கார் முயன்றது. ஆனுல் பலிக்கவில்லை.

1947 ஜூலையில் காந்திஜி காஷ்மீரத்திற்கு விஜயம் செய்தார். தேசீய மகாநாட்டின் சாதனைகளையும், வகுப்பு ஒற்றுமை நிலவுவதையும் பாராட்டி அவர் பேசினர்.

காஷ்மீர் மக்கள் போராட்டத்திற்கு இந்திய தேசீய காங்கிரஸ் ஆரம்பத்திலிருந்தே ஆதரவளித்து வந்திருக்கிறது. ஆனுல் முஸ்லிம் லீக் மக்களுக்கு எதிராக மன்னனையே ஆதரித்தது.

பாக் படையெடுப்பு

1947 அக்டோபர் 24ல காஷ்மீர் மீது பாகிஸ்தான் தன் பிடாரிகளை ஏவி விட்டது. பாகிஸ்தான் சர்க்கார் இதில் சம்பந்தப்படவில்லை என்றே சொல்லி வந்தது. ஆனுல் காஷ்மீரப் படையெடுப்பு பாகிஸ்தான் சர்க்காரால்தான் நடத்தப்படுகிறது என்று போரில் சிறைப்பட்டவர்கள் வாக்கு மூலத்திலிருந்து தெரிய வந்தது. கைப்பற்றப் பட்ட ஆயுதங்களில் பாகிஸ்தான் முத்திரை இருந்தது. ஹரிசிங் மகாராஜாவின் நிர்வாக யந்திரம் நிலைகுலைந்து விட்டது. தேசீய மகாநாடு காஷ்மீர் நிர்வாகத்தை ஏற்க முன் வந்தது. நிர்வாகத்தை ஏற்று சமஸ்தானத்தை நிர்வகிக்கும்படி மகாராஜா ஷேக் அப்துல்லாவைக் கேட்டுக் கொண்டார். துருப்புகளை அனுப்பி உதவும்படி

காஷ்மீரில் காணப்படும் படகுகள் - ஷிகாரா எனப்பெயர்.

காஷ்மீரச் சிறுமி

மகாராஜாவும் மக்கள் சார்பில் அப்துல்லாவும் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டனர். 26வ மகாராஜா, இந்தியாவுடன் சேரும் இணைப்பு பத்திரத்தில் கையெழுத்திட்டார். அத் தினத்திலிருந்து காஷ்மீரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது.

காஷ்மீர் எந்த யூனியனில் சேர வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று இந்திய சர்கார் தெளிவாக்கி விட்டது. ஆனால் பாகிஸ்தானோ அப்பிரச்னையை மகாராஜாவே முடிவு செய்ய வேண்டும் என்றது.

ஐக்ய நாடுகள் ஸ்தாபன மேற்பார்வையில் இந்தியாவில் சேருவதா, பாகிஸ்தானில் சேருவதா என்பதை காஷ்மீர் மக்களே தீர்மானிக்கட்டும். அதற்கு இந்தியா தயார் என்று நேரு 1947 நவம்பர் 22வ லியாகத்அலிக்கு யோசனை தெரிவித்தார் அதற்கு பதிலே இல்லை. காஷ்மீரத்தில் பொதுவான வோட்டு எடுக்கும் வேலையை மேற்கொள்ளுமாறு ஐ. நா. வை இந்தியாவும் பாகிஸ்தானும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற மற்றொரு யோசனையை நேரு லியாகத்திற்கு தெரிவித்தார். அதற்கும் பதிலே இல்லை.

ஐ. நா. விடம் விடப்பட்டது

பிரச்னைதீர வசதி இல்லாமல் போகவே 1947 டிஸம்பரில் இந்தியாகாஷ்மீர்விவகாரத்தை ஐ.நா. சங்க பாதுகாப்புக் கௌன்ஸிலுக்கு கொண்டுபோயிற்று. காஷ்மீர் போரை பாகிஸ்தான்தான் நடத்துகிறது. ஒரு கமிஷனை நியமித்து இதை தெரிந்து கொள்ளலாம் என்றும், மலைஜாதியினர் பாகிஸ்தான் வழியாக வருவது தடுக்க வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியது. பாகிஸ்தான் பிரதிநிதி ஜபருல்லாகான், யுத்தத்தில் பாகிஸ்தான் சம்பந்தப்படவே இல்லை என்று ஒரேயடியாக சாதித்தார்.

கமிஷன் செய்த குளறுபடி

இதன்பின் ஐ.நா. கமிஷன் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதற்கு காஷ்மீர் கமிஷன் என்று பெயரிடாமல் இந்தியா-பாக்கிற்கான ஐ.நா.சங்க கமிஷன் என்று பெயரிடப்பட்டது. படையெடுப்பை நடத்துவது பாகிஸ்தான் என்பது இந்தியாவின் புகார். ஆனால் பாகிஸ்தானை ஆக்ரமிப்புக் கட்சியாக கருதாமல் இந்தியா-பாகிஸ்தான் இரண்டையும் ஒரே தரத்தில் ஐ. நா. கமிஷன் வைத்தது.

பின்னர் காஷ்மீர் படையெடுப்பைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று பசப்பிய பாகிஸ்தான் காஷ்மீரத்தில் தன் படைகள் ஈடுபட்டிருக்கின்றன என்பதை 1948 செப்டெம்பர் 6 வ பாதுகாப்பு கௌன்ஸிலில் ஒப்புக்கொண்டது. கமிஷன் சமர்ப்பித்த முதல் திட்டத்தின் முக்ய அம்சங்கள் (1) காஷ்மீரத்தில் யுத்தம் நிற்கவேண்டும் (2) ஜம்மு காஷ்மீரிலிருந்து

இந்தியா, பாகிஸ்தான் படைகள் வாபஸாக வேண்டும். (3) சுதந்திரமாக பாரபட்சமற்ற வோட்டெடுப்பு நடக்கவேண்டும். சமாதானத்தை உத்தேசித்து இந்தியா இதை ஏற்றது. ஆனால் பாகிஸ்தானே அனாவசியமான வாதப்பிரதிவாதங்களால் வேண்டுமென்றே காலம் கடத்திவந்தது.

கமிஷன் செய்த சில குளறுபடிகள், நிலைமையை சிக்கலாக்கிவிட்டன. இந்தியா பாகிஸ்தான் கூட்டு மகாநாடு ஆஸாத் காஷ்மீர் படையைப்பற்றி விவாதிக்கும் விஷயம் சேர்க்கப்படவேண்டும் என்பதை இந்தியா வற்புறுத்தி பாகிஸ்தான் அதை ஆட்சேபித்தால் நடைபெறாது போய்விட்டது. 'நிமிட்ஸ்' என்பவரை மத்யஸ்தராக வைக்கலாம் என்ற யோசனை கூறப்பட்டது. கமிஷன் தன்னால் எதுவும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை என்பதை அது விடுத்த அறிக்கையே வெளிப்படுத்த போதுமானது.

இந்த மத்யஸ்த யோசனையை பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லியும் யு.எஸ். ஜனாதிபதி ட்ரூமனும் ஆதரித்து அறிக்கை வெளியிட்டனர். இம்மாதிரி தலையிடுவதைக் கண்டு தான் வருந்துவதாக நேரு அவர்களுக்கு கடிதங்கள் எழுதினார்.

பின்னர் மக்நாட்டான் என்பவர் வந்தார். அவர் விசித்திரமான திட்டத்தை சமர்ப்பித்தார். இதன்படி அநியாயமாக ஆக்ரமித்த பாகிஸ்தான் சேனையும் மக்களுக்கு உதவச் சென்ற இந்திய ராணுவமும் ஒரே அந்தஸ்தில் வைக்கப்பட்டிருந்தது. இதை இந்திய சர்க்கார் நிராகரித்ததில் வியப்பில்லை,

காஷ்மீரில் பார்க்கவேண்டிய இடங்கள்

★ ஸ்ரீ நகருக்கு தனிச்சிறப்பைத் தருவது தால் ஏரி. காலை வெய்யிலில் பார்த்தால் பச்சைப் பசேல் என்று டால் அடிக்கிறது.

★ சங்கராசார்யா குன்று. இதன்மீது ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த லிங்கம் இருக்கிறது.

★ ஸ்ரீநகரிலிருந்து 180 மைல் தூரத்தில் பகல்காம் போகும் வழியில் அவந்தியூர் கோயில் இருக்கிறது. தொன்மையில் இது ஒரு பௌத்த கலாசாலையாக இருந்து பின்னர் ஹிந்து கோயிலாக மாறியுள்ளதாம்.

★ மார்த்தாண்ட் என்ற கோவிலில் மூன்று தலை விஷ்ணு காட்சி அளிக்கிறார். வராக, நரசிம்ம, மானிட அம்சங்களை மூன்று தலைகளும் காட்டுகின்றன.

★ ஷாலிமார், நிஷாத், சிஷ்மா, ஷாஹி, இவைகள் அழகிய நந்தவனங்களாகும்.

★ சார்ச்சினார்-ஏரியிலுள்ள சிறு தீவு. இளங்காதலர்கள் நிலவுக் காலங்களில் இங்கு பொழுதுபோக்க வருகிறார்கள்.

★ பகல் காம்-இங்கு குங்குமப்பூ பயிரிடப்படுகின்றது. இங்குதான் மலைப்பிரதேச சொரூபத்தை அறிய முடியும். இங்கிருந்து 28 மைலில் அமர்நாத் குகை உள்ளது.

★ ஜம்முவில் 'மண்டி என்ற இடத்தில் சோட்டா அமர்நாத் இருக்கிறது.

★ வெரிநாக், அனந்தநாக் என்ற பெயருள்ள மலை அருவிகள். வெரிநாக் அருவி இடம் நூர்ஜஹானுக்கு மிகப் பிடித்தமானதாம்.

★ ஜம்முவில் ரகுநாத்ஜி கோயில்.

★ பனிஹால் (டன்னல்) சுரங்கப்பாதை.

பின்னர் டிக்ஸன் வந்தார். அவர் முயற்சிகளும் வீணுயின.

1950-ல் காஷ்மீரில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அப்போது நேரு பேசுகையில் காஷ்மீர் விவகாரத்தை ஐ.நா.விலிருந்து இந்தியா வாபஸ் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றும், காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா.பெரும் சேவை செய்துள்ளது என்பதில் சந்தேகமே இல்லை என்றும், போர் நின்றதே ஐ.நா.வினுல்தான் என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

காஷ்மீரில் இன்னும் மூன்றில் ஒரு பங்கு பிரதேசம் பாகிஸ்தான் வசமே இருந்து வருகின்றது. பொதுஜன வாக்கெடுப்பு எடுப்பதற்காக செய்யப்பட்ட முயற்சிகளுக்கெல்லாம் பாகிஸ்தான் முட்டுக்கட்டை போட்டிருக்கிறது. இவ்வாறு பலவிதத்திலும் குற்றவாளியான பாகிஸ்தான் ஏற்கனவே உலக ஸ்தாபனமாகிய ஐ.நா.வின் பரிசீலனைக்கு உட்பட்டுள்ள காஷ்மீர் பிரச்னையை ஒரு பிராந்திய ஸ்தாபனமான 'ஸீட்டோ'வின் மகாநாட்டில் கொண்டு வந்து விவாதிக்கச் செய்தது மிகவும் நியாயமற்றது.

காஷ்மீரின் எதிர்காலம் ஐ.நா.வுக்குட்பட்ட பொதுஜன வாக்கெடுப்பு மூலம், அல்லது நேரடிப் பேச்சு மூலம் முடிவாக வேண்டும் என்று 'ஸீட்டோ' மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்தியா இந்த முடிவை தேவையற்றதாகக் கருதுகிறது. பாகிஸ்தான் ஆஜாத் காஷ்மீரிலிருந்து முதலில் தன் படைகளை வாபஸ் பெறட்டும் என்கிருர் நேரு. ★

காஷ்மீர் சால்வை!

★ காஷ்மீர் சால்வைகள் உலகப்பிரசித்திபெற்றவை. பழைய சரித்திரங்களிலும் புராணங்களிலும் இச்சால்வைகளைப் பற்றிய கதைகள் இருக்கின்றன.

★ ஜனக மகாராஜா தன் பெண் சீதையை புக்ககம்அனுப்பியபோது காஷ்மீர் சால்வையை சீர் வரிசையில் சேர்த்துக் கொடுத்தாராம்.

★ திருதராஷ்டிரன் தன் வீட்டுக்கு வந்த கிருஷ்ணபரமாத்மாவை காஷ்மீர் சால்வையில் போர்த்தி கௌரவித்தானும்.

★ எகிப்தில் நெப்போலியன் யுத்தம் செய்தபோது அவனுக்கு காஷ்மீர் சால்வைகளை காணிக்கையாக அனுப்பப்பட்டன. நெப்போலியன் இதை ஜோஸபைன் ராணிக்கு கொடுத்தான். அன்று முதல் பிரான்ஸில் காஷ்மீர் சால்வைக்கு பெருமதிப்பு இருந்து வருகிறது.

★ அக்பருக்கு காஷ்மீர் சால்வைமீது வெகு ஆசை என்று அபுல்பாஸல் எழுதி வைத்திருக்கிருர்.

காஷ்மீர் போரில் வீர அபிமன்யு

பாரதப்போரில் வீர அபிமன்யு பகைவர் அம்பினுல் வீர சுவர்க்கம் அடைந்த கதையைப் படித்திருக்கிறோம். காஷ்மீர் போராட்டத்தில் அத்தகைய வீர அபிமன்யுவாக விளங்கியவர் பிரிகேடியர் உஸ்மான்.

தளபதி உஸ்மானை உயிருடனே அல்லது பிணமாகவோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் 50,000 பரிசு என்று காஷ்மீர் ஆக்ரமிப்பாளர்கள் விளம்பரம் செய்தனர். ஆனுல் பாவம், யாருக்கும் அந்தப் பரிசு கிடைக்கவில்லை. இவர் சைவ உணவையே உட்கொண்டார். மாமிச உணவை ஏறிட்டும் பார்த்ததில்லை. இந்தியா துண்டாடப்பட்டதில் பிரிகேடியர் உஸ்மானுக்கு ஏற்பட்ட வருத்தம் கொஞ்ச நஞ்சமல்ல. இவருடைய பிரேத ஊர்வலத்தில் பிரதமர் நேரு, கவர்னர் ஜெனரல் ராஜாஜி இன்னும் பல அரசாங்க உத்யோகஸ்தர்களும் கலந்து கொண்டனர். ராணுவ மரியாதைகளுடன் சவ அடக்கம் நடைபெற்றது.

மருதாணி

மருதாணி என்று சாதாரண மாகச் சொல்லப்படும் இலை, மருதாணை, மருதனை என்று அழைக்கப்படுவதும் உண்டு. மருதாணி இடுதல் என்பது ஆதி காலந்தொட்டு நம் நாட்டு அழகுக் கலையாக இருந்து வந்திருக்கிறது. பழங்காவியங்களிலும் பழங்கால இலக்கியங்களிலும் இந்தக் கலையை மக்கள் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது தெரியவருகிறது.

மருதாணி என்பது காரணப்பெயராக இருக்கலாம். மருத நிலங்களிலே வளர்ந்து, மருதநாட்டு மக்களால் உபயோகப் படுத்தப் பட்டதாதலால் அது இடுகுறிப்பெயராக வைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது. பச்சை நிறமுள்ள மருதாணி இலைகள் அரைக்கப் பட்டு கை, கால்களில் பூசப்பட்டதும் சிவப்பு நிறமாக மாறுவதால் மருதோன்றி எனப் பெயர் கொண்டு, காலப் போக்கில் மருதாணி என மருவிற்று என்றும் சொல்கிறார்கள்.

மருதாணிச் செடி மாதுளை வர்க்கத்தைச் சார்ந்த செடி. சின்னச் சின்ன சிறிது வட்ட மான இலைகள். தூரத்திலே வீசும் மணத்திலிருந்தே அதைக் கண்டு கொள்ளலாம். ரம்மியமான வாசனைக்காக கதம்பத்திலே இதன் இலைகளைச் சேர்த்துக் கட்டுவார்கள்.

மருதாணிச் செடி காய்கள் நிறையக் காய்க்கும். அந்தக் காய்கள் இலவம் பஞ்சுபோல

செடியிலிருந்து இலைகள் பறிக்கப்படுகின்றன

கட்டுரை, படங்கள்:

புஷ்பத்துறை சுப்பிரமணியம்

வெடித்து நாலா புறமும் சிதறி வேர் ஊன்றும். செடி வளரும். இந்தச் செடியை வளர்ப்பதற்கு விதை தான் வேண்டும் என்பதில்லை. மருதாணிக் குச்சியை நட்டாலே போதும். எளிதிலே ஈரம் காய்வதில்லை. தண்ணீர் விட்டால் தான் முளைக்கும் என்பதில்லாது பருவகால மழையையும் பனி நீரையுமே உட்கொண்டு எந்த வெப்பத்தையும் சமாளித்துக் கொண்டு, ஞானிபோல உயிர் வாழும் தன்மை கொண்டது மருதாணி.

அம்மியில் நன்றாக அரைக்கப்படுகிறது

பெண்களுக்கு மருதாணி என்றாலே அலாதி ஆசை. அதன் அழகு சாதாரணமாகமட்டுமன்றி ஆரோக்கியப் பொருளாகவும் அமைகிறது. இந்த மருதாணி உடலில் உள்ள உஷ்ணத்தைக் குறைத்து குளிர்ச்சியைத் தருகிறது. மருதாணி இலைகளை இடித்துக் காய்ச்சி, தலையிலே தேய்த்துக் கொள்ள தைலங்கள் வடிக்கிறார்கள். மருத்துவ வழியிலே வெகுவாகப் பயன்படுவதோடு, இக்காலத்தில் ஸோப், செண்ட் தயாரிப்பிலும் மருதாணியின் சாந்தைக் கலக்குகிறார்கள். கை, கால்களில் உள்ள சிரங்குகளுக்கும், பித்த வெடிக்கும் மருதாணி ஒரு கைகண்ட ஒளஷதம். கிருமிகளைக் கொன்று சர்மவியாதிகளைக் கண்டிக்கும் மகத்தான சக்தி மருதாணிக்கு இயல்பாகவே உண்டு.

அரைத்த விழுது கைகளில் இடப்படுகிறது

முதலில் செடியிலிருந்து நிறைய இலைகளைப் பறிப்பார்கள். தண்ணீரில் அவற்றைச் சுத்தம் செய்து அம்மியில் வைத்து நன்றாக விழுதாக அரைப்பார்கள். அரைத்த விழுதை உள்ளங்கைகளில் வட்டமாகவும், விரல் நுனிகளில் கூராகவும் இடுவார்கள். அது காய்ந்து கையோடு நன்றாக ஒட்டிக்

அழியாமல் இருக்க இரவில் இடுவதே நல்லது

மருதாணி இட்டுக்கொள்ள குழந்தைகள் குதூகலத்துடன் ஓடி வருவார்கள். கிராமங்களில் மருதாணி அரைக்க மற்று பொருள்களும் சேர்க்கிறார்கள். எருக்க இலை, பழுப்பு, ஆட்டுப் புழுக்கை, கொட்டைப் பாக்கு, மூன்று வீட்டுக் கூரை இவற்றையும் சேர்த்துக் கொள்வார்கள். முன் காலத்தில் ஆண்களும் மருதாணி இட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்தது. அது மட்டுமில்லை, மாறுவேஷங்களுக்காக முகத்திலே மருதாணி வண்ணம் தீட்டிக் கொள்ளவும் செய்தார்கள். இன்றைய கால செயற்கை அலங்காரப் பொருள்களுக்கு எந்த விதத்திலும் குறையாது, மருதாணி மாதர் பொக்கிஷமாக விளங்குகிறது.

''அனிச்சமும் அன்னத்தின்
—தூவியும்
மாதரபுக்கு நெருஞ்சிப்பழம்''

கொள்ளும் சிறுவிரட்டி போல. அதை உடனே வழித்து கைகளை அலம்பி விடக்கூடாது. அலம்பினால் மருதாணியின் சாயம் பற்றாது. அதுபற்ற சுமார் நான்கு மணிநேரம் பிடிக்கும். அதற்காக இரவு நேரங்களில் படுக்கச் செல்லுமுன் இட்டுக்கொண்டு காலையில் எழுந்திருக்கும்போது கழுவினால், நல்ல சிவப்பு நிறம் அழகாகக் காட்சி தரும். காலைப் பொழுதிலே மருதாணி இட்டுக் கொண்டால், கை கால்களை உபயோகப்படுத்துவது சிரமம். சிவந்த நிறம் சிறப்பாக அமைந்தால் சந்தோஷத்திற்குக் குறைவேது? மருதாணிச் சாற்றால் பெண்கள் கால்களிலும் கைகளிலும் நேர்த்தியான சித்திர வேலை செய்வதுண்டு. கல்யாண காலங்களில் மணமக்களுக்கு மருதாணி அலங்காரம் செய்வார்கள்.

நகங்களுக்கும் உள்ளங்கைக்கும் இம்மாதிரி இடவேண்டும்



என்கிற குறள் அடிகளுக்கு, சிறப்புறப்பேசும் மாதர் பாதங்களுக்கு அழகுணர்ச்சியோடு அலங்காரம் செய்ய ஆன்றோர் மருதாணியை அரிய சாதனமாகக் கண்டார்கள்.



பச்சை நிற சாற்றைக் கையில் பூசியதும் சிவப்பாக மாறிவரும் அபூர்வ சக்தி பெற்ற இந்த இலை மருதாணி என்று தமிழ் நாட்டில் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் 'மெஹந்தி' என்ற பெயரால் இந்தியாவெங்கும் இந்த மருதாணி பிரபலமாகியுள்ளது. கடந்த நானூறு ஆண்டுகளாக மத்திய தரைக்கடல் பிரதேசத்திலிருந்து கங்கை நதி தீரம் வரை மருதாணியின் புகழ் பரவியிருக்கின்றது. அழகுக்கு அழகு செய்ய இந்த அதிசய இலையின் சாறுதான் எவ்வளவு அத்தியாவசியமாக இருக்கிறது!

மருதாணியின் அழகுக்குப் போட்டியாகத்தான் 'நெயில் பாலிஷ்' தோன்றியுள்ளது. இருந்தாலும் மயிலைக்கண்டு மாச்சர்யம் கொள்ளும் வான்கோழி என்னதான் முயன்றாலும் மயிலாகிவிட முடியுமா? ★

பரிமள கமகமா

பி. ஜி. கிரிஜா

நம்முடைய உடல் நலத்திற்கு 'சோப்பு' தேவையே இல்லை! தோலின் ஆரோக்கியத்திற்கும் 'சோப்பு' தேவையில்லை! நமக்கு அடிக்கடி சளி, இருமல், வந்து கஷ்டப்படுவதற்கும் 'சோப்பு' தான் முக்கிய காரணம். நம் தோலில் ஒருவித எண்ணெய்ப் பசை (மெழுகு) கசிந்து கொண்டிருக்கிறது. இந்த மெழுகு சோப்பினால் கரைக்கப்பட்டு, மெழுகு வரும் துவாரங்களுக்குள்ளேயும் குளிக்கும் ஜலம் புகுந்து கொள்கிறது. இதற்குத்தான் 'ஜலம்' உடம்பிலே கோத்துக் கொள்கிறது என்று சொல்கிறோம். இதனால் தலைவலி, சளி, இருமல், உடல்வலி, சுரம் வருகிறது; வேடிக்கையான நிகழ்ச்சி ஒன்றைப் பார்ப்போம்.

அற்புத நிகழ்ச்சி

ஒரு மாஜிக் வித்தைக்காரர் பள்ளிக்கூட குழந்தைகளுக்கு சில வித்தைகள் காட்டினார். அவர் ஒரு வெள்ளை வாத்தைக் காண்பித்தார் 'கொரக் கொரக்' என்று கத்திக்கொண்டிருந்தது அந்த நிஜ வாத்து. ஒரு பெரிய தொட்டியில் தண்ணீர் வைத்திருந்தார். அந்த தண்ணீரில் வாத்தை விட்டார். வாத்து தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தது. சுற்றி சுற்றி நகர்ந்து கொண்டேயிருந்தது. ''இதோபாருங்கள்! இந்த வாத்தை மிதக்காமல் இந்த தண்ணீரில் முழுகிப் போகும்படி செய்வேன்'' என்று சொன்னார். ஒரு கறுப்புத் திரைக்குள் தானும் வாத்துமாக ஐந்து நிமிஷம் இருந்தார். பின் வாத்தைசுற்றிலும் காண்பித்தார். அதே வெள்ளை வாத்துதான்! சந்தேகமில்லை. தொட்டி தண்ணீரில் அதை விட்டார். உடனே வாத்து முழுகி விட்டது! எல்லாருக்கும் மிகவும் ஆச்சரியமாகப் போய் விட்டது! இதில் என்ன வித்தை தெரியுமா? அவர் வாத்தை சோப்பு ஜலத்தால் நன்றாகக் கழுவினார். வாத்தின் சிறகிலும், உடலிலும் உள்ள மெழுகு கரைந்து ஜலம் கோத்துக் கொண்டது. அதனால் வாத்து மிதக்க முடியாமல் முழுகி விட்டது.

1500 வருடங்களுக்குமுன்!

சோப்பு இல்லாமல் உடல் அழுக்கு எப்படி போகும்? இந்த கேள்விக்கு விடை 1500 வருடங்களுக்கு முன் இருந்த வராஹமிகிரர் கூறியிருக்கிறார்.

''ஸ்நானீய சூர்ண வாசம்'' எனப்பட்ட சுகந்த பொடி வகைகளை உபயோகித்து வாருங்கள். அதனால் சருமத்தின் சுருக்கங்கள் தடுக்கப்பட்டு, மினுமினுப்பையும் யௌவனத்தையும் பெறலாம் என்று விவரித்திருக்கிறார். சுகந்த பொடி வகைகள் மட்டுமில்லாது தைல ஸ்நானத்தையும் முதலில் கண்டுபிடித்தவர் புராதன இந்தியர்களே! தற்காலத்தில் முகத்துக்கு மாத்திரம் உபயோகப்படும் 'கிரீம்', ஸ்னோவுக்குப் பதிலாக வதனவாஸம் எனப்பட்ட லேபவகைள் (பூச்சுகள்) உபயோகிக்கப்பட்டன.

''ஸ்நானீய சூர்ண வாசம்'' என்ற சுகந்தப் பொடி வகைகளிலே 'பரிமள கமகமா' பொடி செய்யும் விதத்தையும் அதனால் ஏற்படும் பலன்களையும் இங்கே தருகிறேன். இன்றே செய்து உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டிய சாமான்கள்

கஸ்தூரி மஞ்சள்	2 தோலா
பூலாங்கிழங்கு	,,
பச்சிலை	,,
ஜடாமாம்சி	,,
கிளியூரம்பட்டை	,,
பூஞ்சாந்துப்பட்டை	,,
கோரைக்கிழங்கு	,,

சோம்பு	,,
லவங்கப்பத்திரி	,,
அன்னுசிப்பூ	,,
வெட்டிவேர்	,,
நன்னுரிவேர்	,,
சிறுநாகப்பூ	,,
கார்போக அரிசி	,,
சண்பக மொட்டு	,,
தாளிசபத்திரி	,,
கவுளா	,,
வெண்கோஷ்டம்	,,
கிராம்பு	,,
ஏலக்காய்	,,
லவங்கப்பட்டை	,,
மாகாளிக் கிழங்கு	,,
சாதிக்காய்	,,
பாச்சோத்திப்பட்டை	,,
மஞ்ஜிஷ்டை	,,
மகிழம்பூ	4 தோலா
மரு	,,
ரோஜா மொட்டு	,,
மருக்கொழுந்து	,,
விளாமிச்ச வேர்	6 தோலா
திரவியப்பட்டை	8 தோலா
வெந்தயம்	,,
சந்தனத்தூள்	10 தோலா
எலுமிச்சம் பழத்தோல் உலர்ந்தது	,,
	108 தோலா

நாட்டு மருந்துக் கடையில் எல்லாச் சரக்குகளையும் வாங்கி வந்து ஒன்று சேர்த்து வெயிலில் உலர்த்தி, இடித்து மெல்லிய துணியில் சலித்தெடுத்து கண்ணுடி ஜாடியில் இறுக மூடி வைக்க வேண்டும்.

இந்த 'பரிமள கமகமா' பொடியைத்தேய்த்துகுளித்தபிறகு சுமார் எட்டு மணி நேரம் சரீரத்தில் மனதிற்கு உகந்த ஒருநறு மணம் வீசிக் கொண்டிருக்கும். இந்த சூர்ணத்தில் சேரும் சரக்குகள் உடலின் தோலுக்கு வெறும் வாசனை மட்டும் தரக் கூடியவை அல்ல. எல்லாம் ரத்தத்தையும் பரிசுத்தி செய்யக்கூடியவை. தோலை வியாதி சமூகத்திலிருந்து காப்பாற்றுபவை.

பலன்கள்

இந்த பரிமள கமகமாவை உபயோகிப்பதால் தோலின் துர்நாற்றம், வியர்வை நாற்றம் நிரந்தரமாய் ஓடிப்போகும். 'நமைச்சல், அரிப்பு, எரிச்சல், புள்ளிகள், அக்கிச் சொறி முதலிய போகும். அன்றாடம் இதை உபயோகித்தால் காந்தி, லாவண்யம், மிருதுத் தன்மை, முறமுறப்புடன் ஒரு வழவழப்பு, விசேஷ நறுமணம் உண்டாகும். இந்த பரிமள கமகமா, சோப்பைப்போல தோலின் பசையை அடியோடு போக்கித் தோலை வரட்சியடையச் செய்யாமல் ரோமகூபங்களை அடைக்காமல் விரியச் செய்து தோலின் இயற்கையான அலுவல்களைச் சிறப்புறச் செய்ய உதவும்.

உபயோகிக்கும் முறை

பரிமள கமகமா சூர்ணத்தை குளிப்பதற்கு கால்மணி நேரத்திற்கு முன்பே கொஞ்சம் ஜலத்தில் கரைத்து வைத்து விடவும். ஊறிய பிறகு உடலில் தேய்த்துக் கொள்ள மிக சுகமாயிருக்கும். உடலில் எவ்வளவு அழுக்கு நிறைந்திருப்பினும் அழுக்கைச் சுத்தமாக அகற்ற இந்தப் பொடியே போதுமானது. எண்ணெய் தேய்த்துக் கொண்டால் சீயக்காய், கடலைமாவு தேய்த்து எண்ணெயை அகற்றி விட்டுப் பிறகு இந்தப் பொடியை தேய்த்துக்கொள்ள வேண்டும். மிகவும் சுகமாக இருக்கும். சுறுசுறுப்பாக மனதிற்கு மிகவும் உல்லாசமாக இருக்கும். குழந்தைகளுக்கும் இப்பொடியை உபயோகிக்கலாம்.

சுமங்கலிப் பெண்கள் குளிக்கும் பொழுது மஞ்சளை அரைத்து முதலில் பூசிக்கொண்டுவிட்டு, பிறகு சோப்பை உடனே தேய்த்துக் கொள்கிருர்கள். அதனுல் சோப்பிலுள்ள சுண்ணும்பினுல் உடலிலும் முகத்திலும் ஒரு விகாரச் சிவப்பு ரங்கு ஏற்படுகிறது. இந்த விகாரம் 'பரிமள கமகமா'வை முன்பு, பின்பு எப்பொழுது மஞ்சள் பூசிக்கொண்டாலும் ஏற்படாது. முதலில் மஞ்சளைப் பூசிக் கொண்டுவிட்டுப் பிறகு 'கமகமாவை' தேய்த்துக் கொண்டால் 'திருஷ்டப்பலன்', 'அதிருஷ்டப் பலன்' இரண்டும் ஏற்படும். ஆஹா!! என்ன பரிமள வாசனை! என்ன குதூகல உணர்ச்சி! உபயோகித்துப் பாருங்கள். அதன் மகிமை அப்போதுதான் தெரியும். ★

எண்ணெய் வரலாறு

வாழ்க்கை நடத்துவதற்கு எண்ணெய் மிகமிக முக்யம். மோட்டார், லாரி, பஸ், விமானம், ரயில் இவைகள் இயங்குவதற்கும் இன்னும் யந்திர சாதனங்களை சீர்பட, வேகமாக இயங்கச் செய்யவும் எண்ணெய் அவசியமாக இருக்கிறது. இந்த எண்ணெய் பூமிக்குள் மண்ணோடும் கல்லோடும் கலந்து கிடக்கிறது. இது இருக்கும் இடங்களைக் கண்டு பிடித்து கிணறுகள் தோண்டி எண்ணெய் எடுத்து அதை சுத்தம் செய்கிறார்கள். அப்படி சுத்தம் செய்து பிரிக்கப்படும் பல வகையான எண்ணெய் நம் வாழ்க்கை வளம் பெறுவதற்கு எவ்வளவோ வழிகளில் உதவுகின்றன.

பூமிக்குள் இந்த எண்ணெய் எப்படி கிடைக்கிறது? பூமியில் எவ்வளவோ இயற்கை உற்பாதங்கள் ஏற்படுகின்றன. கடலுள் இருக்கும் நிலம் மேல்வருகிறது. நிலப்பரப்பில் சிலபாகம் தண்ணீருக்குள் போய் விடுகிறது. இத்தகைய மாறுதல்களின்போது மிருகங்கள், மீன்கள், தாவர வர்க்கங்கள் இவை அகப்பட்டு சிக்கி, மக்கி, மண்ணோடு மண்ணாகி விடுகின்றன. இந்த மிருகங்களின் கொழுப்புகள் மேற்கனம் தாங்காமல் பிழியப்பட்டு பூமியில் இறங்கிப் போய் பாறைகள் இருக்கும் இடம்வரை வந்து அப்படியே தேங்கி விடுகின்றன. இந்த எண்ணெய்தான் பல அசுத்தங்கள் கலந்த குரூட் ஆயில்.

இப்போது எண்ணெய் கிடைக்கும் இடங்களைப் பார்த்தால் அவை ஒரு காலத்தில் கடலாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று நம்பவேண்டியிருக்கிறது.

இந்த எண்ணெய் எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன் பூமிக்குள் இருந்தபோதிலும் அதை எடுத்து உபயோகிக்க ஆரம்பித்தது இந்த 100 வருஷங்களுக்குள்தான்.

மருந்தாக முதல் உபயோகம்

வட அமெரிக்காவின் பூர்வீக குடிகளான சிவப்பு இந்தியர்கள் உப்புக்கிணறு தோண்டும்போது ஒருவித எண்ணெய்யும் சேர்ந்து வந்ததைப் பார்த்தனர். இந்த எண்ணெயை மருந்துப்பொருளாக உபயோகித்து வந்தனர் அவர்கள்.

அமெரிக்காவில் பென்ஸில்வேனியா நகரத்தின் அருகில் உள்ள டைம்ஸ் வில்பி என்ற கிராமத்தின் அருகில் உலகிலேயே முதல் எண்ணெய்க் கிணறு தோண்டப்பட்டன. ஸ்மித், டிரேக் என்ற இருவரும் சேர்ந்து எண்ணெய்க் கிணறு தோண்டினர். பலர் அவர்கள் முயற்சியை பரிகாசம் செய்தனர். இந்த கிணற்றில் 69 அடி ஆழத்தில் எண்ணெய் கிடைத்தது. ஆனால் இப்போதெல்லாம் பல ஆயிரக்கணக்கான அடி தூரம் தோண்டினால்தான் எண்ணெய் கிடைக்கிறது. இந்த எண்ணெயைக் கொண்டு விளக்கு எரிக்கலாம் என்பதைக் கண்டு பிடித்தனர். மண்ணெண்ணெயுடன் கிடைத்த பெட்ரோலுக்கு உபயோகம் தெரியாததால் அது வீணாக்கப்பட்டு வந்தது. ரட்டோ என்ற ஜெர்மானியர் இந்த பெட்ரோலைக்கொண்டு யந்திரங்களை ஓட்டலாம் என்பதைக் கண்டு பிடித்தார்.

குரூட் ஆயிலை அப்படியே உபயோகிக்க முடியாது. இவைகளை சுத்தம்செய்து பிரிக்க சுத்திகரிப்பு ஆலைகள் அத்யாவசியமானவை. குரூட் ஆயிலிலிருந்து காஸோலின் எண்ணெய், மண்ணெண்ணெய், டீஸல் எண்ணெய், இவை எடுத்த பிறகு எஞ்சியுள்ளவையிலிருந்து பியூயல் எண்ணெய், பிடுமென் முதலியவை எடுக்கப்படுகிறது. எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் உயரமான ஒரு குழாய் அமைத்திருக்கிறார்கள். இதில் பல தட்டுகள் உண்டு. ஒவ்வொரு அறையைவிட

அதிக குளிர்ச்சியுள்ளது. முதல் அறையில் குரூட் எண்ணெயை அடைத்து சூடு ஏற்றப்படுகிறது. இந்த எண்ணெய் ஆவியாக மாறி மேல்நோக்கி செல்லுகிறது. எல்லா தட்டுகளுக்கும் இந்த ஆவி செல்கிறது. அந்தந்த தட்டின் கொதி நிலைக்கு ஏற்றபடி திரவமாக மாறுகிறது. அங்கங்குள்ள குழாய்களின் வழியாக இத் திரவம் சேகரிக்கப்படுகிறது.

பெட்ரோல் தயாரிப்பில் புது முறை

பெட்ரோல் தயாரிப்பில் புது முறை கையாளப்படுகிறது. இயற்கையாக கிடைக்கும் பெட்ரோல் உலகத் தேவைகளுக்குப் போதாது. ஆகவே பண்படா எண்ணெயில் மீதி உள்ள கனரக எண்ணெய்களையும் இவர்கள் பெட்ரோலாக மாற்றி விடுகின்றனர். இதற்கு 'பிளப்புமுறை' என்று பெயர்.

ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டிலுள்ள எண்ணெய் விநியோக ஸ்தாபனங்களானபர்மாஷெல்,ஸ்டாண்டார்ட் வாக்குவம், கால்டெக்ஸ் இம் மூன்றும் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையை நம் நாட்டில்நிர்மாணிப்பதற்கு இந்திய சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டன. பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்பே தீவில் இந்த எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.பர்மாஷெல்,ஸ்டாண்டார்ட், வாகுவம் இக் கம்பெனிகளின் சுத்திகரிப்பு நிலையங்கள் டிராம்பேயில்தான் உள்ளன. கால்டெக்ஸின் சுத்திகரிப்பு ஆலை விசாகப்பட்டினத்தில் நிர்மாணமாகி வருகிறது.

இந்தியாவில் ஏற்பட்ட முதல் முதல் சுத்திகரிப்பு ஆலை அஸ்ஸாம் ஆயில் கம்பெனியினால் 1920ல் ஏற்படுத்தப்பட்டது. இன்று 35 வருஷங்கள் கழித்து மாபெரும் சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பர்மாஷெல், ஸ்டான்வெக் இவை இரண்டின் ஆலைகளும் வருஷத்தில்31,00,000 டன் குருட் எண்ணெயை சுத்திகரிக்கும்.இம்மூன்று கம்பெனிகளின் சுத்திகரிப்பு ஆலைகள் நிர்மாணத்திற்காக சுமார் ரூ. 60 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவிற்கான எண்ணெய் இரானிலுள்ள அபடான் தொழிற்சாலைகளிலிருந்தே எடுக்கப்பட்டு வந்தன. யுத்தம் முடிந்த பின்பு டாலர் நெருக்கடி ஏற்பட்டதால் ஒவ்வொரு நாடும் சொந்தமாகவே சுத்திகரிப்பு சாலையை ஏற்படுத்த ஆரம்பித்தன. இந்தியாவும் சொந்தத்தில் ஏற்படுத்த ஏற்பாடு செய்தது. பர்மாஷெல் ஆலை மட்டும் வருஷத்தில் 15,00,00 டன் ரோடுகளுக்கான பிடுமினஸைத் தயார் செய்கிறது.

பர்மாஷெல் இந்தியர்களை இந்த ஆலைகளுக்கு பயிற்சி செய்ய வழி செய்துள்ளது. இதுவரை 45 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். ★

பர்மாஷெல் சேவை

'பர்மாஷெல்' பெயரை கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. அஸ்ஸாம் எண்ணெய் கம்பெனியாரின் ஒத்துழைப்புடன் அஸ்ஸாமில் புதிதாக எண்ணெய் கிணறு தோண்டி அதில் வெற்றி பெற்றிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளுள் 'பர்மாஷெல்'லுடையதுதான் மிகப் பெரிதானது. மக்களுக்கு காலா காலத்தில் எண்ணெய் கிடைக்கச் செய்வதையே பெரும் தொண்டாகக் கருதி வருகின்றனர்.

அறிவு வளர்ச்சிக்கான சினிமாப் படங்களைத் தயாரித்து அவைகளை பிள்ளைகளுக்கு இலவசமாகவே காட்டி வருகின்றனர். மேல்நாடுகளுக்குச் சென்று இந்திய மாணவர்கள் பல துறைகளில் நிபுணர்களாக விளங்க உபகாரச் சம்பளங்கள் அளித்து வருகின்றனர். இந்தியாவில் எட்டு முக்கிய இடங்களில் இக்கம்பெனியாருக்கு எண்ணெய் கிடங்குகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று தண்டையார்பேட்டையில் உள்ளது.



எண்ணெய் வரலாறு

எண்ணெய், வாழ்க்கைக்கு மிக இன்றியமையாத பொருள். அதைப்போலவே அவ்வளவு முக்யமானவை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும்.

98 வருஷங்களுக்கு முன்பு யு. எஸ். பென்ஸில்வேனியாவிலுள்ள டிடுஸ்வெல்லி என்ற கிராமத்தில்தான் முதன் முதலில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது. அந்த இடத்திலுள்ள ஞாபகார்த்த கல்.

இத்தகைய எண்ணெய் கிணறுகள் தோண்டுவதற்கு நூதன 'டிரில்லிங்' சாதனங்கள் உபயோகிக்கப் படுகின்றன. 'டிரில்லிங்' வேலைகளுக்கும் மாபெரும் குழாய்களை நிறுத்தி வைப்பதற்கும் உபயோகிக்கப்படும் டெர்ரிக் எனப்படும் இரும்புஏணி.



ட்ராம்பேயிக்கும் புட்சர் தீவுக்குமிடையே பிரம்மாண்டமான எண்ணெய் குழாய்கள் கடலினடியில் போடப்பட்டுள்ளன. இதன் வழியே பண்படாத எண்ணெய் ஆலைக்கு சப்ளை செய்யப்படுகிறது.





சுத்திகரித்த எண்ணெய் சேகரிப்புத் தொட்டிகளும் குழாய்களும். முன்பெல்லாம் இம்மாதிரி தொட்டிகள் தகடுகளால் இணைக்கப் பட்டு ஆணிகளைக்கொண்டு 'ரிவட்' செய்யப்படும். ஆனால், இத்தொட்டிகள் தற்போது தகடுகளால் பற்றவைக்கப்பட்டு (Welding) இணைக் கப்படுகின்றன. இம் மாதிரி ஸ்டாக் செய் யும் இடம் தண்டை யார் பேட்டையி லுள்ளது. இந்தத் தொட்டிகளில் சுத்தி கரிக்கப்பட்ட எண் ணெய் வகைகள் பத்திரமாக ஸ்டாக் செய்யப் படுகின்றன. குழாய்கள் வழியே குரூட் எண்ணெய் சப்ளையாகிறது.





எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பொதுத்தோற்றம்.





'கெடாலிடிக் கிரேக்கிங்' யந்திரம். இதன் மூலம் சுத்திகரிப்புத் தொழிற் சாலைக்கு உபயோகமாகும் வாயுக்கள், கெஸோலின் முதலியவை உற்பத்தியாகின்றன :—கண்ட்ரோல் அறை.





எளிதில் தீப்பற்றிக்கொள்ளும் தன்மை வாய்ந்த இந்த எண்ணெய்தேக்கத்தைப் பாதுகாக்க உலகிலேயே மிகப் பெரிய 2 தீயணைக்கும் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன :—பெட்ரோல் பங்க்.

தமிழில் துப்பறியும் கதைகள்

ச. ய. கல்யாணசுந்தரம்

தமிழில் இதுவரை வெளியாகியுள்ள துப்பறியும் நாவல்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் மேனாட்டு எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கிறார் இக்கட்டுரையாசிரியர்

நாவல், சிறுகதை என்ற இலக்கிய வகைகளைப் போன்றே தமிழ்த் துப்பறி கதையும் ஆங்கில இலக்கியத்தைத் தொடர்ந்து வளர்ந்துள்ளது. ஆனால் நாவலும் சிறு கதையும் தமிழ் இலக்கியத்தில் வேரூன்றி வளர்வது போன்று துப்பறி கதைகள் வேரூன்றவில்லை. தமிழிலக்கியத்தில் அதன் நிலை இன்னும் நிச்சயமற்றதாகவே இருக்கின்றது.

தமிழ் மொழியில் நாவல் இலக்கியமாக இடம்பெற வழிகாட்டிய ஸ்ரீ ராஜம் ஐயர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரம்' என்ற புத்தகத்தில்தான் முதன் முதலாக 'துப்பறிதல்' என்ற நிலையைக் காண்கிறோம். பேயாண்டி நடராஜனைக் கவர்ந்து, மறைப்பதில் திட்டமிட்ட குற்றச் செயலையும், பிறர் அதை அறியாதவாறு மறைத்துத் தவறான வழியில் செலுத்தலையும் அந்த நாவலில் காணலாம். ஆனால் நாவலின் பிற்பகுதியில் துப்பறி செயலிலுள்ள ஆர்வங்குன்றி சமயச் சார்பான போக்கு வந்து விடுகின்றது.

வழிகாட்டி ஆரணி முதலியார்

தமிழில் துப்பறி இலக்கியத்திற்குச் செல்வாக்கு தேடத் தீவிரமாக முயன்றவர் ஆரணி குப்புசாமி முதலியார். அந்தக் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ஆங்கிலக் கதைகளைத் தழுவித் துப்பறியும் கதைகள் பலவற்றை அவர் எழுதினார். 'ஆனந்த போதினி'யில் அவர் எழுதிவந்த தொடர்கதைகள் மக்களால்

தமிழில் ஏராளமாக துப்பறியும் நாவல்கள் எழுதிய ரங்கராஜு



துப்பறியும் நவீனம் 'கமலாம்பாள் சரித்திரத்'தின் ஆசிரியர்
பி. ஆர். ராஜமையர்

விரும்பிப் படிக்கப்பட்டதுடன் சாதாரண சம்பாஷணையில் கூட பேசி அலசப்பட்டன. ஆனால் இந்தியச் சூழ்நிலையில் அவருடைய பாத்திரங்கள் பொருத்தமற்று விளங்கின. அவர் கதைகள் அநாவசியமாக நீண்டு விளங்குவன. மேலும் பிழையான மொழி பெயர்ப்பினால் நடையும் தமிழாகத் தோன்றாது. ஆயினும் தமிழ்த் துப்பறி இலக்கியச் சரித்திரத்தில் ஆரணி குப்புசாமி முதலியார் பெயர் முதலிடம் பெறும் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை. அவருடைய புத்தகங்கள் எல்லாம் கடவுள் வணக்கத்தோடு தொடங்கும். அவர் புத்தகங்களைப் படிப்பவர்கள் மற்றொன்று விரித்தலிலிருந்து அவரது தனித்திறனைத் தெரிந்து கொள்ளலாம். அவருடைய புத்தகங்களில் காட்டப்படுகின்ற மேனாட்டு நாகரிகம் நம்முடைய சமூக வாழ்வுக்குக் கொஞ்சமும் பொருந்தாது என்று அவர் சலிக்காமல் கூறுகின்றார். துப்பறி கதை எழுத ஆரம்பித்த காலத்தில் ஒரு சிலர் முதலியாரவர்களைக் கண்டனம் செய்தனர். கோரக் கொலைகளும், பல்வகைத் திருட்டுக்களும் வருவதால் இளைஞர்களைத் துப்பறி கதைகள் கெடுத்து விடுவதாகக் கூச்சல் எழுவது எங்கும் இயற்கையே. அது போன்றே தமிழ் நாட்டிலும் கண்டனம் தோன்றியது. கதை நடுவே ஆசிரியர் "குற்றம் செய்வது பயன் தருவதில்லை. தீமையேதரும்" என்றும் அதனால் இக்கதைகளைப் படிப்பது அவைகளை ஒழிக்க உதவும் என்றும் உபதேசம் செய்வதில் இறங்கி விடுவதையும் காணலாம். எது எப்படியாயினும் துப்பறியும் கதைக்குத் தமிழில் வழிவகுத்துப் பண்படுத்திய பெருமை ஆரணி குப்புசாமி முதலியாரையே சாரும்.

வடுவூராரின் நாவல்கள்

அடுத்த புகழ்பெற்ற துப்பறி எழுத்தாளர் வடுவூர் துரைசாமி ஐயங்கார். அவர் சென்னைச் சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றவர். துப்பறியும் கதைகள் அவரைக் கவர்ந்தன. அவருடைய கதை யமைப்புகள் தனி சிருஷ்டி. அவை தழுவல்களாக இல்லாத காரணத்தால் வாசகர்கள் விரும்பினர். அவர் விஞ்ஞான மர்மக் கதைகள் எழுதவும் முயன்று வந்தார். அவரிடம் உள்ள குறையொன்றுண்டு; ஆரம்பத்திலேயே வாசகர்களின் உணர்ச்சியை உச்ச நிலைக்குத் தூண்டி விடுவார்.

கதை முடியும்போது ஏதோ குறையிருப்பதாக வாசகர்கள் எண்ணுகிருர்கள். திடுக்கிடும் சம்பவங்களைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தால் பொருத்தமற்ற, நம்ப முடியாத கதை யமைப்புகளை அவர் தருகின்ருர். அவர் கதைகளில் வரும் குற்றவாளிகள் தங்கள் குற்றங்களால் வரும் லாபத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. ஆனால் குற்றங்களை மர்மம் நிறைந்ததாகச் செய்வதே நோக்கமாகக் கொண்டவர் போலக் காணப்படுகின்றனர்! அவர்கள் பல அர்த்தமற்ற செயல்கள் புரிவதைக் காண்கிருேம். அதுபோலவே துப்பறிபவரும் அர்த்தமற்ற செயல்கள் செய்கிருர். கடைசியில் துப்பறிபவர் ஏதேதோ விசித்திரமான காரியங்கள் செய்து குற்றவாளிகளைக் கண்டு பிடித்து விடுகின்ருர். துப்புத் துலக்கும் செயலிலே சம்பந்தமில்லாமல் பல விஷயங்கள் தனித்தனியே விளங்குகின்றன. அவைகள் எல்லாம் குற்றஞ் செய்தவரை மயங்கச் செய்யத் துப்பறிபவர் செய்தவை என்று கூறி எல்லாவற்றையும் ஒன்ருக முடித்து குற்றவாளிகளைப் பிணைத்து விடுகின்ருர். சில சமயங்களில் துப்புத்துலக்கும் வழி யாருக்குமே விளங்குவதில்லை. பல சமயங்களில் துப்பறிபவர் எப்போது தம் வேலையைத் தொடங்கினுர், அவருக்குள்ள ஆதாரத்துப்புகள் யாவை என்பவைகூட படிப்பவருக்குத் தெரிவதில்லை. உண்மையில் சில கதைகளில் துப்பறிபவர் ஒருவர் இந்தக் கதையில் இல்லைபோலும் என்று முடிவுகட்டும் சமயம், தள்ளாடி வரும் பிச்சைக்காரன் ஒருவனே அல்லது வேறு சாதாரண மனிதனே தன் பொய்த் தாடியை அவிழ்த்துவிட்டுத் தான் ''திகம்பர சாமியார்'' என்று வெற்றி முழக்கம் செய்வதைக் காண்கிருேம். அவர் பாத்திரங்கள் எல்லாம் தமிழரே; அந்தந்த சாதியாருக்குரிய பேச்சு நடையைப் பின்பற்றுகின்ருர். வடுவூரார் நாவல்கள் அடிக்கடி புதிய பதிப்புகளாக வெளிவருகின்றன. மக்கள் விரும்புவதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமா? அவருடைய நாவல்களில் சில திரைப் படமாகவும் வந்துள்ளன.



துப்பறியும் நாவல்கள் எழுத வழி காட்டிய ஆரணி குப்புசாமி முதலியார்

ரங்கராஜுவின் தனித்திறமை

சமீபத்தில் காலஞ்சென்ற ஜே. ஆர். ரங்கராஜு துப்பறி கதை எழுதுவதில் சிறந்தவர். பொதுவாகக் கதைப் போக்கிலும் பிற தன்மைகளிலும் வடுவூராரது நாவல்களைப் போன்றே இவர் கதைகள் விளங்கினுலும் தற்கால

வாசகர்களுக்கு ரங்கராஜுவின் கதைகள் விருப்பமுள்ளவையாக இருக்கின்றன. அவரது நாவல்களில் நான்கைந்து திரைப்படமாக தயாரிக்கப்பட்டுள்ளன.

'தனித் துப்புத் துலக்குதல்' தமிழ் நாட்டில் வேரூன்றவில்லை. இங்கு குற்றஞ் செய்வதும் ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றது. விஞ்ஞான அறிவு வளரவில்லை. அதனால் கொலை செய்வதும் உடலை ஒளிப்பதும் அநாகரீக ஆதி மனிதன் கூட வெட்கப்படும்படியான ஆரம்ப நிலையிலேயே உள்ளன.

பொறாமை, வெறுப்பு ஆகிய இரு குணங்களே எந்தக் கதையிலும் குற்றஞ் செய்வதற்கு மூலமான உணர்ச்சிகளாக இருக்கின்றன. எந்த வகையான கொலையாயினும் பிணமும் கொன்ற ஆயுதமும் போலீஸார் கண்டுபிடிக்கும்படியாக விட்டிருப்பதைக் காண்கிறோம். சந்தேகப்பட்ட நபர், தானே குற்றவாளி என்று காட்டுவது போல உடனே மறைந்து விடுகிறார். குற்றஞ் செய்த ஆயுதம் எது என்று சிரமப்பட்டுத் தேட வேண்டியதில்லை. சம்பவம் நடப்பதற்கு ஒரு மாதம் முன்னாலேயே ஊர் முழுதும் அதே பேச்சாக இருப்பதைக் காணலாம். பாவம்! ஸ்ரீமான் துப்பறிபவரின் அபார மூளைக்கு அங்கே வேலை ஏது?

துப்பறி கதைகளில் மர்மப்பகுதி, துப்புத்துலக்கு பகுதி என இரண்டுண்டு. ஆனால் தனித் துப்புத் துலக்குதல் மட்டும் நம் எண்ணங்களைக் கவர்வதில்லையாதலால் சில எழுத்தாளர்கள் துப்புத் துலக்குதலுக்கு முக்கியத்துவம் தராமல் மர்மப் பகுதிகளையே அதிகமாக விளக்குவதைக் காணலாம்.

நாமக்கல் கவிஞருடைய 'மலைக் கள்ளன்', கல்கியின் 'மகுடபதி', 'அலையோசை' போன்றவை அவ்வினத்தன. ஆனால் மேற்கூறிய ஆசிரியர்கள் வழக்கமாக எழுதுவதிலிருந்து ஒரு மாறுதல் காட்டவே இவ்வகையான கதைகளை எழுதினர் என்பதை நாம் மறக்கலாகாது.

'துப்பறியும் சாம்பு'வின் சிருஷ்டிகர்த்தா 'தேவன்'

தேவனின் 'சாம்பு' தனிரகம்

'தேவன்' சிருஷ்டித்த சாம்பு ஒரு தனிரகம். ஆங்கில இலக்கியத்திலும் விசித்திரமான துப்பறிபவர் இருப்பதைக் காணலாம். டாமி, டப்பென்ஸ் என்ற இருவர் ஷெர்லக் ஹோம்ஸைப் பின்பற்றுவதாக நடந்து நமக்கு களிப்பூட்டுகின்றனர். மற்

றெந்தத் துப்பறிபவருக்கும் இல்லாத ''முழு முட்டாள்தனம்'' என்ற குணம் சாம்புவின் பெருமைக்குக் காரணமாயிற்று. சாம்பு முட்டாளாக நடிக்கவில்லை. உண்மையிலேயே அவன் ஒரு முட்டாள். அது அவனுடைய அசடு வழியும் முகத்திலிருந்தே இந்த உண்மை வெளியாகும். குற்றஞ் செய்வோர் - எல்லாக் கதைகளிலுமே அவர்கள் மிகக் கெட்டிக்காரர்கள் - அவனை நன் குணர்ந்து அதன்படி நடத்துகின்றனர். சிம்மம் என்ற மகா மேதாவி சாம்புவைச் சந்திக்கும் போது அவனைப் புழுவாக மதித்து ஒதுக்குகிறான். சிம்மத்திற்கும் அவனுடைய ஆட்களுக்கும் சாம்புவிடம் கொஞ்சம்கூட பயமில்லை; அவனுடைய அதிர்ஷ்டத்தைக் கண்டே நடுங்கினர்!

சிறந்த துப்பறிபவருக்கு இருக்க வேண்டிய ஒரு குணம் சாம்புவுக்கு இருந்தது; எங்கே குற்றம் நடந்தாலும் அதை மோப்பம் பிடித்து விடுவான். எங்கேனும் குற்றமிழைக்கத் திட்டம் போட்டால் எப்படியோ சாம்பு அங்கே குதித்து விடுவான்! குற்றஞ் செய்யக் கூடியிருப்பவர் அவனைக் கண்டு அஞ்சுகின்றனர்; வெறுக்கின்றனர். பந்தைப்போல அவனை அங்குமிங்கும் உதைக்கின்றனர். என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கின்றான். அவனுக்கு எதுவுமே விளங்குவதில்லை. கடைசியில் அதிர்ஷ்டம் கை நீட்டுகின்றது. அவன் ஒருவன்தான் வெல்லுகிறான்.

தான் புத்திசாலி என்று சாம்பு பாசாங்குகூடச் செய்வதில்லை. முட்டாள் புத்திசாலியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பினால் கேலிக்கிடமாக வல்லவோ முடியும்? சாம்பு பரிபூரண முட்டாள். கடைசியில் துப்புத் துலக்கிக் குற்றவாளிகளைப் பிடித்தபோது மற்றவர்கள் தன்னைப் பாராட்டுவதைக்கண்டு அவர்களுடைய மூளை பிசகி விட்டதோ என்று சாம்பு நினைப்பான். தன் மூக்கைத் தடவி விட்டுக்கொண்டு பேசாமல் இருப்பான். சாதாரண முட்டாளாயிருந்தால், தான் மிக புத்திசாலி என்று காட்ட முயன்று தன் சுயரூபத்தை வெளிப்படுத்தியிருப்பான்.

எட்கார் வேலஸின் சிருஷ்டியான ராபின்ஸ் போன்றவன் தமிழ்த் துப்பறி இலக்கியத்தில் இன்னம் தோன்றவில்லை. 'ராபின்ஸ்' சாமர்த்தியம் வாய்ந்த திருடன். எப்போதும் துப்பறிபவனே வெற்றி பெறுவது கண்டு படிப்பவர் சலிப்படைவது இயற்கையே. அதனால் துப்பறிபவரை ஏமாற்றும் சாமர்த்தியத் திருடனான ராபின்ஸ் வாசகர் மனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. செயின்ட் என்ற பெயரால் திரியும் சைமன் டெம்பிளார் குற்றம் செய்பவனாகவும் துப்பறிபவனாகவும் மாறி மாறி இலங்குகின்றான். மேலை நாட்டு இலக்கியத்தில் துப்பறியும் பெண்மணிகளையும் காண்கிறோம்.

அகதா கிறிஸ்டி என்னும் பெண் மணி எழுதியுள்ள துப்பறி நாவல்கள் இன்று மேலைநாட்டு 'துப்பறியும் கதை' உலகில் சிறந்த இடம் பெற்றுள்ளன.

துப்பறியும் கதைகளை எழுதுவதில் வெறும் பயங்கரத்தை மட்டும் சிருஷ்டித்து, வாசகர்களின் ஆவலை அதிகரித்துக்கொண்டு போவதைவிட, கதைப்போக்கின் சுவாரஸ்யத்தைக் குன்றவிடாமல் ஹாஸ்ய சம்பவங்களையும் துப்பறியும் ஆசிரியர்கள் கையாள முயற்சிக்க வேண்டும்.

சமீபகாலத்தில் புத்தகம் வெளியிடுவோர் சிலர் துப்பறி கதைகளைக் கொண்டுவர முயன்றுள்ளனர். பயங்கரக் கதைகளும் மர்மக் கதைகளும் இப்போது அதிகமாக எழுதும் ஆசிரியர் 'சிரஞ்சீவி' என்று தமிழ் மக்கள் உணர்வர். துப்பறியும் கதைக்கு ஊக்கந்தரத் தனிப் பத்திரிகைகள் கூடத் தோன்றி உள்ளன. ஆயினும் ''கோல்ட் பக்'', ''ஸ்பெக்ஸ்ட் பாண்ட்'' போன்ற கதைகள் தமிழில் தோன்றுவது என்நாளோ? ★

★ நல்ல காரியத்தைத் துவக்கும்போது தும்மல் வரக் கூடாது என்கிறோம். அதைத் தவிர்க்க் முடியுமா?......

தும்மல்

'ராசு'

நல்ல காரியம் ஒன்றைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்; அல்லது வெளியே செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அக்கம் பக்கத்தில் உள்ளவர் யாராவது 'நசுக்'கென்று தும்முகிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்களைக் கொன்று விடலாமா என்ற ஆத்திரம் நமக்கு உண்டாகிறது. சமயாசந்தர்ப்பம் தெரியாது தும்மித் தொலைத்தானே என்று கோபப்படுகிறோம். பாவம், அந்த அப்பாவிக்கு என்ன தெரியும்? நாம் பேசுவதையோ, வெளியே கிளம்புவதையோ அவன் அறிவதே கிடையாது. இருந்தும் நாம் அவன் மீது கோபப்படுகிறோம். சாதாரணமாக நாம் தும்மலை ஓர் அபசகுனமாகவே கருதுகிறோம். யாராவது தும்மி விட்டார்களானால் அந்தக் காரியத்தை ஒத்திப் போட்டு விடுகிறோம். அன்றி மிகவும் அவசரமாக வெளியே செல்ல வேண்டியிருந்தால் உள்ளே திரும்பி வந்து சிறிது நேரம் அமர்ந்து, தண்ணீர் அருந்திவிட்டுச் செல்கிறோம். நாம் நினைக்கும் அல்லது செய்யப் போகும் காரியம் வெற்றிபெறாது என்பதை அறிவிக்கும் சூசனையாகவே நம்மில் பெரும்பாலோர் தும்மலைப்பற்றி முடிவு கட்டியுள்ளோம்.

இது இன்றைய நேற்றைய பழக்கமல்ல. தொன்று தொட்டு நம் வாழ்விலே பின்னிப் படர்ந்த பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்று. தன் அறிவுக்கும் சக்திக்



கும் அப்பாற்பட்டவற்றில் தெய்வத் தன்மையைப் புகுத்தி வந்தான் மனிதன். தும்மல் எவ்விதம் உண்டாகிறது என்பதை அறியாத அவன், தான் செய்யப் போகும் காரியம் வெற்றிபெறாது என்பதை ஆண்டவன் அவ்வாறு தெரிவிக்கிறார் என்று எண்ணிக் கொண்டான் போலும்.

தும்மல் உண்டாவது ஏன்?

நாம் சுவாசிக்கும் காற்று நாசித் துவாரங்களின் வழியே சென்று நுரையீரலை அடைகிறது. வெளியே வியாபித்துள்ள காற்றிலே கணக்கற்ற தூசி தும்புகள் நிறைந்திருக்கின்றன. நாசியிலே உள்ள மெல்லிய ரோமங்கள் காற்றிலே பரவிக்கிடக்கும் தூசி தும்புகளைத் தடுத்து விடுகின்றன. அவற்றையும் மீறி ஓரிரு சமயங்களில் தூசி தும்புகள் உள்ளே சென்று விடுவதும் உண்டு. அவ்வாறு செல்லும்போது நாசியின் உணர்ச்சி நிறைந்த மெல்லிய சுவர்களில் மோத நேரிடுகிறது. நரம்புகளின் மூலம் விஷயத்தை உணர்ந்த மூளை, ரோமங்களைத் தாண்டி உட்புகுந்த தூசிகளை வெளியேற்ற முயலுகிறது. நாம் தும்மும்போது அடர்ந்த காற்று

நம் நாசியினின்று வெளியேற்றப் படுகிறது. காற்று வெளியேறும் போது தூசி தும்புகளும் வெளி யேறி விடுகின்றன.

இதுதான் சாதாரண தும்மல். ஜலதோஷம் பிடித்துக்கொண் டிருந்தாலும் மூக்கிலே ஜலம் புகுந்து விட்டாலும் பொடி போட்டாலும் தும்மல் ஏற்படு கிறது. ஆனால் அடிப்படை கார ணம் ஒன்றுதான். அமைதியாக இருக்கும் நாசித் துவாரத்தில் ஏதோ ஒன்று புகுந்துவிட்டது. அதை வெளியேற்ற மூளை எடுத் துக்கொள்ளும் வேலையே தும்மல். இதை உணராத பண்டைய மனி தன் தும்மலிலே தெய்வத் தன் மையைப் புகுத்தி விட்டான்.

எல்லா தும்மல்களையும் அப சகுனமாக எடுத்துக் கொள்ளு வதும் இல்லை. இரட்டைத் தும் மல் நல்லது என்று அபிப்பி ராயப்படுகிறார்கள். மற்றும் சில சமயங்களில் ஆண்கள் தும்மினால் ஆண்களையும் பெண்கள் தும்மி னால் பெண்களையும் பாதிப்பதில்லை யாம்.

இது மட்டுமல்ல. ஒருவன் தும் மும்போது ''தீர்க்காயுசாக இரு! என்று பக்கத்திலுள்ளவர்கள் வாழ்த்துவதையும் காண்கிறோம். இதன் காரணத்தைச் சிந்திப்போ மானால் விசித்திரமாகவே இருக் கும்.

பழங்காலத்திலிருந்த எண்ணங்கள்

அக்காலத்திலே மக்கள் தும் மலை ஏதோ ஓர் அசாதாரணமான சம்பவமாகவே கருதி வந்தார்கள். பேசுவது, சாப்பிடுவது போன்ற வற்றை மனிதன் நினைத்தபோது செய்ய முடியும். ஆனால் அப்படி அவனால் நினைத்தபோது தும்ம முடியாது. தும்மல் எப்போது வரும் என்பதை அவனால் அறிய முடிவதில்லை. ஆகவே, தும்மலை அவர்கள் ஓர் அதிசயமாகக் கருதி வந்தார்கள்.

ஒருவன் தும்மும்போது அவன் நாசியிலிருந்தும் வாயிலிருந்தும் காற்று வெளிப்படுகிறது. மனிதன் உயிர்வாழ காற்று முக் கியமென்பதை அக்காலத்து மக் கள் நன்கு உணர்ந்திருந்தனர். மூச்சு நின்று விட்டால் மனிதன் இறந்து விடுகிறான் என்பதை உணர்ந்திருந்த அவர்கள் தும்ம லுக்கும் ஜீவனுக்கும் ஏதோ வொரு தொடர்பு இருப்பதாக எண்ணினார்கள்.

தும்மும்போது வெளிப்படும் காற்று, சாதாரணமாக நாம் வெளி விடும் காற்றைவிட பன் மடங்கு அதிகமாயிருப்பதைக் கண்ட அவர்கள், அதனால் மனித னின் ஆயுளுக்குக் குறைவு நேரி டுமோவென்று பயந்து, அவனை நீடூழி காலம் வாழவேண்டு மென்று வாழ்த்தினார்கள்.

இந்தப் பழக்கம் நம்மிடையே மட்டும் அன்றி, உலக மக்கள் எல் லோரிடமும் இருந்து வந்திருக் கிறது. யாராவது தும்முவதைப் பார்த்தால், அராபியர்கள் 'பரஹம கல்லா' என்பார்கள். அதாவது 'கடவுள் உன்னிடம் கருணை காட் டட்டும்' என்று பொருள். பம்பா யில்வசிக்கும் பார்ஸிகள் 'ஜீவ்ரோ' அல்லது 'ஜீரே' என்பர். ஜீவித் திரு என்று அவர்கள் வாழ்த்து கின்றனர். துருக்கி தேசத்தவர் கள் 'மஸ்சல்லா' (கடவுள் உன் னைக் காப்பார்) என்று கூறுவர். கிரேக்கர்கள் 'கல்லி எஜியா' என் பார்கள்.

ஏழு அதிசயங்களில் ஒன்று!

இதை விளக்கி ஹீப்ருக்க ளிடையே நாடோடிக் கதை ஒன்று வழங்கி வருகிறது. அது பின் வருமாறு.

உலகத்தைச் சிருஷ்டித்தபோது ஆண்டவன் ஏழு அதிசயங்களை யும் உண்டாக்கினார். அவற்றுள் தும்மலும் ஒன்று. அவர் நியமித்த விதிப்படி மனிதன் தன் ஆயுளிலே ஒரே ஒரு தடவைதான் தும்மு வான். அப்போது அவன் ஆவி பிரிந்து ஆண்டவனை அடைந்து விடும். இதனால் மனிதப்பிறவி எடுத்தவர் எல்லோரும் எந்தச் சம யத்தில் தும்மல் வந்து இறந்து

விடுவோமோ என்று பயந்து கொண்டே காலத்தைக் கழித்து வந்தார்கள்.

யாகோப் காலத்திலும் இவ்வாறே நடந்து வந்தது. இத்தகைய விதியால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களை அவர் உணர்ந்தார். ஆகவே அவர் கடவுளிடம் மன்றாடி வேண்டிக்கொண்டார். தும்மினவுடனே ஒருவன் இறந்து போகாமல் அவனுடைய விவகாரங்களைச் சீர் செய்து, தன் மனைவி மக்களுக்கு ஓர் ஏற்பாடு செய்வதற்காகக் கொஞ்சம் அவகாசம் அளிக்க வேண்டுமென்று ஆண்டவனிடம் பிரார்த்தித்தார். ஆண்டவனும் அந்த வேண்டுகோளுக்கு மனமிரங்கி அதை அனுக்கிரகித்தார்.

நாட்கள் ஓடின- யாகோப்பின் கடைசி நாளும் நெருங்கியது. அவர் தும்மினார். ஆனால், வழக்கப்படி அவர் உடனே இறந்து விடவில்லை! இயற்கையின் விதியையே வென்ற யாகோப்பைக் கண்டு உலகமே அதிசயித்தது. அதற்குப் பிறகுதான் யாராவது ஒருவர் தும்மினால், அவர் உடனே இறந்துபோகாமல் இன்னும் அதிகமான காலம் ஜீவித்திருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் பக்கத்தில் இருப்பவர்கள் 'தீர்க்காயுசு' என்று தும்மியவரை வாழ்த்த வேண்டும் என்ற விதியை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு வாழ்த்தும் பழக்கம் தோன்றியதற்கு மற்றொரு காரணமும் கூறுவதுண்டு.

கி. பி. 589-590ல் முதன் முதலாக ரோம் நகரத்தில் பிளேக் என்னும் கொடிய நோய் கண்டது. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதன் முக்கிய அம்சம் என்னவென்றால் நோய் கண்டவன் முதலில் தும்முவானும். அதற்குப் பிறகு அவனை யாரும் நெருங்க மாட்டார்கள். பக்கத்தில் இருப்பவர்களும் எங்கே அந்த நோய் தங்களையும் பற்றிக்கொண்டு விடுமோ வென்று பயந்து ஓடி விடுவார்களாம். ஓடும்போது, ''கடவுள் உன்னைக் காப்பாற்றுவாராக'' என்று தும்மியவனை வாழ்த்திக்கொண்டே போவார்களாம்.

இது போன்ற கதைகள் பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் வழங்குகின்றன. ★

பிறநாட்டுப் பழமொழிகள்

மௌனம் ஒருவரை எப்படியும் காப்பாற்றும்.
—அயர்லாந்து.

உன்னைத் தூக்கி யெறியும் குதிரையைவிட உன்னைச் சுமந்து செல்லும் கழுதை மேலானது. —இதாலி.

பண மில்லாத மனிதன், துடுப்பு இல்லாத படகு.
—ஹாலந்து.

மனித முகங்களே அவன் குணத்தைக் காட்டும் கண்ணாடி. —ஜெர்மனி.

ஊசி ஒரு முனையில்தான் கூர்மையாக இருக்கும்.
—சீனா.

ஒரு முட்டாள் கடலில் வீசிய கல்லை நூறு அறிவாளிகள் சேர்ந்தாலும் எடுக்கமுடியாது! —பல்கேரியா.

துணிகரமான ஆரம்பம் பாதிவெற்றி என்றே அர்த்தம். —பிரான்ஸ்.

பாரத நாட்டில் நடந்தே சுற்றுப்பிரயாணம்

பி.பி.ஸ்வாமி

நான் திருநெல்வேலி ஜில்லா கீழளப் பூவானி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி. உலக முழுவதுமே சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. ஆனால் அதற்கான வசதிகள் எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது? ஆகவே நம் பாரத நாடு முழுவதும் சுற்றிப் பார்க்க எவ்வித விஸாக்களும் அதிக கஷ்டங்களும் படவேண்டியதில்லை. கால்கள் இருக்கவே இருக்கின்றன. ஆகவே கையில் ரூ. 100 ரொக்கத்துடன் 1954 ம் வருஷம் ஜூன் மாதம் 4உ என் கிராமத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டேன்.

ஒரு நாளைக்கு 10 மைல் முதல் 32 மைல் வரை சௌகரியத்திற்கும் நிலைமைக்கும் தகுந்தாற்போல நடந்திருக்கிறேன்.

உச்சிக்குடுமி, பூணூல், கீல்பாச்சு வேஷ்டி கட்டுதல் இம்மூன்றுக்கும் தென்னிந்தியாவில் மதிப்பில்லாமல் போகலாம். ஆனால் வட இந்தியாவில் அவைகளுக்கு மட்டற்ற மதிப்பு இருந்து வருகின்றது. சுமார் 8000 மைல்கள் கால்களால் நடந்தே பல நகரங்களைச் சுற்றிய ஸ்ரீ பி. பி. ஸ்வாமியின் சுவாரஸ்யமான இக்கட்டுரையைப் படித்தால் இதன் விவரம் தெரியும்.



சிம்மாசலம் கோயில்—இங்கு உள் செல்ல 2 அணா கட்டவேண்டும்.

ஆந்திராவில் ஒரு கிராமம். அந்த கிராமத்தின் பெயரை இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை. மாலை சுமார் 5-30 மணி இருக்கும். அங்கு போய்ச் சேர்ந்தேன். அந்த கிராமத்தின் பெரிய மனிதர் ஒருவரைச் சந்தித்து, தங்குவதற்கு உதவும்படி கேட்டேன். அவர் சிரித்த முகத்துடன் வரவேற்று, பேசினார். நான் தமிழன் என்பதை தெரிவித்தவுடன் அவர் முகம் கடுகடுக்க ஆரம்பித்து விட்டார். இங்கு தமிழனுக்கு இடம் கிடையாது. இங்கு என்ன? இந்த கிராமத்திலேயே இடம் கிடையாது என்று சொல்லிவிட்டார்! அக்கிராமவாசிகள் என்னிடம் அனுதாபம் காட்டினர் என்றாலும் யாரும் துணிந்து எனக்கு வசதி செய்துதர முன் வரவில்லை. ஆனால் அவர்கள் அருகிலுள்ள மற்றொரு கிராமத்திற்கு வழி காட்டினர்.

இரவு வேளைகளில் வழி பறிக்காரர்கள், காட்டு மிருகங்கள், பாம்புகள் சஞ்சாரம் இவைகளை உத்தேசித்து என்னால் பிரயாணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

தமிழ்நாடும் சரி, வடநாடும் சரி, விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் பாஷாவாரி மனப்பான்மை, குறுகிய நோக்கத் துவேஷம் இவற்றை என் பிரயாணத்தில் ஒரு சில இடங்களில் நான் காணநேர்ந்தது.

இதே மாதிரி அனுபவம் லக்ஷ்மணபுரி (உ. பி.) க்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஏற்பட்டது. நைமிசாரண்யம் செல்லுமுன் எனக்கு மலேரியா கண்டுவிட்டது. என்மீது அன்பு பூண்டு சிலர் ஆஸ்பத்திரியில் சேர்த்து உதவி செய்ததை என்னால் மறக்க முடியாது.

ஹிந்தி பாஷையை நான் கற்றுச் சென்றது மிக சௌகரிய இருந்தது. ஹிந்தி ஒன்று தெரிந்தால் மட்டும்போதும். வட இந்தி

யாவில் எந்தப் பகுதியிலும் பேசி சமாளித்து விடலாம். ஆனால் வங்காளத்தில் மட்டும் வங்காளியில் தான் பேசவேண்டும். ஹிந்தியைக் கண்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை!

என்னுடன் நான் கொண்டு சென்ற பொருள்கள் அதிகம் எதுவுமில்லை. மிக அவசியமான துணிமணிகள், சிலநோட் புஸ்தகங்கள் இவைதான். நான் புறப்பட்டது முதற்கொண்டு இப்போது சென்னை வந்ததுவரை எங்கெல்லாம் சென்றேனோ அதெல்லாம் விவரமாக எழுதி வைத்திருக்கிறேன். அந்தந்த பிரதேச பிரமுகர்கள், முக்யஸ்தர்கள் எல்லாரையும் சந்தித்து அவர்கள் அபிப்பிராயங்களையும் கையெழுத்துக்களையும் சேகரித்திருக்கிறேன், இவர்களின் எண்ணிக்கை சுமார் 800-க்கும் அதிகம் இருக்கும்.

என்னிடமிருந்து பணத்தை திருடவோ அல்லது கொள்ளை யடிக்கவோ பிரமாதமாக எதுவும் இல்லை. அப்படியிருந்தும் ஹைதராபாத்தில் ஒரு கிராமத்தில் என்னுடைய துணிகளில் மூன்றை எவனோ அடித்துக்கொண்டு போய்விட்டான்! சபர்மதிக் கருகில் ஒருவன் என்னிடம் மிகவும் விசுவாசமாக நடந்து கொண்டான். அவன் நடத்தையை நான் சிறிதும் சந்தேகிக்கவில்லை. ஆனால் நான் குளித்துக்கொண்டிருக்கும் போது என் பையில் இருந்த ரூ. 5-12-0 ஐ களவாடிச் சென்று விட்டான்.

இந்தப்பக்கத்தில் உச்சிக் குடுமி ஒழிக, பூணூல் ஒழிக, என்ற கோஷம் வானைப்பிளக்கிறது. ஆனால் இந்த உச்சிக்குடுமிக்கும் பூணூலுக்கும் எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை வடநாட்டுக்குச் சென்று வந்தால் தான் தெரியும். இவைகளுக்கு ஒரு தனி மதிப்பு இருந்து வருகிறது. கிராப்தலையாக இருந்தாலும் ஒரு சில மயிர்களை மட்டும் உச்சிக்குடுமிக்காக அதிகமாக பலர் வைத்திருக்கிறார்கள். நான்காவது வருணத்தாரைத் தவிர, மற்ற மூன்று வருணத்தாரும் வடநாட்டில் பூணூல் அணிகின்றனர்.

'தட்டுச்சுத்து'க்கு மதிப்பில்லை

இங்கெல்லாம் தட்டுச்சுத்து வேஷ்டி கட்டுவது சர்வசாதாரணம். ஆனால் இம்மாதிரி வேஷ்டி கட்டினவர்களை வடநாட்டினர் ஹிந்துக்கள் என்று நம்ப மறுக்கின்றனர். முஸ்லிம்கள் என்றே தீர்மானிக்கின்றனர். வடநாட்டில் சில கோயில்களில் 'கில்பாச்சு' வேஷ்டி கட்டினால்தான் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். பூரி ஜகந்நாத்திலும் சாகி கோபாலிலும் நான் கில்பாச்சு கட்டியபின்தான் கோயில் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டேன்.

தென்னிந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில் பழகியவனுக்கு



பகல்காம்—இங்கிருந்து அமர்நாத் 28 மைல்



அமர்நாத் குகைக்கோயில்

வடநாடு பிடிக்கவே பிடிக்காது. தமிழ் நாட்டிலுள்ள வானளாவும் பிரும்மாண்ட கோபுரங்களை அங்கெல்லாம் காண முடியாது. காபி, இட்டலி இவைகளை அங்கு யாராவது எதிர்பார்த்தால் ஏமாந்து தான் போவார்கள். காரம், புளிப்பு இவைகளையும் உணவில் அதிகம் எதிர்பார்க்க முடியாது.

இலைபோட்டு சாப்பிடுவது அதுவும் வாழை இலை போட்டு சாப்பிடுவது என்பது தமிழ்நாட்டில் தான். வடநாட்டில் பாத்திரங்களில்தான் உணவு உட்கொள்ள வேண்டும். அதை மண் கொண்டு துலக்கி விட்டால் அதே பாத்திரத்தில் மற்ருெருவர் சாப்பிடலாம்.

இப்பிரயாணத்தில் சில காடுகளைக் கடக்க நேர்ந்தது. மலைகள் மீதும் ஏறி இறங்கினேன். கடப்பையைத் தாண்டியதும் உள்ள காடுகள் நாஸிக்கிற்கும் புல்ஸாருக்குமிடையே உள்ள காடு. (இதை கும்பகர்ணன் தூங்கிய இடம் என்கிருர்கள்) சௌராஷ்டிராவிலுள்ள ஓர் காடு, இவை பிரும்மாண்டமானவை. சௌராஷ்டிரா பகுதியில் பிர்பிலாலா என்ற ஜாதியினர் இருக்கின்றனர். இவர்கள் ஏகலைவனின் சந்ததியாராம். குருபக்தி காரணமாக துரோணர் சிலையை வைத்துக் கொண்டு வில்வித்தைகளைப் பயின்ற வீரன் ஏகலைவன்.

இயற்கைப் பொலிவு பெற்ற காஷ்மீரம்

காஷ்மீரின் இயற்கை காட்சிகளிடம் யாரும் மனதைப் பறிகொடுக்காமல் இருக்க முடியாது. காஷ்மீர் மகாராஜா கரன்சிங்குடன் நான் பேசினேன். அவரிடம் புகை

பிடிப்பது, பொடி போடுவது போன்ற எந்தவிதமான கெட்ட பழக்கமும் கிடையாது. ஆனல் புலால் உணவு மட்டும் உட்கொள்கிருர். எந்த காஷ்மீரியும் மாமிச உணவு இல்லாமல் இருப்பதில்லை.

காஷ்மீரிலிருந்து அமர்நாத் குகைக்கு யாத்திரை சென்றேன். பனிலிங்கத்தைக் காணும் பாக்கியம் கிடைத்தது. பகல்காம் என்ற இடத்துடன் ஒழுங்கான பாதை முடிகிறது. பின்னர் நடந்தோ அல்லது மட்டக் குதிரைகள் மீது சவாரிசெய்தோதான்போகவேண்டும். 4 அணுவுக்கு கயிற்ருல் பின்னின செருப்பு ஒன்றை விற்கிருர்கள். இதை வாங்கி அணிந்து கொண்டால் பனிக்கட்டிகளில் சறுக்கி விழாமல் நடக்க முடிகிறது. கையில் கம்பு ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டும். அதை முன்னல் தரையில் குத்தி எவ்வளவு ஆழம் பனிக்குள் செல்கிறது என்பதை பார்த்தே நடக்க வேண்டியிருந்தது. ஒரு இடத்தில் நான் இடுப்பளவு பனியில் புதைந்து விட்டேன், வெளியேறுவது பெருங்காரியமாகி விட்டது.

காஷ்மீரில் நேரு பார்க், சங்கராச்சார் கோயில், ஷாலிமார் நந்தவனங்கள் இவைகள் எல்லாம் பார்க்க வேண்டியவை.

இந்தியாவில் எங்கும் ‘இடது பக்கமாகவே போ’ என்ற ரஸ்தா விதி அமுலிலிருந்து வருகிறது. ஆனல் அமெரிக்காவிலுள்ளதைப் போல ‘வலது பக்கமாகப் போ’ என்ற ரஸ்தா விதி சிம்லாவில் மட்டும் அனுஷ்டிக்கப்படுகிறது. சிம்லாவின் அமைப்புக்கு இது அவசியம் என்று கூறப்படுகிறது. உத்தரபிரதேசம், பீகார் ஆகிய இடங்களில் செங்கல் உற்பத்தி ஏராளம். ரஸ்தாக்கள் அமைப்பதற்கு கூட செங்கற்கள் தான் உபயோகப்படுகின்றன.

சுரைக் குடுக்கை தோணிகள்

வடநாட்டில் பிரும்மாண்டமான நதிகளை எல்லாம் கடக்க வேண்டி வந்தது. அரை அணு, ஒரு அணுவுக்கு மேல் கட்டணம் இல்லை. தண்ணீர் பிரவாகமாக வரும் சில நதிகளைக் கடக்க சுரைக்காய் குடுக்கைகளால் ஆன ஒரு விசித்திர தோணியின் உதவியை விட்டால் வேறு சாதனம் கிடையாது. இந்த சுரக்குடுக்கை தோணியில் ஏறினல் ஆள் தண்ணீரில் நனையாமல் செல்ல முடியாது. இதற்கு கட்டணம் எட்டணு. இந்த தோணி தண்ணீர் ஓட்டத்துடனேயேதான் செல்லவேண்டியிருப்பதால் ஏறின இடத்திலிருந்து இரண்டு மூன்று பர்லாங்கு தாண்டிதான் கரை ஏற வேண்டியிருக்கும்.

வடநாட்டில் சில கோவில்களுக்குள் செல்ல டிக்கெட் வைத்திருக்கிருர்கள். சிம்மாசலம் கோயிலுக்குள் யார் செல்ல வேண்டும் என்ருலும் இரண்டணு கட்டணம் செலுத்தியேயாக வேண்டும். வங்காளம் முதலிய இடங்களில் தண்ணீர், தேயிலை பானம் குடிக்க ஹோட்டல்களில் கூட மண் குடுவைகள் உபயோகிக்கப்படுகின்றன. கண்ணுடி டம்ளர்கள் உபயோகிப்பது துர்லபம். கத்தியவாட் என்ற பகுதியில் எல்லாருமே மரக்கறி உணவு உண்பவர்கள்தான். பஞ்சாப், ஹிமாசல பிரதேசம், காஷ்மீர் இவை தவிர, வட இந்திய கிராமங்களில்காணப்படும் பெண்கள் மிகக் கர்நாடகமாகவே காணப்படுகின்றனர். எல்லா பெண்களும் முக்காடு போடுகின்றனர்.

என் கிராமத்தைவிட்டு சென்னை திரும்பியவரை 7985 மைல்கள் நடந்திருக்கிறேன். 13 ஜோடி பாதரட்சைகள் உபயோகித்துள்ளேன். இவைகளில் 9 ஜோடி கான்வாஸ்கள். 4 ஜோடி செருப்புகள். இன்னும் நடந்தே என் கிராமத்திற்கு திரும்பவிருக்கிறேன்.

மெய்வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாமல், செவ்வி அருமையும் பாராமல் கருமமே கண்ணுக நடக்கத் தீர்மானித்துள்ளேன். ★

நரிவெங்காயம்

அ. ராம்கோபால்

நமக்கு நாட்டு வெங்காயம், சீமை வெங்காயம் என வெங்காயத்தில் இரண்டே வகைதான் அதிகமாகத் தெரியும். சீமை வெங்காயத்துக்கு (Allium Cepa) பெல்லாரி வெங்காயம், பெங்களூர் வெங்காயம், கறி வெங்காயம் என வேறு பெயர்களும் வழங்கி வருகின்றன. பூண்டும் (Allium Sativum) ஒரு வகை வெங்காயமே. ஆகையால் இதை வெள்ளை வெங்காயம் என நம் பக்கம் சொல்வதுண்டு. இவைகளை நீக்கி லீக் (Allium Porrum), ஷாலட் (Allium Asclonicum) சைவ் (Allium Schoenoprasum) சிவால் (Allium Fistulosum) முதலியவைகளும் ஒரு வகை வெங்காயமே. ஆனால் இவையெல்லாம் பெரும்பாலும் மேல் நாடுகளில் பயிராகுபவை. ஆகையால் இவற்றை நம்மில் அநேகர் அறியோம். நம் நாட்டிலேயே காடுகளில் தன்னிச்சையாக ஒரு வகை வெங்காயம் விளைகிறது. இதையும் நம்மில் பெரும்பாலோர் அறியோம்.

> வெங்காயம் ஒரு உணவுப் பொருள் என்பதைமட்டுமே நாம் அறிவோம் - ஆனால், அதே வகையைச் சேர்ந்த வேறு சில வெங்காயங்களின் அதிசயத்தன்மையை விளக்குகிறது இக்கட்டுரை.

இவ்வெங்காயம் உருவில் மிகவும் சிறிதாக இருக்கும். ஆகையால் இதை சாதாரணமாக நறி வெங்காயம் எனச் சொல்லுவார்கள். காடுகளில் விளைவதால் காட்டு வெங்காயம் எனவும் இதற்கு மற்றொரு பெயருண்டு. நம் நாட்டில் இதர மொழிகளில் இதற்குக் கீழ்கண்ட பெயர்கள் வழங்குகின்றன.

ஹிந்தி-ஜங்லி பியாஜ் (Jangli Piaz)

வங்காளி - பன் பியாஜ் (Ban Piaz)

மராட்டி - ஜங்லி பியாஜ் (Jangli Piaz)

குஜராத்தி - கோலி காந்தா (Koon Kanda)

ஆங்கிலம் - ஸ்குவில் (Sqill)

தாவர சாஸ்திரம் - அர்கினி இண்டிகா (Urginea Indica)

வளருமிடங்கள்

நம் நாட்டில் கீழ்கண்ட பகுதிகளில் உள்ள காடுகளில் இவ்வெங்காயம் தன்னிச்சையாக வளருகிறது.

சென்னை: ஆனைமலை, கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் மணற்பாங்கான பகுதிகள்.

பம்பாய்: பம்பாய் நகருக்குத் தெற்கே ஹர்னி (Harni)யை அடுத்த கடற்கரை.

பீகார்: மாயூர்பஞ்ச், பல் மாவு, சாகிப் கஞ்ச், சாண்டல் பர்கனு, ராஞ்சி, சிங்பும்.

கி. பஞ்சாப்: சிம்லா குன்று கள்.

ஒரிசா: அங்குல்

உத்தரப்பிரதேசம்: அல் மோரா, கார்வல், ஜான்சி, பிலி பிட், பிண்டார் பள்ளத்தாக்கு, தாடியார் பள்ளத்தாக்கு, டோன்ஸ் பள்ளத்தாக்கு, கோண்டா.

மே. வங்கம்: சிப்பூர்.

வைத்தியத் துறையில்

இவ் வெங்காயம் ஆங்கில வைத்தியத் துறை (Allopathy) யில் வெகுகாலமாக ஓரளவு பயன்பட்டு வருகிறது. மேல் நாடுகளில் சிகிச்சைக்காகப் பயன்படும் கடல் வெங்காயத் துக்குப் (Urginea Maritima) பதிலாக நம் நாட்டில் இது பயன் படுகிறது. இவ் வெங்கா யத்தின் மேல்தோலை நீக்கி விட் டுத் துண்டுதுண்டாக வெட் டிக் காயவைக்க வேண்டும். இப்படிக் காய்ந்த வெங்காயமே வைத்தியத் துறையில் பயன் படும் ஸ்குவில் ஆகும். டிகிடா லிஸ் (Digitalis) போன்று இரு தயத்தைப் பலப்படுத்தும் இயல்பு இதற்கு உண்டு. ஆகை யால் இருதயத்தைப் பலப்படுத் தும் டானிக் (Cardiac Tonic) காக ஓரளவு இது பயன் படு கிறது. மூத்திரக் காயைத் (Kidney) தாண்டி மூத்திர உற் பத்தியைப் பெருக்கும் இயல்பும் இதற்கு உண்டு. தொண்டை யிலும் அதற்குக் கீழும் உள்ள சளியை வெளிப்படுத்தும் பண் பும் இதற்குண்டு. தற்சமயம் கீழ்கண்ட அல்லோபதி மருந்து கள் தயாரிக்க இது பயன் படு கிறது.

ஆசிடம் சில்லி (Acetum Scillae)

ஆக்சிமெல் சில்லி (Oxymel Scillae)

சிரபஸ் சில்லி (Syrupus) Scillae)

டிஞ்சரி சில்லி (Tincturae Scillae)

கை மாத்திரைகள் (Guy's Pills)

பாலி மாத்திரைகள் (Baly's Pills)

சந்தேரிச் சேலைகள்

நம் நாட்டில் மத்ய பாரதத் தில் சந்தேரிச் சேலைகள் (Chanderi Sarees) என ஒரு வகை உண்டு. இச் சேலைகளுக்கு வட நாட்டில் எங்கும் கிராக்கி மிகுதி. மிகவும் மிருதுவாக (Soft) இருப்பதோடு பளபளப் பாகவும், உறுதியாகவும் நீண்டநாள் உழைக்கக் கூடிய தாகவும் அவை இருப்பதே இதற்குக் காரணம். இச்சேலை களை கோல்கள் (Kohls) என் னும் ஒருவகை பூர்வீக மலை ஜாதியினர் நெய்கிறார்கள். இவர்கள் எவ்விதம் இவ்வளவு அருமையான சேலைகளை நெய் கிறார்கள் என்பது வெகுகால மாக யாருக்கும் தெரியாத ஒரு மர்மமாகவே இருந்து வந்தது. சமீப காலத்தில்தான் இந்த ரக சியம் வெளியாயிற்று. மத்ய பாரதத்தில் இவர்கள் மிகுதி யாகவசிக்கும் சிவபுரி (Shivpuri) ஸ்யோபுரி (Syopur) குணா (Guna) குவாலியர் (Gwaliar) முதலிய பகுதிகளில் நறி வெங்காயம் ஏராளமாக வளருகின்றன. கோல்கள் இவ் வெங்காயத்தைச் சேகரித்து மேல் தோலைப் போக்கி வேக வைத்து, இடித்துப் பசையாக்கி

கஞ்சிபோல் செய்து விடுகிறார்கள். தாங்கள் நெய்யும் சேலைகளுக்கு அவர்கள் இக் கஞ்சியையே இடுகிறார்கள். இக் கஞ்சியின் மகிமையாலேயே சந்தேரிச் சேலைகள் அவ்வளவு பளபளப்பாகவும் உறுதியாகவும் மிருதுவாகவும் உள்ளன என்று இப்பொழுது தெரிய வந்துள்ளது. குவாலியரில் உள்ள ஜிவாஜி தொழில் ஆராய்ச்சிக்கூடத் (Jewaji Industrial Research Laboratory) திலும் அஹமதாபாத்தில் உள்ள ஜவுளி ஆராய்ச்சி சங்கத்தின் ஆராய்ச்சி கூடத்திலும் (Laboratory of Textile Research Association, Ahmedabad) இப் பசையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தியதில் இந்த உண்மை உறுதிப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் ஜிவாஜி தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் இப்பசை தயாரிக்கச் சிறந்த முறை ஒன்றைக் கண்டறிந்தனர். இம் முறையை குவாலியர் அரசாங்கம் தனக்குச் சொந்தமான பேடன்ட் (Patent) உரிமையாக்கிக் கொண்டது. இப்பொழுது அவ்வரசாங்கத்தின் ஆதரவின் கீழ் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக்கழகம் (National Research Development corporation) என்னும் ஸ்தாபனம் ஒன்று குவாலியரில் இப் பசையை உற்பத்தி செய்யத் தொடங்கி யுள்ளது. கோலிக் கோந்து (Kohli gum) என இதற்குப் பெயர்.

கோந்து தயாரிக்க...

இவ்வெங்காயத்திலிருந்து கோந்து தயாரிக்க முதலில் மேல் தோலை நீக்கிவிட்டு சுடு தண்ணீரில் இதைக் கழுவ வேண்டும். பிறகு சாராயத் (Spirit)தில் கொட்டிக் கழுவ வேண்டும். இப்படி இரண்டிலும் கழுவியதும் வெயிலில் அவற்றை காய வைக்க வேண்டும். நன்கு காய்ந்ததும் இயந்திரங்களிலிட்டு நல்ல மாவாக அரைத்துக் கொள்ள வேண்டும். இதுவே கோலி கோந்து மாவு.

உபயோகம்

சாதாரணமாக துணிகள் நெய்து விற்பனைக்கு அனுப்பு முன் அவற்றிற்குப் பளபளப்பூட்ட ஸ்டார்ச் (Starch) என்னும் ஒரு வகை மாவை நீரில் கரைத்து உபயோகிப்பார்கள். இம்மாவு மாத்திரம் பளபளப்பைக் கொடுத்து விடாது. அதோடு வேறு சில பொருள்களையும் இதற்காகக் கலந்தாக வேண்டும். 10 பங்கு ஸ்டார்ச்சில் 100 பங்கு தண்ணீர் கலப்பது சாதாரண வழக்கம். ஆனால் 4 பங்கு கோலி கோந்து மாவில் 100 பங்கு தண்ணீர் கலந்து உபயோகிக்கலாம். பளபளப்பை ஊட்டுவதற்காக இம் மாவோடு வேறு எதுவும் கலக்க வேண்டிய அவசியமு மில்லை. வடநாட்டில் இதுவே பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

தென்னாட்டிலும் இத்துறையில் கவனம் செலுத்தல் நல்லது. தேவைக்கு வேண்டிய வெங்காயத்தைச் சுலபமாகப் பயிரிட்டும் பெறலாம். பயிர் முறைகள் வெங்காயத்தை ஒத்தவையே. ஆனைமலைக்குச் சொல்லி அனுப்பினால் விதை வெங்காயம் கிடைக்கும். சமவெளியை விட மலைப் பிராந்தியங்கள் இவ்வெங்காயம் பயிர் செய்ய சிறப்பானவை. நம் ஜவுளித்தொழில் சிறப்புற நாம் இவ் விஷயத்தில் கவனம் செலுத்துதல் வேண்டும். ★



நாட்டின் சுபிட்சம்

சென்ற மார்ச் மாதத்துடன் முதல் ஐந்தாண்டு திட்டம் பூர்த்தியாகி விட்டது. இந்த ஐந்தாண்டுகளில் 'நீரைத்தேக்கி நிதியைப் பெருக்கும் திட்டம்' பெரும் அளவில் உருவாகியுள்ளது. பாசனத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் நீரைப் பயன் படுத்த அணைகள் மிக அத்யாவசியமாகும். நாடு சுதந்திரம் பெற்று ஒன்பது ஆண்டுகளுக்குள் இத்தகைய பிரும்மாண்ட திட்டங்களில் பல பூர்த்தி செய்யப்பட்டிருப்பது சுபிட்சப் பாதையில் இந்தியா எவ்வளவு துரிதமாக முன்னேறுகிறது என்பதையே காட்டுகிறது.



கோவை ஜில்லாவிலுள்ள பவானி ஸாகர் நீர்த் தேக்கத்தின் தோற்றங்கள். தென்னிந்தியாவில் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பூர்த்தியான முதல் அணை இதுதான். நீரைத்தேக்கி, நிலத்தை வளப் படுத்துவதிலேயே நாட்டின் செழுமை நிலைத்திருக்க முடியும்.





திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள மணிமுத்தாறு நீரைத்தேக்க இந்த அணை உருவாக்கப்பட்டுவருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய சாதனைகளில் இதுவும் ஒன்றாகும்.





மலம்புழா அணை-திட்டக் காட்சி: கொச்சியில் உருவாகியுள்ள பள்ளிவாசல் மின்சார உற்பத்தி திட்டம். 'எகிப்தின் நன்கொடை' என்று நைல் நதி பெயர் பெற்றுள்ளதைப்போல் இந்த அணைத் திட்டம் கேரளத்தின் செல்வம்.





துங்கபத்ரா மீதுள்ள நிஜாம் ஸாகர் அணைத்திட்டம் (கீழே)
தாமோதர் நதிமீதுள்ள திலாகியா அணை.





முதல் ஐந்தாண்டு திட்டத்தின் மிகப்பெரிய அணைத்திட்டமான
பாக்ரா-நங்கல் அணைக்கட்டு (கீழே) பீகாரிலுள்ள கோனர் அணை.





சமுதாய நலன் திட்டம்: கிணற்றிலிருந்து நீர் இறைக்க நூதன சாதனம், கிராம மக்களே தங்கள் தேவைக்கு சொந்த முயற்சியினுல் தோண்டிய கிணறு.





போக்கு வரத்துக்கு எளிதாக இருக்கும் பொருட்டு கிராமமக்களே இரு கிராமங்களையும் இணைக்கும் பாலம் ஒன்றைக் கட்டுகிறார்கள்.

சுயதேவையை முன்னிட்டு தங்கள் வீடுகளை தாங்களே கட்டிக் கொள்கிறார்கள் கிராமமக்கள்.

சுபிட்சத்திற்கான அணை திட்டங்கள்

'வீட்டுக்கு ஒரு ஆள், காணிக்கு ஒரு கலம் கொடுக்க வேண்டும்' என்று சோழ அரசன் பறையறிவிக்கச் செய்தான். எதற்காக இது? வேறு ராஜ்யத்தின் மீது படையெடுப்பதற்காக அல்ல! காவிரியின் குறுக்கே அணை கட்டி நீரைத்தேக்கி, தண்ணீரை பாசன வசதிக்கு உபயோகிக்க இந்த ஏற்பாடு. 'காவேரி ஆற்றையாவது, தடுத்து அணைகட்டவாவது! ஆடி மாதம் வெள்ளம் வந்தால் இந்த அணை எல்லாம் சிதறி விடாதா' என்று பழித்துக் கூறியவர்களும் அக்காலத்தில் இருந்தார்கள். அரசர் அன்று மக்களின் ஒத்துழைப்பைக் கொண்டு கட்டிய கல்லணை இன்று திருச்சிக்கு கிழக்கே ஒரு காத தூரத்தில் இருக்கிறது. தஞ்சை ஜில்லா நெற் களஞ்சியம் ஆக இந்த அணை பெரிதும் உதவியது. இன்றைக்கும் இந்த கல்லணையைப் பார்த்து வரும் மேனாட்டு என்ஜினியர்கள் அக்காலத்தில் இப்பேர்ப்பட்ட அணையை எப்படிக் கட்டினார்கள் என்று அதிசயிக்கின்றனர்.

இன்று இந்தியாவின் பல பாகங்களில் மாபெரும் அணை கட்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. சில கட்டி முடிந்தும் விட்டன.

சென்னை மாகாண அணை திட்டங்களுக்கெல்லாம் ஆதி கர்த்தாவென ஆர்தர் காட்டன் என்பவரைத்தான் சொல்ல வேண்டும். இவர் எல்லா நதிகளையும் பார்வையிட்டு எங்கெந்த இடத்தில் அணை கட்டினால் பாசனத்திற்கு மிக உதவியாக இருக்கும் என்று திட்டம் தயாரித்திருந்தாராம். இவைகள் அப்போதே நிறைவேற்றப் பட்டிருந்தால் எவ்வளவோ குறைந்த செலவில் எல்லாம் முடிந்து, தமிழ் நாட்டு வளமும் பெருகி இருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

1946-ல் பிரகாசம் மந்திரி சபையில் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் மராமத்திலாகா மந்திரியாக இடம் பெற்றிருந்தார். அவர் கண்ணில் இது பட்டது. சில அணை திட்டங்களையாவது மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார். இதன் பலனாக கீழ்பவானி, மலம்புழா, மணிமுத்தாறு அணை திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. இந்த அணை திட்டங்களை உருவாக்கியவர்கள் திறமைசாலிகளான நமது என்ஜினியர்களே.

சென்ற ஐந்து ஆண்டுகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாசன மின்சார திட்டங்கள் நிர்மாணிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மின்சார வசதிகள் விவசாயத்திற்கு கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளன. கிராமாந்திரங்களுக்கு மின்சார வசதிகள் கிடைத்து வருகின்றன. இவ்விஷயத்தில் சென்னை ராஜ்யம் எல்லா ராஜ்யத்தையும் மிஞ்சி விட்டது.

இவை தவிர, சமுதாய நலன் திட்டங்கள், போன்றவற்றால் கிராமங்களிலே புது வாழ்வு ஏற்பட்டுள்ளது. பொதுமக்களே தங்கள் கடமையை உணர்ந்து, ஒத்துழைத்து தாங்களாகவே முயற்சித்து ரஸ்தாக்கள், பாலங்கள் முதலியவைகளை கட்டியுள்ளனர். இந்தியா சுபிட்ச பாதையில் திட்டமாக முன்னேறி வருகிறது என்பதில் சந்தேகமே இல்லை. ★

★ பிளாஸ்டிக்கைப்போல எல்லாருடைய மனதைக் கவர்ந்தது இதுவரை எதுவுமில்லை!

சர்வம் பிளாஸ்டிக் மயம்

ஆர். பி. மல்லாரி

ஒரு பத்திராதிபர், மிகவும் புத்திசாலித்தனமாக ஒரு தலையங்கம் எழுதி இருந்தார். ''முன்னே பார்த்தால் முதலியார் குதிரை போல இருக்கிறது; பின்னே பார்த்தால் நம்பியார் குதிரைபோல இருக்கிறது. ஆகையால்.........'' பத்திராதிபருக்கு முதலியாரை நோகச் செய்யவும் மனமில்லை; நம்பியாரிடம் விரோதம் ஏற்படுத்திக் கொள்ளவும் இஷ்டமில்லை!

இந்தப் போக்குக்குத் தற்காலத்தில் ஒரு பொருள் உருவகமாகக் கிடைத்திருக்கிறது. பிளாஸ்டிக்! அதாவது, உலகில் உள்ள அத்தனை ஆசாமிகளையும் திருப்தி செய்ய வந்திருக்கும் மாயப் பொருள்! ''பிளாஸ்டிக் வாட்ச் ஸ்ட்ராப்பினுல் கையில் கேடு உண்டாகும்!'' என்று சென்னை அஸெம்பிளியில் விவாதம் நடந்தது பலருக்கு ஞாபகம் இருக்கும். அதனுல் பிளாஸ்டிக்கின் மதிப்பு இன்னும் ஒருபடி உயர்ந்து விட்டது! காலில் போடும் செருப்பு முதல், தலையில் கவிழ்த்துக்கொள்ளும் தொப்பி வரையில், காதுகுடையும் 'குறும்பி' முதல் மூளை ஆபரேஷன் வரையில், எதுவும் பிளாஸ்டிக் தான்! எந்த உருவத்தில் எந்த உபயோகத்துக்கும் பயன்படுகிறது.

''இந்தக் காலத்துப் பெண்கள், கடிகாரங்கள் கட்டிக்கொள்ளத் தான் லாயக்கு!'' என்கிருர் மண வாழ்க்கையில் சலிப்படைந்த ஒரு தற்காலக்கவி! கடிகாரத்தின் 'கேஸ்' மட்டுமல்ல, மெல்லியலாளின் ஆடையும் பிளாஸ்டிக் 'மேட்'தான்!

''தாய் வளர்ப்பதைப்போல செலவு வேறென்றுமில்லை. அதனுல் 'நாய் ஜாக்கிரதை!' என்ற போர்ட்டைமட்டும் போட்டு விட்டேன்'' என்கிருர் ஒரு பங்களாவாசி.

போர்டு மாத்திரம் பிளாஸ்டிக்கில் அல்ல, நாயும் பிளாஸ்டிக் நாய்! நன்றி யறிதலையும் விலைக்கு வாங்கும் காலமல்லவா இது?

''ஜாவாவுக்கு சுருள் வளையல்...'' ஒரு நாகரிக பெண்மணி பேசி முடிக்கவில்லை. ஜாவா அவள் மகள் பெயர்! சுமித்ரா, ஜாவா, போர்னியோ இவை போன்றவை தானே நாகரிகச் சின்ன மனுஷ நாமதேயங்கள்!

இப்படிக் குழந்தைகளின் பிஞ்சு அங்கங்கள் முதல், பயங்கரமான முரட்டு தொழிற்சாலை வரை 'சர்வம் பிளாஸ்டிக் மயம் ஜகத்'தாகவே இருந்து வருகிறது!

வளரும் தொழில்

பிளாஸ்டிக் பெரிய தொழிலாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. இந்தத் தொழில் வெகு இளம் பிராயமுள்ளது என்ருலும், ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஆச்சரியமடையும் வகையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. சுலபமாகவும், விரும்பும் வகையிலும், வளைந்து கொடுக்கும் இதனுடைய தன்மையே, இதனுடைய விரும்பத்தக்க குணம்! வளைந்து கொடுப்பவர்கள்தான் பெரிய மனுஷர்களாக இருக்க முடியும் என்று நம்முடைய கவிகள் பாடினுர்களோ என்னவோ?

உலோகம், மரம், கண்ணாடி, மற்றும் கல், மண் முதலியவைகளிலிருந்து, வளைந்த சாமான்களைத் தயாரிக்க இருக்கும் கஷ்டத்தை யொட்டி, அந்தசாமான்களின்விலை அதிகமாக இருப்பதால், பிளாஸ்டிக் சாமான்களை மிகவும் மலிவாகப் பெற முடிகிறது. இதன்றி அனேக பெரிய பெரிய தொழிற்சாலைகளில் மிகவும் அத்தியாவசியமாக வேண்டி இருக்கும் பல சாமான்களுக்கு, இது ஒரு மூலப் பொருளாகவும் அமைந்திருக்கிறது. உதாரணமாக, மோட்டார், ரேடியோ, டெலிவிஷன், ரோடர் முதலிய பெரிய தொழிற்சாலைகளில் இதன் அத்தியாவசியத்தைக் குறிப்பிடலாம். எதிலும் பிளாஸ்டிக் முன் நிற்கிறது. பிரார்த்தனை செய்வதுகூட ஒரு தொழிலாக மாறி வரும் இந்தக் காலத்தில், பலர் முன் பிரார்த்தனை செய்யும் போது தற்கால பூசாரிகளுக்கு அதிக இன்பம் ஏற்படும்.

இந்தக் காலத்தில் தொழிலுக்கு மதிப்பு ஏது? 'பிஸின'ஸுக்குத்தான் மதிப்பு. பிளாஸ்டிக் ஒரு முக்கியமான வியாபாரப் பொருளாக மாறிவிட்டதிலும் வியப்பில்லை! பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட பல பொருள்கள், கட்டிடங்களுக்கு இன்றியமையாத சாமான்களாகவும் உபயோகப்படுகின்றன. அளவுக்கு மீறி படித்துவிட்ட நாகரிக யுவதி ஒருத்தி, தனக்கு ஒரு பிளாஸ்டிக் வீடு வேண்டுமென்று சொன்ன விஷயத்தை, சமீபத்தில் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். இந்த நாரிமணியைப் போன்ற வனிதாரத்தினங்களுக்கு வேண்டிய அநாவசியமான ஆடம்பரங்களை சம்பாதிக்கவே தற்காலக் கலாசாலை மாணவர்கள், முதல் வகுப்புப் பட்டத்துடன் குமாஸ்தாக்களாக உழைக்கிறார்கள் என்பது வேறு விஷயம்! பிளாஸ்டிக் போலவே அவர்களுடைய முதல் வகுப்பு டிகிரியும் அடுத்த நாளே இருக்கிற இடம் தெரியாமல், உடைந்து எங்கோ போய்விடுகிறது! பிறகு குமாஸ்தாக்களாக வரிந்து வரிந்து எழுதப் பழகிக் கொள்கிறார்கள்!

அவர்கள் கையில் இருப்பதும் பிளாஸ்டிக் பேனா! இந்தக் காலத்தில் உலோகங்கள் கிடைப்பது வர வர அரிதாகி வருவதால், பிளாஸ்டிக்கின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிவருகிறது. உலோகத்துக்குப் பதிலாக பிளாஸ்டிக் வஸ்துக்களை எப்படியெல்லாம் உபயோகிக்க முடியுமோ, அப்படியெல்லாம் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். "சென்றது கருதாய்; சேர்வது நினையாய்; கண்முன் நிற்பது காண்பாய்!" என்பது முது மொழியல்லவா?

நான்கு கிளைத்தொழில்கள்

பிளாஸ்டிக் தொழிலில் நான்கு கிளைத்தொழில்கள் உண்டு—இன்ஜெக்ஷன் மோல்டிங்—கம்ப்ரெஷன் மோல்டிங்—எக்ஸ்ட்ரூஷன்—ஃபாப்ரிகேஷன். பெயர்கள் தான் பெரிய பெயர்கள். இதன் பொருள் என்னவோ சாதாரணந்தான்! அந்த வேலையைத்தான் கிளைத் தொழிலில் செய்கிறார்கள்.

பிளாஸ்டிக் தொழிலுக்குப் பல உப பொருள்கள் தேவை. நாம் அவைகளை இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து பெறுகிறோம். முக்கியமான உப பொருள்களில் ஒன்றான (Pheonal Formaldehyde Moulding Powder) ஐ நம் தேசத்திலேயே உற்பத்தி செய்துகொள்கிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். வருஷந்தோறும் இதன் உற்பத்தி மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. இதில் உயர்ந்த ரகமாகத் தயாரிக்கப்படும் பௌடரிலிருந்துதான், எலக்டிரிக் சாமான்கள் முதலியவை பிரத்யேகமாகத் தயார் செய்யப்படுகின்றன.

இந்தப் பிளாஸ்டிக் தொழிலில் நாம் முன்னேற்றமடைய எத்தனையோமார்க்கமிருக்கின்றன, அபிவிருத்திக்கு இடமும் இருக்கிறது. இதற்கு திட்டங்களையும் கமிஷன்களையும் நிறுத்தி வேலையில் இறங்கவேண்டும்! இந்தத்தொழில் வளரவேண்டுமானால், இதற்கு வேண்டிய உபபொருள்கள் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

அந்தப் 'பௌட'ரைத் தவிர, பிளாஸ்டிக் தொழிலுக்கு முக்கியமாக வேண்டியது, ''ஸெல்லோஃபேன் பேப்பர்'' (Cellophane Paper) இதைத் தயாரிக்க நம் நாட்டில் வசதி உண்டு. சிந்த்ரியில் ஆரம்பிக்கப்பட்ட ரஸாயன உரத் தொழிற்சாலே, மறைமுகமாக, பிளாஸ்டிக் தொழிலுக்கும் — மிக உதவி அளிக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்று சொல்லுவதில் மிகையில்லே. ஆனல் உயர்தர பிளாஸ்டிக் பொருள்களே அடைய நாம் இந்தத் தொழில் பற்றித் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியம். எந்தத் தொழிலாக இருந்தாலும் குற்றம் குறைகள் இல்லாமல் இருக்குமா? மேலும் ஆராய்ச்சி செய்து முன்னேறினல் தொழிலும் வளமடையும்.

பலன் தரும் ஆராய்ச்சிகள்

''குற்றங் குறையில்லாத ஆசாமி ஒரு ஆபத்துள்ள ஆசாமி!'' என்கிறது ஒரு லத்தீன் பழமொழி! பூனுவில் நிறுவப்பட்டிருக்கும் நேஷனல்கெமிகல் லாபரேடரியில் இப்போது ஏதும் குற்றங்குறைகளிலிருந்தாலும் இந்தத் துறையில் செய்யும் ஆராய்ச்சி வருங் காலத்தில் மிகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லே.

நம்முடைய தேசத்தில் இந்தத் தொழில் மிகவும் பால்ய பிராயத்திலேயே இருக்கிறது. என்ருலும், இதில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் கவனிக்காமல் இருக்க முடியாது. மின்சாரத்துக்கு உபயோகப்படுத்தப்படும் பல பிளாஸ்டிக் பொருள்கள், வெளி நாட்டிலிருந்து வரும் சாமான்களோடு போட்டி போடும் வகையில், திறமையுடன்செய்யப்படுகின்றன. இவைகளின்றி, பல சாமான்களே நாம் வாழ்வில் தினசரி உபயோகப் படுத்துகிருேம். வாழ்க்கையின் நோக்கம் விரும்புவதைப் பெறுவது மாத்திரமல்ல; பெற்றதை அனுபவிப்பதுங் கூட அல்லவா?

பிளாஸ்டிக் சாமான்கள் எவையெவை என்று ஒரு லிஸ்ட் போட வேண்டுமானுல் பிளாஸ்டிக் தாளில் ஒரு குயர் இருந்தாலும் போதாது. ''கடல் நீரைப் போல உபயோகமில்லாதவைதான் உலகில் அதிகமாக இருக்கின்றன'' என்று சொல்லி இருக்கிருர் ஷேக்ஸ்பியர். பிளாஸ்டிக்கின் சர்வ வல்லமை அறியாதபோது சொல்லிய வாக்கு இது. நம் நாரீமணிகளிடையே இந்த பிளாஸ்டிக் படும் பாடு! அப்பேர்ப்பட்ட மகா கவியின் வாக்கையும் பொய்யாக்கிய பெருமை பிளாஸ்டிக்கையே சேரும்! இயற்கை சிருஷ்டித்துள்ள பொறுத்துக்கொள்ளக் கூடிய பெரிய தவறுகளின் சிகரம் மெல்லியர்தான் என்பது பிரமச்சாரி, சம்சாரிகளின் ஏகோபித்த அபிப்பிராயம். அந்த மெல்லியர்கள் விரும்பிக்கேட்கும் பிளாஸ்டிக் ஃப்ளேயிங்ஸாஸர் முதல், கழுத்து நெக்லெஸ் வரை, மீசையுள்ள ஆண்மகன் வாங்கித் தராமல் இருக்க முடியுமா?

பிளாஸ்டிக் இப்போது தூணிலும் உண்டு; துரும்பிலும் உண்டு. குழந்தைகள் கூட இனி பிளாஸ்டிக் விளேயாட்டுச் சாமான்களுடன் பிறந்தாலும் ஆச்சர்யப் படுவதற்கில்லே! அத்தனே விளேயாட்டுப் பொருள்கள்! இந்த விளேயாட்டுச் சாமான்கள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் வெளிநாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தது. பிளாஸ்டிக் அந்தப் பணத்தையெல்லாம் நம் நாட்டிலேயே தேங்க வைக்கிறது என்றறியும்போது, இன்னும் பல்வேறு சாமான்களே நம் நாடே உற்பத்தி செய்ய வேண்டுமென்றே விரும்புகிருேம். இந்தத் தொழில் நம் நாட்டில் தழைத்தோங்கும் என்பதிலும் நம்பிக்கை உண்டு.

''பிளாஸ்டிக்கில் போடும்காசு, ஹராமில்போடும் காசு!'' என்கிருர் என் நண்பர். இன்று நாலணு கொடுத்து வாங்கிய கப்பலும் ஏரோப்ளேனும் நொறுங்கித் தூளாகி விட்டனவே என்று அவருக்குக் கோபம்! வேண்டாத சாமான்களே அவர் எதற்காக வாங்குகிருர்? அத்தியாவசியமான பிளாஸ்டிக் பொருள்களே மட்டும் வாங்கட்டுமே! ★

மறதியின் மகிமை!

ஸி. ராஜப்பா

"ஸார்! எனக்கு ரொம்பவும் ஞாபகமறதி ஸார்! அதற்கு ஏதாவது ஒரு நிவர்த்தி சொல்லுங்களேன்!" என்றார் ஒரு ஞாபகமறதி ஆசாமி தன் நண்பரிடம். "நீங்கள் தினமும் சிரஸாஸனம் செய்யுங்கள்! உங்கள் ஞாபகசக்தி விரைவில் அதிகமாகும்!" என்றார் நண்பர்.

உடனே முதல் ஆசாமி அவரிடம் ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போட்டார். "ஸார்! இப்போது நீங்கள் சொன்னதை ஞாபகம் வைத்துக்கொள்ள ஒரு வழி சொன்னால் தேவலை...!" என்றாராம். எப்படி இருக்கிறது சம்பாஷணை!

இதைப்போல் 'மறதி'யின் விளைவால் அவதிக்குள்ளான பலரைப் பற்றி ருசிகரமான சம்பவங்களை நினைத்தால் நம் கவலைகளையெல்லாம் மறந்து, நிச்சயம் நாம் சிரிப்புக்கடலில் மூழ்குவோம் என்பதில் சந்தேகமேயில்லை.

நாம் செய்துவரும் அசம்பாவிதங்களுக்கு நம் மறதியே மூல காரணம் என்பதை அன்றாட வாழ்வில் நாம் கண்டு வருகிறோம். ஒரு சாதாரண நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம்.

அவசர அவசரமாக மொபைல் தபாலில் கடிதம் எழுதி சேர்க்க விரும்பி ஓடுகிறோம். 'க்யூவில்' நின்று பொறுமையை இழக்காமல் கார்டோ, கவரோ வாங்கி, 'பேனா கொண்டுவர மறந்ததன்' பயனாக அங்கு அறிமுகமாகாத ஒரு நபரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு பேனா வாங்கி, கடிதம் எழுதுகிறோம். எழுதியபின் பேனாவை ஞாபகமாகத் திருப்பித் தருகிறோமோ இல்லையோ அது அவரவர் குணநிசயத்தையும் ஓரளவு பொருத்தது. இல்லை, அவசர அவசரமாகக் கவரையொட்டி விலாசமெழுதாமல் போட்டுவிட்டும் தவிக்கக்கூடும்! அன்றி, விலாசத்தை ஜாக்கிரதையாக எழுதி, கவர் சரியாக ஒட்டி யிருக்கிறதா என்றும் பார்த்துவிட்டு, வேகமாகப் போய் தபால் பெட்டியில் போட்டபின், பேனா இரவல் வாங்கினவரிடம் வந்து நிற்போம். அங்கு தான் நம் மறதி நம்மை மட்டம் தட்டும்! அவசரத்தில் பேனாவை தபால் பெட்டியில் போட்டுவிட்டு, கையில் கவருடன் பேனா உதவி செய்த நண்பர் முன் நிற்கநேரிடும் போது நம் நிலையைக் கண்டு அவர் பரிதாபங் கொள்வாரா, இல்லை பல்லைக் கடித்தபடி நம் மேல் பாயமுற்படுவாரா?

மணிபர்ஸை மறந்துவிட்டு

பஸ்ஸில் ஏறிக்கொண்டு கண்டக்டர் சில்லரை கேட்க வரும்போது திடீரென்று சில சமயங்களில் நாம் கை, கால்களை உதறிக்கொண்டு ஓடும் பஸ்ஸிலிருந்து குதிக்க யத்தனிக்கிறோம். காரணம், வெளியே கிளம்பும் அவசரத்தில் ஜீவநாடியான மணிபர்ஸை மறந்து பஸ் ஏறி விடுகிறோம். கண்டக்டர் சில்லரை கேட்கும்போது 'உள்ளமே ஜில்லென துள்ளாதா?' பின்னே!—இந்த நிலைக்கு நம்மைக் கொண்டு வந்து அவதிக்குள்ளாக்கும் இந்த அற்புத சக்தி மறதிக்குத்தான் உண்டு.

★ மறதிக்கு அடிமையாகாத மனிதனே இல்லை. படைத்தவன் பாரபட்சமின்றி யாவருக்கும் மறதியை ஞாபகமாகக் கொடுத்திருக்கிறான்.

சின்னஞ்சிறு வயதிலேயே இந்த மறதி மனிதனை ஆட்கொண்டு விடுகிறது. வீட்டுக் கணக்குப்போடாத சிறுவனை எமன்போல் எதிரே நிற்கும் உபாத்தியாயர் மிரட்டிக்கேட்டால் அவன் ஞாபகமாகச் சொல்லி வரும் ஒரே விடை 'மறந்துட்டேன் ஸார்!' என்பது தான். சில சமயம் இதைச் சொல்லவும் மறந்து போய் 'எங்கப்பா ஊரிலே; இல்லே ஸார்!'' என்ற உண்மையைச் சொல்லி உபாத்தியாயரிடம் அடியோ, கிள்ளோ வாங்கிக்கொள்ளும் 'சிகாமணி'களும் உண்டு.

சரித்திர பாடம் மீது வெறுப்பு!

பள்ளி நாட்களில் நாம் சரித்திர பாடத்தை வெறுத்ததன் மர்மமென்ன? சரித்திர சம்பவங்கள் நடந்த வருஷங்களை நாம் என்ன முயற்சி செய்தும் நம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள போதிய சக்தியற்றவர்களாய் இருந்ததுதான் காரணம். சம்பவம் நடந்தது கி. பி. தானா, அல்லது கி. மு.வா? —பாழும் பானிபட்டு யுத்தங்களும், மகாராஷ்டிர யுத்தங்களும் ஏன் மூன்று முறை நடந்து நம் பிராணனை வாங்குகின்றன! கி. பி. 1526 என்றால் 'டக்'கென்று பாபருக்கும் இப்ரஹீம் லோடிக்கும் நடந்த சண்டை நமக்கு ஞாபகத்திற்கு வந்து நிற்கிறது. அன்றி, 'மூன்றாம் பானிபட் யுத்தம் யாருக்கு நடந்தது? அதன் விளைவு என்ன?' என்ற கேள்வியை நினைக்கும் போது, பிளாஸி யுத்தத்தில் போராடிக் கொண்ட மன்னர்களைத்தான் நாம் 'ஞாபகமாக' மனதில் கொண்டு எழுதுகிறோம்! ஷாஜஹான் ஜஹாங்கீரின் பிள்ளையா...இல்லை ஜஹாங்கீர் ஷாஜஹானின் பிள்ளையா என்ற சந்தேகம் உதிப்பதின் காரணமே நம் மறதியால் தானே!

பரிதாபங்கொள்வாரா
பல்லைக்கடிப்பாரா?

வேலைக்கு ஆபத்து!

மறதியைச் சாக்கிட்டு நாம் தப்பித்துக்கொள்ள நினைக்கும் பல சந்தர்ப்பங்களிலும் மறதி நம்மை பாதகமான நிலைக்குத் தான் கொண்டு வந்து நிறுத்துகிறது.

சமையற்காரரிடம் இந்த மறதி தலைகாட்டி விட்டதோ, அவர் வேலைக்கு ஆபத்து அப்போதே ஆரம்பம். உப்பு போட மறந்து எஜமானர் கண்டுபிடித்து விட்டால் ஒரு 'வார்னிங்' மட்டும் கொடுக்கப்படும். ஆனால் போதிய உப்பு பதார்த்தத்தில் போடப்பட்டிருந்து, 'போட்டோமா, போடவில்லையா' என்ற சந்தேகத்துடன் மேலும் கொஞ்சம் போட்டு விட்டாலோ, தீர்ந்தது! அன்றுடன் அவர் வாழ்வு உப்பு சப்பற்றதாகிவிடும்!

கடன் வாங்கும்போது ஞாபகமாகத் திருப்பிக் கொடுப்பதாக வாங்குகிறோம்! அப்புறம் அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பது ஏனோ நம் ஞாபகத்தில் நிலைக்க மறுத்து விடுகிறது! கடன் கொடுத்தவர் முன் ஞாபகப் பிசகாககூட நாம் எதிர்ப்படாமலிருந்து வர முயற்சிக்கும்போது, நட்சத்திரையன்போல் நம்மிடம் கடன் தொகை வசூலிக்க வரும் கடன்காரரைக் கண்டு நாம் நடுங்காமலிருக்க முடிகிறதா? தேவர்களையும் அசுரர்களையும் ஆட்டுவிக்கும் சக்தி இந்த மறதிக்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

எமனையே தடுமாறச் செய்தது!

பிராணபதியின் உயிரை மீண்டும் பெற எமனுடன் வாதாடும்

சாவித்திரி, எமனைத் தோற்கடித்தது எங்ஙனம் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்! 'எமதர்மராஜா! என் நாதன் உயிர் தாரும்!' என்று புலம்பும்போது அதைக் கொடுக்க மறுக்கும் புத்திசாலி எமதர்மராஜன் அவள் கோரியபடி குழந்தை வரம் அளித்துவிட்டான். பத்தினி தெய்வம் சாவித்திரி கணவனை அபகரித்துச் சென்ற எமனிடம் குழந்தைவரம் அளித்து விட்ட அசட்டுத்தனத்தைச் சுட்டிக்காட்டி வாதாடுகையில், எமன் வேறு வழியின்றி சத்தியவான் உயிரைத் திருப்பித்தருகிறான் அல்லவா? எமனையே நிலை தடுமாறச் செய்த இந்த மறதி நம்மையெல்லாம் ஆட்டி வைப்பதில் ஆச்சர்யமென்ன?

காதலன் தன் காதலியின் ஆசை முகம் மறந்து விடாமலிருக்க, காதற்சின்னமாக அடையாளப் பொருள் ஒன்றை வாங்கிக் கொள்ளுகிறான். அதை அவன் ஞாபகமாக வைத்துக் காப்பதில் அல்லவா அவன் காதலின் மகிமை அடங்கி இருக்கிறது!

கண்வ மகரிஷியின் சாபத்திற்குள்ளான சகுந்தலை தவித்த தவிப்பை நாம் மறக்க முடியுமா? துஷ்யந்த மன்னன், தான் அவளை சந்தித்ததையும், காந்தர்வ மணம் புரிந்ததையும் (இருபதாம் நூற்றாண்டு வாலிபனைப் போல!) மறந்தே விட்டான். ஆனால், அவன் கொடுத்து வைத்த மோதிரம் மீன் வயிற்றிலிருந்தும் மீறிக் கொண்டு வந்து, சகுந்தலையின் தூய காதலுக்கு சாட்சி சொல்லவில்லையா?

பிரம்மதேவனிடம் வரம் கேட்க வந்த அசுரனின் நாவில் சரஸ்வதி தேவி ஒரு பிழையை வரவழைத்து, தனக்களித்த உபதேச மந்திரத்தை அவன் மறந்து, தவறாக உச்சரிக்கும்படி செய்திராவிடில் கலைவாணியே நான்முகனிடமிருந்து அசுரன் கைப்பட வேண்டியவள் தானே!

ஹரிச்சந்திரன் மறந்து போய் கூடப் பொய் சொன்னதில்லை என்

"...எங்கப்பா ஊரிலே இல்லை ஸார்?"

பதை யறிய நாம் திகைப்புறுகிறோம். 'மறந்து போய்க்கூட உண்மை பேசமாட்டோம்' என்று பிடிவாதம் பிடிக்கும் 'ஜாபருல்லா கான்கள்' நம்முன் உலவி வரும் போது ஹரிச்சந்திரன் அப்படி இருந்ததில் ஆச்சர்யம் என்ன? இந்த மறதியின் மகிமையை விளக்க இன்னும் சில உதாரணங்கள்.

சில உதாரணங்கள்

மறதி எல்லோரையும் தன் வசப்படுத்தி விட்டாலும் அதற்கு ஒரு சாரார் மேல் அலாதி அபிமானம். அவர்களிடம் அது நிரந்தரமாகக் குடிகொண்டுவிடும்! மெய்வருத்தம் பாராமல், பசியைப் பொருட்படுத்தாமல், உலகச் சாவுகளை லட்சியம் செய்யாமல், கருமமே கண்ணாக இருப்பவர்களைக் கண்டால் மறதிக்கு அலாதி பிரியம். அவர்களோடு பிரியா நட்பு பூண்டுவிடும் இந்த மறதி!

அறிவியல் மேதைகளோ, விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களோ மறதியின் வசமாகாமல் இருந்ததே இல்லை.

ஆங்கில மகாகவிகளுள் ஒருவரான கோல்ரிட்ஜ், தான் பேச ஆரம்பித்து விட்டால், பிறர் தன்

பேச்சை கவனிக்கிறார்களா இல்லையா என்பதைச் சற்றும் லட்சியம் செய்யவே மாட்டாராம்! தன் போக்கில் தான் பேச விரும்பியதைப் பேசி முடித்து விட்டுத் தான் சூழ்நிலையைக் கவனிப்பாராம் அவர்.

ஜேம்ஸ் ஸ்டுவர்ட் மில் என்ற தன் நண்பரை கோல்ரிட்ஜ் ஒரு சமயம் சந்தித்தார். அவசர வேலையாக கிழக்கிந்திய கம்பெனி காரியாலயத்திற்குப் போய்க் கொண்டிருந்தார் ஜேம்ஸ். ஆனல் கோல்ரிட்ஜ் அவர் அவசரத்தை யுணராமல் வழக்கம்போல் தன் சம்பாஷணையைத் துவக்கி விட்டார். இடையில் ஜேம்ஸை பேசவிடாமல் தானே பேசிக்கொண்டிருந்தார். ஜேம்ஸுக்கு அப்போதைய நிலைமையில் கோல்ட்ரிஜுடன் பேசிக் கொண்டிருக்க விருப்பமில்லை. ஆனல் அவர் தன்னிடமிருந்து தப்பி விடாமலிருக்க கோல்ரிட்ஜ் அவரது கோட்பித்தான் ஒன்றை லாகவமாகப் பிடித்துக் கொண்டு அவரை 'போர்' அடித்துக் கொண்டிருந்தார். ஜேம்ஸ் சுற்றுமுற்றும் பார்த்தார். தெரு விளக்குக்கம்பம் தன் பின்னுலிருப்பதைக் கண்டதும் அவருக்கு ஓர் யோசனை உதயமாயிற்று. மெதுவாகத் தன் சட்டைப் பையில் வைத்திருந்த பேனு கத்தியை எடுத்து கோல்ரிட்ஜ் பிடித்திருந்த பித்தானை தன் கோட்டிலிருந்து நறுக்கிவிட்டு, நகர்ந்து விட்டார்!

தன் காரியத்தை முடித்துக் கொண்டு கிழக்கிந்திய கம்பெனியிலிருந்து வரும்போது, கோல்ரிட்ஜின் பரிதாப நிலை கண்டு ஜேம்ஸ் பிரமித்துப் போனர். கையில் பித்தானைப் பிடித்துக் கொண்டு, தெருவிளக்குக் கம்பத்தை ஸ்டுவர்ட்மில் என்று நினைத்து உரையாடும் அந்த மேதையை சுயநினைவுக்குக் கொண்டு வந்தவுடன், அவர் தன் அசட்டுச் செய்கைக்கு காரணம் தன் மறதியைத்தான் குறிப்பிட்டார். 'நினைவிழந்து செயலாற்றும்' இத்தகைய மறதியைத்தான் (Absent mindedness) என்கிறோம். பஸ் ஸ்டாப்புகளில் அவசரமாகப் போக யத்தனிக்கும் போது நம்மை 'போர்' அடிக்கும் சிலரிடமிருந்து தப்புவதற்கு வழி காட்டிய ஜேம்ஸ் ஸ்டுவர்ட்மில்லை நாம் மறந்து விடலாமா?

நட்சத்திரையன் போல்...

பெயரையே மறந்தார்!

இதே போல் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிஸன் வரி செலுத்தச் சென்ற இடத்தில் ஏதோ சிந்தனையில் மூழ்கி விடவே, வரிப் பணம் வாங்கும் குமாஸ்தா அவர் பெயரைக் கேட்டபோது அதைச் சொல்லத் தெரியாமல் விழித்தாராம்! அவரது எதிர் வீட்டுக்காரரும் அங்கு வந்திருக்கவே "எடிஸன்! எடிஸன்! உங்களுக்கு என்ன வந்து விட்டது?" என்று கேட்டவுடன்தான் எடிஸனுக்குத் தன் பெயர் ஞாபகத்திற்கு வந்ததாம்! இவரது மறதியைக் கண்டு சிரிப்பதா, அழுவதா?

திருமணம் நிச்சயமாகி, நடக்கவிருந்த தினம் ஆராய்ச்சியில் தீவிரமாக மூழ்கிவிட்ட விஞ்ஞானியை அவரது நண்பர், நடக்கவிருக்கும் திருமணத்தை ஞாபகப்படுத்தி, மணவிழா மண்டபத்திற்கு அழைத்துப் போனராம்! விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டதால் கரி, எண்ணை கலந்த உடுப்புடன் மணவிழாவுக்கு வந்தவர் தான் வெறிநாய் கடிக்கு மருந்து கண்டுபிடித்த லூயிபாஸ்டர்!— மறதியுடன் ஒவ்வொரு தடவை

விளையாடின போதும் இவர் வெற்றியடைந்ததேயில்லை!

ஒப்பற்ற ஓவியரும், விஞ்ஞானியும், என்ஜினியருமான லியனர்டோ டாவின்ஸியின் மூளையில் அவ்வப்போது அரிய யோசனைகள் தோன்றும். அனைத்தையும் செயலுருவில் காட்ட விரும்பி, ஞாபகத்திலிருந்து நழுவாமலிருக்க வேண்டி, அவர் தனித்தனி காகிதங்களில் குறித்து வைப்பாராம்! ஆனால் முடிவு சோகமாகவே இருக்கும். காரணம், அந்த அற்புத விஷயங்களைக் குறித்த மேதாவிக்கு அந்தக் கடிதங்களை வைத்த இடம் வெகு லகுவில் மறந்து விடுமாம்! விழுந்து விழுந்து தேடியும் கிடைக்காததால் கண்டவர்மேலே சீறிவிழுவாராம்! பாவம், மறதியின் சேஷ்டைகளை அவர் அறியவில்லையோ!

ஸர் ஐஸக் நியூட்டன், ஆராய்ச்சியிலீடுபட்டதன் பலனை கடிகாரத்தை கொதிநீரில் போட்டுவிட்டு, கையில் கோழிமுட்டையை வைத்துக் கொண்டு, அதை கடிகாரம் என்றெண்ணி மறதிக்கு அடிமையான சம்பவம் விஞ்ஞானத்தில் 'மறக்க முடியாத சம்பவம்.' இதைப் போல் விஞ்ஞானிகளை அடிமையாக்கி ஆண்டு வந்த மறதி இன்னும் சில அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டியுள்ளது.

ஆளைக்கண்டனர் ஆனால் பெயரை...?

புது நாடு கண்டுபிடிக்க முற்பட்ட டேவிட் லிவிங்ஸ்டனை வெகு நாட்களாகக் காணாததால் தேடிச் சென்ற குழுவில் மூன்று பேர்தான் உயிரோடிருந்தனர். லிவிங்ஸ்டனைச் சந்தித்தவுடன் அடையாளங் கண்டு பேச விரும்பி ஓடோடிச் சென்றனர். ஆனால் அவரை நெருங்கினவுடன் மூவருக்கும் அவர் பெயரே ஞாபகத்திற்கு வரவில்லை! "நீங்கள்... நீங்கள்தான்....அவர்.....அதாவது உங்கள் பெயர்...தான்!" என்று மூவரும் உளறியபின், முடிவில் லிவிங்ஸ்டனே தன் பெயரைச் சொல்லவும், "ஆமாம் அதுதான்! அதுதான்!", என்று மூவரும் மகிழ்ச்சிப் பெருக்கால் குதித்தனர். இவர்களது மறதியை நாம் எங்ஙனம் பாராட்டுவது?

மறதியின் வசப்பட்டு அவதியுற்றுவரும் பலருள் குறிப்பிடத்தக்கவர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், பேச்சாளர்களாவர். ஒன்று மாற்றி ஒன்றை மறதியின் விளைவால் இவர்கள் செய்து விட்டால் முடிவு விபரீதம் என்பதை நாம் சொல்ல வேண்டுமா?

மறதியை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருப்பதும் ஒரு நன்மையைக் கருதியே என்பதை நாம் சற்று சிந்தித்தால் உணர்ந்து கொள்ளலாம். மனதில் ஆழப் பதிந்த துயரச் சுவடுகள் என்றென்றும் மனிதனின் நினைவில் நிலைத்திருந்தால் அவன் வாழ்வது எப்படி? நாளாவட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அவன் நினைவிலிருந்து அகற்றவே மறதியை மனிதனுக்களித்துள்ளான் சிருஷ்டிகர்த்தா என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். உற்றார், உறவினர் 'மாஜி' மனிதர்களாகி விட்டால் நாம் கதறுகிறோம்—ஆனால் அந்த நினைவை காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிவரும் நன்மை மறதிக்கு இல்லாவிடில் நம் அழுகை ஓயும் நாள் எந்நாள்?

அமரத்வம் அடைந்த தேசத் தலைவர்கள், மகான்கள், இலக்கிய பிரம்மாக்கள் ஆகியோருக்கு நாம் சிலை செய்து போற்றுவதன் மர்மமென்ன? நாளாவட்டத்தில் நாம் அவர்களை மறந்து விடுவோம் என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு, அவ்வாறு நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே அவர்களை ஞாபகமூட்ட இந்தச் சிலைகளை நாம் ஸ்தாபித்து வருகிறோம்.

மறதியைப்பற்றி எழுதின இக் கட்டுரையை தபாலில் சேர்க்க மறந்து விடாமலிருக்க வேண்டி கைகுட்டை ஓரத்தில் ஒரு முடி போட்டு வைத்தேன்! ஆனால் அப்பப்ப...அந்த முடிச்சு எதற்காகப் போட்டேன் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள நான் பட்ட சிரமத்தை யுணர்ந்த போதுதான் மறதியின் மகிமையையும் உணர முடிந்தது! ★

நாட்டுப் பாடல்

காதலில் களங்கம்

ஜனககுமாரி

நாட்டு மக்கள் பாடிவரும் பாட்டுக்களை நாட்டுப் பாடல் என்று சொல்கிறோம். கிராமங்களிலே, தோப்புத் துறவுகளிலே, வயல் வெளிகளிலே, மைதானங்களிலே செல்லும்பொழுது காற்றிலே கலந்து காதிலே தொனிக்கும் இத்தகைய பாடல்களில் உள்ளத்தைக் கவரும் கவிதை இருக்கிறது. ஆனால் இலக்கண ஆசிரியர் காணும் யாப்பு இல்லை. இன்சுவை இருக்கிறது. இலக்கிய உயர்வு இல்லை. கவின் இருக்கிறது, கட்டுரை இல்லை!

காலவெள்ளம் இவற்றைக் கரைத்திலது. கடல் வெள்ளமும் அரித்திலது. நெருப்பின் நா இவற்றின் சுவையறியாது. ஏட்டிலே ஏருவிடினும் இவ்வாறு தோன்றும் எந்த இன்னலினாலும் அழிந்து போகாது தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் சிறப்புக் கொண்டு விளங்கும் உயிரும் ஆற்றலும் உள்ள இலக்கியமாக உள்ளது நாட்டுப் பாடல். அவைகளே நமது நாட்டின் பொக்கிஷம்; நாகரீகத்தின் சின்னம்; வாழ்க்கையின் ஓவியம்.

* * *

ஒரு வருடமாக கங்கு கரையற்ற காதலில் திளைத்துப்போய் இருந்த காதலன் கந்தன் இப்போது இரண்டு மாதங்களாக எட்டிகூடப் பார்க்கவில்லை. ஆம்? ஒரு பெண்ணை உயிருடன் வதைக்கும் வேதனையைவிட வேறு வாதனையும் உண்டோ? கந்தனையே நேரில் கேட்டு விடுவோமே என்றெண்ணிக் கொண்டு செந்தாமரை வெளிக் கிளம்புகிருள். உச்சி கொதிக்க, உள்ளங்கால் கொப்பளிக்க, களத்து மேட்டை நோக்கி அக் காரிகை விடுவிடென்று நடந்து வருகிருள்.

காலை முழுவதும் மாய்ந்த மேனியின் அலுப்பு ஒரு புறம்; உண்ட களைப்பு மறுபுறம். ஆக தம்மை மறந்து ஒவ்வொரு மரத்தின் கீழும் உறங்கினர். வயலில் வேலை செய்தவர்கள் அனைவரும். ஆயாசந்தீரக் களத்து மேட்டில் காற்று வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தவன் கந்தன் ஒருவன்தான்!

காயும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தன்னை நோக்கி செந்தாமரை வருவதைக் கண்டான் கந்தன். அவன் மனம் ஊசலாடியது. உணர்ச்சி அலைக்கழித்தது.

செந்தாமரையோ, தன்னை அழைத்துச் செல்ல எதிர்கொண்டு வருவான் தன் காதலன் கந்தன் என எண்ணி இறுமாந்தாள். ஆனல் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அருகிலே வந்து நின்றும் அவன் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஏன் என்றும் கேட்கவில்லை. பேதை செந்தாமரை பெருமூச்செறிந்தாள்.

''சித்தரத்தை பூத்துச்
சிமிக்கி போல் காய் காய்த்து
ஆத்தலைஞ்ச கப்பலைப்போல்
அலைகிறேன் கந்தா உன்னலே''

இதைக் கேட்ட கந்தனது சிந்தனை எங்கெங்கோ சுழன்று கொண்டிருந்தது. அவன் முகம்

> படியாத பாமரர்களால் அழகாகச் சிருஷ்டிக்கப்பட்ட இலக்கியமே கிராமிய இலக்கியம். அதில் காண முடிகிற சுகபாவம், இதயப் பண்பு, கற்பனை, சந்தநயம் முதலியவைகளை வேறெதிலும் காண முடிவதில்லை.

திடீரென்று மாறியது. கண்கள் ஒளி குன்றின. உதடுகள் உலர்ந்தன. சிறிது நேரம் இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது.

''என்ன? ஏன் பேசமாட்டேங்கிறீங்க?'' என்ற சொற்கள் திரும்ப கந்தன் காதில் விழுந்ததும், திடீரென்று சுய நினைவை யடைந்தவன்போல், செந்தாமரை பக்கம் திரும்பி, ''ஓ! செந்தாமரையா?'' என்றான். அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். நெற்றியைக் கவனித்தான். பச்சை நரம்பு நெற்றியில் படர்ந்திருக்கிறதா என்று பார்த்தான் போலும்! ''வைத்த கண் வாங்காமே ஏன் அப்படிப் பார்கிறீங்க?'' என்றாள் அவள்.

''ஆளான ஆளிருக்க
ஆணழகன் கந்தன் நானிருக்க
கேடு கெட்ட செந்தாமரை
கெட்டழிஞ்சு போனியடி''

என்றான் கந்தன். குத்தலாக அவன் கூறிய மொழிகளின் பொருளை தூய உள்ள முள்ள செந்தாமரை உணர்ந்தாளில்லை. தன் சரீரம் களங்கப்பட்டு விட்டதாகக் காதலன் கூறுகிறானென எண்ணிவிட்டாள். அதற்குக் காரணமும் இதோ காட்டுகிறாள்.

''வாழைப் பழமே—என்றை
வடிவில் உவந்த வண்டே—நீ
கை சோர்ந்து போனாயென்று
—நான்
அதிக கவலை கொண்டேன்
உன்னாலே''

தங்கள் இருவருக்கு மிடையே யுள்ள காதல் நாளுக்கு நாள் குறைந்து வருவதையும், அவன் சந்திக்காமல் இருப்பதையும் காணத் தனக்குச் சகிக்க முடியவில்லை யெனக் கண்கலங்க செந்தாமரை கூறினாள்.

கந்தனோ காதலில் சலிப்படைந்து விட்டான். செந்தாமரையைத் தட்டிக் கழித்து விடலாம் என்று எண்ணிக்கொண்டு அவன்,

''தின்ன கனிதான்—இனித்
தேவையில்லை எண்டிருக்கேன்
இச்சை வைச்ச பேர்களுக்கு
—அதை
ஈந்து கொடு செந்தாமரை''
என்று பரிகாசமாகச் சொன்னான்.

இதைக் கேட்ட செந்தாமரையின் உள்ளம் உடைந்தே விட்டது. அவளுடைய கற்பனைக் கோட்டை ஒரே நொடியில் நொறுங்கி விட்டது.

தான் மணம் செய்து கொள்ள முடியாது என்ற ஒரு சொல்லோடு மட்டுமின்றி,

''இச்சை வைத்த பேர்களுக்கு
—அதை
ஈந்து கொடு செந்தாமரை''

என்று வேறு சொல்லி விட்டானே? என்ன, அவள் ஒரு விலைமகளா? ஆம்! பசுத்தோல் போர்த்த புலிப் போல அவளுடைய காலைச்சுற்றி 'காதலி! கண்மணி!' என்று அலைந்தான் அன்று! ஆனால் இன்று...? ஓஹோ! இவ்வளவுதானா அவன் ஆண்மை? வீரம்!

அடப்பாவி? பெண் பாவம் பொல்லாது. எவ்விதப் பிராயச் சித்தத்திற்கும் கட்டுப்படாதது. காதல் என்பது இரண்டு உள்ளங்களை ஒன்றுபடுத்தும் ஓர் பாசம். அது தெய்விகமானது. தாய்மையுடையது. நிரந்தரமானது. பரம்பரையாகப் போற்றப்படுவது. ஒரு பெண்ணின் மனதைப் புண்படுத்திய தோடல்லாமல் அவள் காதலையும் புறக்கணிப்பதா நல்ல ஆண்மகன் செயல்? அவன் உண்மைக் காதலன் அல்லன். 'விடுகாலி' தான் என எண்ணி அவள் கூறிய பதில் அவனைத் தாக்கியது.

''கரும்பு ரசத்தை, மச்சான்
கண்டால் எறும்பறியும்
கனியருந்த வந்த வுன்னைக்
காலி யறியுமோ, கந்தா?''

கரும்பு ரசத்தை எறும்பானது கண்டதும் அது தீஞ்சுவையுடையது என அறியும். கனியருந்த வந்த உன்னைக் கண்டதும் நீ காவாலி என நான் அறிவேனோ

என்று செந்தாமரை கூறியதைக் கேட்டதும் கந்தனுக்கு கோபம் வந்து விட்டது.

''மலையருகே மேய்ந்து வரும்
மாடப் புருச் சாதிலிங்கம்—நீ
மேயும் இடமும் உன்ரை
மேய்ச்சலையும் நான் அறிவேன்''

என்று கூறி கொக்கரித்தான் கந்தன்.

அகங்காரமிகுந்த அவனுடைய விண் பழியைக்கேட்டு அவளை யறியாமலேயே 'பாதகா' என்று கூறிவிட்டாள். அதோடு,

''மாறு நெருப்பை மச்சான்
மடியில் அள்ளிப் போட்டது
போல்
ஆறு நெருப்பை மச்சான்
அள்ளி வந்து கொட்டா
தேங்கோ.''

என்றுமட்டும் சொல்லிவிட்டு, கடந்த காலத்திலே அவனுடன் கூடித் தன் களங்கமற்ற காதலைக் காட்டிய விதங்களில் தன் சிந்தனையைச் செலுத்தினள்.

சென்ற வருடம். இதே கதிரறுக் கும் காலம்! ''என்னுடைய கண் மணியே!'' என்று அன்பொழுகக் கூறினன். அன்றொரு நாள் மாலை வேளையில் வயலில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பும்போது வழியில் அவளைக் குறுக்கிட்டு வழிமறித்து,

''மாலையில் பொழுதடைய
மனிதரெல்லாம் வீடடைய
காலையில் கண்டடைய...ஒரு
கண்டெடுக்க நின்டவண்டி''

என்று அவனே முதன் முதலில் பேச்சுக் கொடுத்தான். அவனுடைய தோற்றம் அவளை அவனுக்கே அடிமையாக்கின. அன்று முதல் அவர்கள் காதலில் கட்டுண்டு மதி மயங்கினர். வேலைக்குப் போகும் போதும் இருவரும் சேர்ந்தே போவார்கள். ஒரு சமயம் அவளைக் காணமற்போனல்,

''குஞ்சும் முகமும், உன்
கூர் விழுந்த முக்காடும்
நெற்றி இளம்பிறையும்—என்
நித்திரையில் தோணுதடி''

என்று கூறி கொஞ்சுவான். ''என் வாழ்வு, தாழ்வு, சுகம், துக்கம் எல்லாம் நீயேதான்'' என்று கூறுவான். செந்தாமரை மகிழ்ந்து அவனை அப்படியே அணைந்து கொள்ளுவாள்.

அப்படிப்பட்டவனு இன்று......
கேடுகெட்ட செந்தாமரை—நீ

''கெட்டழிஞ்சு போனியடி''

என்று கூறி நிராகரிக்கிருன், பரிகாசம் செய்கிருன்?

செந்தாமரையின், மனம் அதை நினைக்க நினைக்க தாளவில்லை.

''காட்டுக்கு ராசாளி—நீ
கண்டவருக்கு நல்ல பிள்ளை
நாடாண்ட கொம்பன் — உன்ரை
நாணயத்தைக் காப்பாற்று''

என்று கேட்டுக் கொண்டாள்.

கந்தன் தேகம் கிடு கிடுவென்று நடுங்கிற்று. அவன் நினைத்த படியே நடந்து விட்டது. விளையாட்டாகச் செய்த காரியம் வினையாக முடியுமென அவன் எதிர் பார்க்கவில்லை. ''உன் நாணயத்தைக் காப்பாற்று'' என்ற சொற்கள் அவன் காதுகளில் விழுந்ததும், ''கொடுத்த வாக்குப்படி கலியாணம் செய்யச் சொல்கின்ருளா, அவள் வயிற்றிலுள்ள சிசுவிற்கு பிதா உரிமை வேண்டுகின்ருளா?'' என்பது மட்டும் அவனுக்கு உடனே விளங்கவில்லை. தெளிவாகத் தெரிந்து கொள்ள தந்திரமாக,

''ஆடு கொடியிலையை
அணிலிறங்கி மேய்ந்ததுபோல்
—உன்ரை
புள்ளைக் குடலில் ஒரு
பூச்சி குடி கொள்ளுதாமோ?''

என்று பட்டதும், படாததுமாய் கேட்டுவிட்ட பின்புதான் 'ஏன் கேட்டோம் அப்படி' என்று தோன்றியது அவனுக்கு.

என்ன? ஆண்களின் யோக்கியதையே அவ்வளவுதானு? சூதில்லாத சுடர்களின் சுகத்தைச் சுவைப்பதுமன்றி, சிசு ஜனித்து விட்டதா என்று அவர்களிடமா கேட்டுத் தெரிந்து கொள்வது? என்ன உலகமடா இது? அவள் கண்களில் அனல் கக்கின.

''வெட்டிய காட்டகத்தில்
 வைத்த நெருப்பது போல்,
பற்றுதடா என் வயிறு—நீ
 பாரவிலாக் கொண்டிடுவாய்
திட்டிப் படிப்பேன் உன்
 சீவனுக்குக் கேடு வரும்
வாழ்த்திப் படிக் கேன்—என்றன்
 மனக் கவலை தீருமட்டும்''

என்று கூறிக் கொண்டே பக்கத்தே நின்ற மரத்தின் மீது சாய்ந்தாள் செந்தாமரை.

கந்தன் மனம் இளகவில்லை.

செந்தாமரைக்கு அதை நினைக்க நினைக்க வேதனை தாள முடியவில்லை. நாளை அக்கம் பக்கமிருக்கும் பெண்கள் வம்பளப்பார்கள் என்ற வேதனையோ அதை நினைக்குந்தோறும் அவளை வாட்டியது. பின்னும் சொல்கின்ருள்.

''ஏழை நெருப்பு மச்சான்
 என் நெருப்புச் சுற்ருட்டில்
பாலன் நெருப்பு மச்சான்
 பல நெருப்புச் சுற்றுமடா''

என்று கூறிவிட்டு விம்மி விம்மி அழுது கொண்டே அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

அன்றிரவு நாற்புறமும் வைக்கோற் போர் வளைந்து விடப்பட்டிருந்தது. காவல் செய்த கந்தன் நடுவே வைக்கோற் போரிலே சாய்ந்தான். சாமக்கோழியுங் கூவி விட்டது. உறக்கம் வந்து அவனைத் தினற அடித்துவிட்டது. நன்ருகத் தூங்கினுன். விடியற்காலையில் வேலைக்குப் போகும் கூட்டத்தாருள் ஒருவன் தன் சுருட்டு தீர்ந்து விட்டதென எண்ணி, அதனை எறிந்து சென்ருன். அது தவறி வைக்கோலில் விழுந்து காற்றின் வேகத்தால் நெருப்பு மூண்டது. கந்தன் உறங்கிய போரிலேயே தீ மூண்டது. நெடி தெனச் சூழ்ந்தது. ஓங்கி எரியும் நெருப்பின் நடுவில் அகப்பட்டுக் கொண்டான் கந்தன். ஐயோ!' என்று அலறினுன். உதவிக்கு யாருமே இல்லை. காதலி இட்ட சாபத்தில் சிக்கிய கந்தன்,

''ஏழை நெருப்பு மச்சான்
 என் நெருப்புச் சுற்ருட்டில்
பாலன் நெருப்பு மச்சான்
 பல நெருப்புச் சுற்றுமடா''

என்ற சொற்களை நினைத்து, ''செந்தாமரை! செந்தாமரை'' என்று ஓலமிட்டான். ''பற்று நடா என் வயிறு'' என்று கூறிப் பதிவிரதை பகர்ந்த சாபமே பற்றியதுபோல் கந்தனைப்பற்றியது ஜ்வாலை. தீப் புண்களுடன் ''ஐயோ! செந்தாமரை! செந்தாமரை!!'' என்று புலம்பிக்கொண்டே மூர்ச்சையானுன். அவனுக்கு மூர்ச்சை தெளியவே இல்லை! ★

மகாத்மாவுக்குப் பிடித்த 'திங்கள்'

மகாத்மா காந்திக்கு திங்கட்கிழமை மிகவும் பிடித்தமானது. அத்தினத்தைதான் அவர் தன் மௌன தினமாகக் கொண்டிருந்தார். சத்யாக்கிரகப் போராட்டங்களில் அவர் சிறை சென்றதெல்லாம் திங்கட் கிழமைகளில்தான். மகாத்மா வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றுவிட்டு இந்தியா திரும்பியதும் ஒரு திங்கட் கிழமையில்தான்.

'ஷாநாமா' புகழ்பெற்ற பாரசீக நூல். அதை இலக்கிய உலகிற்களித்த சிருஷ்டிகர்த்தா—

கவி பிர்தவ்ஸி

மஆலி சாகிப்

பாரசீகப் பெரும் புலவர்களில் மிகப் பழமையானவர் பிர்தவ்ஸி என்ற மகாப்புலவரே யாவர். இவரது 1000–ம் ஆண்டு விழாவை மிகச்சிறந்த முறையில், பாரசீக (ஈரான்) மக்கள், அரசாங்க ஆதரவு பெற்றுக் கொண்டாடினர்கள்.

நமது நாட்டில் கம்பநாட்டாழ்வார் என்னும் ஈடிணையிலாத் தமிழ்ப் புலவரை நாமும்தான் கொண்டாடுகின்றோம். ஆனால் புலவர் பெருமான் கம்பன் எப்போது பிறந்தார், எப்படி வாழ்ந்தார் என்ற விவரங்களை, சரித்திர பூர்வமாக யாரும் எழுதிவைக்கவில்லை. பாரசீகர், புலவரைப் புலவராகத்தான் கொண்டாடுகிறார்கள்; நம் நாட்டாரைப்போல் புலவரை தெய்வமாக்குவதில்லை; அறிஞரை ஆழ்வாராக்கி விடுவதில்லை.

கம்பனையும் வள்ளுவரையும் ஔவைப்பிராட்டியையும் நாம், தெய்வசக்தியுடையவர்கள் என்றும் அற்புதம் பல சாதித்தனர் என்றும், ஏட்டிலும் திரையிலும் சித்திரித்துக் காட்டுகின்றோம். "புலவன் தெய்வ அவதாரமில்லை; மனித குலத்தின் பரமானுகூலத்திற்காக மனிதனுகப் பிறந்தவனே யாவன். மனிதரோடு பழகி, மனிதனுகப் பிறந்தவனேயாவன், மனிதரோடு பழகி, மனிதராக வாழ்ந்து, மனிதகுலத்து அறிவு விளக்கைத் தூண்டி சுடர்விட்டெரியச் செய்து விட்டு மனிதரைப்போல் மரித்து, மண்ணில் மறைய வேண்டியவனே புலவன்" என்பதுதான் பாரசீக மக்களின் கொள்கை.

தோட்டக்காரன்

இயற்கைப் புலவர்கள், ராஜாங்க அரண்மனையில் பிறப்பதில்லை; ரிஷி ஆச்ரமத்தில் அவதரிப்பதில்லை; ஆனல் பெரும்பாலான புலவர்கள் ஏழைக் குடும்பத்தில், வறுமையாளர் இல்லத்தில், உழைப்பாளர் உறைவிடத்தில்தான் தோன்றியுள்ளனர். உதாரணமாக, ஒட்டக்கூத்தர் எங்கு பிறந்தார், வள்ளுவர் என்ன தொழில் புரிந்து ஜீவித்தார், ஔவைப்பாட்டி எந்த விதத்தில் நாடோடியாய்த் திரிந்தார் என்பதையெல்லாம் சற்றே சிந்துத்துப் பார்த்தால், உண்மைப்புலவர்களின் லட்சணம் இனிது விளங்கும்.

பழங்காலப் பாரசீக நாட்டில், குரஸான் என்னும் மாவட்டத்தில், தூஸ் என்ற ஊருக்கு அருகில், அபுல் காசிம்ஹஸன் என்றொரு உழவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு நிலமும் தோட்டங்களும் உண்டு. அவனுக்குப் பிள்ளையாகப்பிறந்த மாசில்லாமணிதான் பிர்தவ்ஸி என்ற புலவன்.

'பிர்தவ்ஸி' என்பது, குழந்தைக்குப் பெற்றோர் வைத்த பெயரல்ல. காஸிம் ஹஸன் என்பதே பெற்றோர் இட்ட பெயர். ஆனல், பால்ய வயதிலேயே அறிவுடையவனுகவும், கற்பனைத்திறன் உடையவனுகவும் விளங்கி வந்தான் சிறுவன் பிர்தவ்ஸி.

தோட்டத்தில் புல்புல், மைனு, குருவி, முதலிய பட்சி ஜாலங்கள் கூடிக் குலவி கூச்சலிட்டுக் கொண்

டிருக்கு மல்லவா? அதை யெல்லாம் பாலகவி பிர்தவ்ஸி ஆழ்ந்து செவிமடுத்துக் கேட்பான்; சிந்திப்பான்; கற்பனை செய்வான். புல்புல் பட்சி புஷ்பத்தினிடம் என்ன கூறுகிறது என்று யோசிப்பான்; குயில் யாரை அங்ஙனம் 'கூகூ' என்று கூவியழைக்கிறது என்று சிந்திப்பான்; சிட்டுக்கள் 'கீச், காச், மூச்' என்று கத்துகின்றனவே இதன் கருத்தென்னவென்று பிர்தவ்ஸி, பகுத்தறிவைச் செலுத்திப் பார்ப்பான்.

''இயற்கை எழிலில்தான் தெய்வாம்சம் வியாபித்திருக்கிறது'' என்பது பாரசீக முதுமொழி. அதன்படி, மரஞ் செடி கொடி விருஷங்களின் செழுமையிலும், பட்சி ஜாதிகளின் விதவித வனப்பிலும், காதுக்கினிய கீச்சுத் தொனியிலும் தெய்வாம்சத்தைக் கண்டான் பிர்தவ்ஸி.

எனவே தோட்ட வேலையில் இருந்துகொண்டே கற்பனை கலந்துப் பாடவும் தொடங்கி விட்டான். இவனுடைய பாட்டுகளை பிற உழைப்பாளிகளும் கேட்டு இன்புற்றனர். சிறுகச் சிறுக வெளியூர்களிலும் பிர்தவ்ஸியின் பெயரும் பாட்டும் பரவத் தொடங்கின. இந்தப் புலவன் தோட்டவேலை செய்து கொண்டிருந்ததால், பெரும்பாலோர் இவனை 'பிர்தவ்ஸி' (தோட்டக்காரன்) என்றே அழைத்தனர். இதையே புலவனும் தனக்கு மக்கள் பரிவுடன் அளித்த பட்டப் பெயர் என்று ஏற்றுக் கொண்டான்.

மஹ்மூத் கஜ்னியின் காலம்

பிர்தவ்ஸி பிறந்த ஆண்டு கி. பி. 935 ஆகும். இது சுல்தான் மஹ்மூத் கஜ்னி பாரசீகத்தை கீர்த்தியுடன் ஆண்டு கொண்டிருந்த காலம். அக்காலை பாரசீக மன்னருக்கு கல்வி கேள்வி, ஆராய்ச்சியில் பற்று இருந்து வந்தது. மன்னன் தன் அவைக்களத்தில் பல அறிஞர்களையும் புலவர்களையும் பெரியோர்களையும் வைத்து ஆதரித்து வந்தான்.

மன்னன் மஹ்மூத் கஜ்னிக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. தன் ஜீவிய காலத்துக்குப் பிறகு தன் அரசகுலப் பெருமைகளை உலகோர் பாடிப் போற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அந்த ஆவல். எனவே, தன் ஆஸ்தானப் புலவர்களையும் அறிஞர்களையும் அழைத்து ஆலோசனை செய்தான்.

''வேதங்களும், புராணங்களும் காவியங்களும்தான் உலக மக்களிடம் நீடித்த காலம் நிலைத்திருக்கும் அமரத்தன்மை வாய்ந்தவை. எனவே பாரசீக மன்னர் குலப் பெருமைகள் நிறைந்த காவியமொன்றை இயற்றி நாட்டில் நன்கு பரப்ப வேண்டும்'' என்று ஆலோசனை கூறினர் சபையோர்!

''எந்தப் புலவர் எமது அரசகுலப்பெருமைகளை விளக்கி 60 ஆயிரம் பாட்டுகளாய் இயற்றி, அரச சபையில் ஒரு காவியமாய் சமர்ப்பிப்பாரோ, அவருக்கு சகல வித சௌகர்யங்கள் செய்து தரப்படுவதோடு, இறுதியில் 60 ஆயிரம் தங்க (மொஹரா) நாணயங்களும் இனம் தரப்படும்'' என்று அரசன் பகிரங்கப் பிரகடனம் வெளியிட்டான்.

புலவர்கள் முயற்சி

பாரசீக ஆஸ்தானப் புலவர்கள் ஏழுபேர். அவர்களில் சிலர் அரசாங்க ஆதரவு பெற்று அரசகுலக் காவியம் இயற்றுவதில் ஈடுபட்டனர்; இப்பெருங் காரியத்தை சாதிக்க ஏகாந்தமே சிறந்த இடம் என்று கருதி, ஊருக்கு வெளியே ஆற்றோரத்தை யடுத்த ஓர் உத்தியானவனத்திலே, சகல சௌகர்யங்களோடு, கூடார மடித்துக் கொண்டு காவியம் இயற்றுங் காரியத்தில் ஆடம்பரத்தோடு ஈடுபட்டிருந்தனர்.

''புலமை இயற்கையாக சுரக்கும் ஊற்று போன்றது தானே! முளைத்துப் படரும் பூங்கொடி போன்றது; சுயமே வீசும் மந்தமாருதம் போன்றது; தண்ணென வீசும் தென்றல் போன்றது. அரச விருதுகளோடும் ஆடம்பர சுக போக சௌகர்யங்களோடு

அமர்ந்து, ஏடும் எழுத்தாணியும் எடுத்து வைத்துக்கொண்டால், கவிதை யமுதம் சுரந்துவிடுமா ?''

அரசாங்கப் புலவர்கள் மண்டை உருட்டி மூளையைக் குழப்பிக் கொண்டு, இரவு பகலும் பலநாள் பாடுபட்டும் ஓர் ஆயிரம் பாட்டுக் களையும் இனிது இயற்ற முடிய வில்லை. எழுதி எழுதிக் கிழித்துப் போட்டுக் கொண்டிருந்தனர் பல ஏடுகளை. எழுதி யனுப்பிய ஓரிரு ஏட்டுப் பிரதிகளையும் மன்னர் மஹ்மூது பாராட்டிப் புகழவில்லை.

ஒரு நாடோடியின் வருகை

இங்ஙனம் கூடாரமடித்து காவி யம் இயற்றும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும்போது 'நாடோ டி'த் தோற்றத்தில் ஒருவர் அந்தக் கூடாரத்தினுள் வந்து,''நான் ஆஸ் தானப் புலவரைப் பார்க்க வேண் டும்'' என்றார். செய்தி அறிவிக் கப்பட்டது. பெரும் பிரயத்தனத் திற்குப் பிறகு பேட்டி கிடைத்தது. புலவர் தலைவர் வந்தவரை நோக்கி, ''உமக்குப் புலமைத் தன்மை இருக்கிறதென்கிறீரே, உமது பெயரென்ன? ஊரென்ன? தொழிலென்ன?'' என்று கேட் டார். ''என் பெயர் பிர்தவ்ஸி'' என்றார் வந்தவர்.

உடனே பிர்தவ்ஸிக்கு, ஆதரவு கிடைத்தது. கூடாரத்தில் தங்க இடமும் தந்தனர். நாடோடி யாக வந்த பிர்தவ்ஸி, பிறகு அரண்மனையில் தங்கி, தம் புலமை யைக் காட்டும் வாய்ப்பும் பெற் றார். அரசகுலப் பெரும் காவியம் இயற்றும் கைங்கர்யத்திலும் தீவிரமாய் ஈடுபட்டார் பிர்தவ்ஸி.

"ஷா நாமா"

பாரசீக இலக்கியத்தில் பிரதான மான காவியமாக விளங்குவது 'ஷா நாமா' என்பதாகும். இது பெரிய புத்தகம். சுமார் 60,000 பாட்டுக்களுக்கு மேலுள்ள ஒரு கிரந்தம். இதில் பாரசீக மன்னர் களுடைய பூர்வோத்திரங்களும், வீரப்பிரதாப வரலாறுகளும், தத் துவார்த்தங்களும் கூறப்பட்டிருக் கும். இதைப் பாரசீகர்கள் இக் காலே 'பொன்னேடு' என காத்து வருகின்றனர்.

புலவர் பிர்தவ்ஸி, அரசாங்க ஆதரவு பெற்று சுமார் 30 வரு ஷம் பிரயாசைப்பட்டு 60 ஆயிரம் செய்யுட்கள் ரூபத்தில் 'ஷா நா மா'வை இயற்றி முடித்து, அரசன் மஹ்மூத் கஜ்னியின் தர்பாரில் சமர்ப்பித்தார். அரங்கேற்றமும் நடைபெற்றது.

'ஆஸ்தானப் புலவர்கள் பொரு மைக் குணம் படைத்தவர்கள்' என்று எந்நாட்டிலும் வரலாறு கூறுகிறது. பாரசீகத்திலும் இத்தகைய துர்க்குணத்தவர் இருந்த னர். அன்னார் அரங்கேற்றத்தின் போது, ''பிர்தவ்ஸியின் பாட்டுக் களில் புலமைத்தன்மையில்லை; கற் பனை சிறப்பில்லை; அரசகுலக் காவி யம் என்ற பண்பு இல்லை'' என்று சொல்லி, மன்னரின் மனதை மாற்றி விட்டனர்.

வாக்களித்த பிரகாரம் மன்னர், புலவன் பிர்தவ்ஸிக்கு 60 ஆயிரம் பவுன்களை கொடுக்கவில்லை; ஏதோ சன்மானம் கொடுத்துவிடச் சொன் னான். அதை பிர்தவ்ஸி ஏற்றுக் கொள்ளவில்லை. அரசனை ஏளன மாகப் பேசிவிட்டு, உலகையே வெறுத்து, எங்கோ தலைமறைந்து வாழ்ந்தார். பிறகு, வறுமையில் கிடந்து வாடி, மரித்தும் போனார்.

பிர்தவ்ஸி மரித்த பிறகே, அவர் இயற்றிய பாட்டுக்களின் மகிமை பாரசீகர்களுக்குப் புலனாயிற்று. இன்று உலகத்தில் சிறந்த காவியங் களில் ஒன்றான 'ஷா நாமா' போற் றிப் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. ★

> பாடுபட்டுத் தேடிப் பணத் தை அடைபவனைக் கவி நிந் தனை செய்யவில்லை. அதைப் போற்றுதற் குரியதோர் பெருமையுடையதென்று எண் ணிப் புதைத்து வைப்பவ னையே நிந்தனை செய்கின்றார்.
>
> —பாரதி

விசித்திர விவாகங்கள்

"எஸ்ஸென்ஸ்"

விவாகங்கள் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொருவிதமாக நடக்கின்றன. சில தேசங்களில் நடக்கும் கல்யாணங்கள் பார்க்க விசித்திரமாக இருக்கும்.

நம் நாட்டில் விவாக சடங்குகள் அங்கங்கே மாறுபட்டிருந்தாலும் மணமகனும் மணமகளும் நீடித்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டே சடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நம்நாட்டில் உள்ள பூர்வீக குடிகளில் அநேகரிடையே விதவிதமான விவாக வழக்கங்கள் உள்ளன. உலகின் இதர பாகங்களிலும் இந்த வழக்கம் பல தினுசாகக் காணப்படுகிறது. கூடுமான வரை சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் இங்கு தரப்படுகின்றன. இன்னும் எவ்வளவோ வித விவாக விசித்திரங்கள் இக்கட்டுரையில் இடம் பெறாமல் போயிருக்கலாம்.

நம் நாட்டைப் பற்றிய வரையில் காதல் என்பதெல்லாம் கலியாணமான பின்பு தான் என்ற வழக்கம் இருந்து வருகிறது. காதலித்து பின்னர் மணம் செய்து கொள்ளும் மேனாட்டினர் நம் முறைகளையும் விசித்திரமாகக் கருதலாமல்லவா?

நவீன பாண்டவர்கள்

இந்தியாவில் உத்தர பிரதேசத்தின் வடமேற்குப் பகுதியைச் சேர்ந்த ஜவுன்ஸார் பவார் என்ற இடத்தில் வசிப்பவர்கள் பாண்டவர்களைப் போல ஒரு பெண்ணையே எல்லா சகோதரர்களும் மணந்து கொள்கிறார்கள். இவர்கள் பஞ்ச பாண்டவர்களையே வழிபடுகிறார்கள். மூத்தவன் தான் ஒரு பெண்ணை மணக்க வேண்டும். அவள் இதர சகோதரர்களுக்கும் எவ்வித சடங்குமின்றி மனைவியாகி விடுவாள். பிறக்கும் குழந்தை

முதுகின்மேல் நடந்து......

எல்லாருக்கும் பொது. தென் கோடியில் வசிக்கும் சில ஜாதியர் களிடையேயும் இப்பழக்கம் இருந்து வருகிறது.

ஒரிஸாவில் மால்யகிரி மலைச் சாரலில் ஜுவங் என்ற ஜாதியார் இருக்கிறார்கள். இவர்களுக்கு குரங்கு மாமிசம் என்றால் மிக பிடிக்குமாம். மணமாகாதவர் களுக்கு என்று தனி குடிசை இவர்களிடையே உண்டு. இவர் கள் சூரியனை வழிபடுகிறார்கள். மணமானவர்கள் மட்டுமே இப் பூஜையைச் செய்யலாம்.

வில்வப் பழத்துடன் கல்யாணம்

நேபாளத்தில் நேவார் ஜாதியில் பிறக்கும் பெண்ணுக்கு 5 வயதி லிருந்து 12 வயதிற்குள் அவளுக் கும் பரமசிவனுக்கு மிகவும் பிரியமான வில்வப்பழத்திற்கும் மணமுடித்து வைப்பார்கள். இதற் குப்பின் அவள் செய்து கொள் ளும் கல்யாணங்கள் எல்லாம் சட்டபூர்வமான ஒப்பந்தங்களே யொழிய வேறல்ல. மணம் செய்து கொண்ட வில்வப்பழத்தை மிக ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வருவார்கள்.

நேவார் ஜாதிப்பெண் ஒருத்திக் குப் புருஷனிடமிருந்து விவாக ரத்து தேவையாக இருந்தால், புருஷனின் தலையணைக்கடியில் இரண்டு வெற்றிலையையும் பாக் கையும் வைத்துவிட்டு தனக்கு பிடித்த புருஷனிடம் அவள் சென்று விடலாம். வில்வப்பழத் துடன் திருமணமாகி விடுவதால் அவள் கைம்பெண் ஆவதே இல்லை.

ஆனால், குர்க்கா ஜாதியில் கண் டிப்பு மிக அதிகம். மனைவி கண வனை விட்டுப்போவது என்பது அவர்கள் மனத்தாலும் நினைக்கக் கூடாத விஷயம். குர்க்காக்களுக் குள் சுயம்வரம் என்பது உண்டு. இது பேருக்குத்தான் நடக்கிறது. இந்த ஜாதியில் பல தாரங்களை மணந்துக்கொள்ளும் சம்பிர தாயங்கள் உண்டு. விதவா விவா கத்தை குர்க்காக்கள் அனுமதிப் பது இல்லை.

மரத்தைவிட்டு இறங்கு...

மாகர் என்ற ஜாதியினரில் மண மகன் தயிர் சாதத்தை கையில் ஏந்தி பெண் வீட்டில் போய் பிச்சை கேட்கவேண்டும். பெண் ணின் தகப்பன் தயிர் சோற்றின் மீது சில நாணயங்களை வைத்தால் தான் தன் பெண்ணை மணக்க சம்மதம் அளித்ததாக அர்த்தம்.

பாட்டுப் போட்டி

காதலன் காதலி சினிமாவில் ஒரு வரை ஒருவர் விரும்பி பாடுவதைப் பார்த்திருக்கிறோம். கிழக்கு நேபா ளத்திலுள்ள ராய் என்ற ஜாதியி னரிடையே இந்த வழக்கம் இருப்ப தைக் காணலாம். ஒரு வாலிபன் தனக்கு பிடித்த பெண்ணின்மீது ஒரு பாட்டை இட்டுக்கட்டி அவள் காது கேட்கப்பாடுவான். அவளும் பாடுவாள். இப்படி இருவரும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு பாடுவார்கள். இருவரில் ஒருவர் களைத்துத் தோற்றுப் போன பின்புதான் திருமணம் நடைபெறும்.

நீலகிரியில் வாழும் ஒரு ஜாதி யார் தனிக்குடிசை கட்டி அதில் பல கன்னிப் பெண்களை வசிக்கச் செய்கிறார்கள். இந்தப் பெண்களை மணக்க விரும்பும் வாலிபர்கள்

நீண்ட கழிகளை குடிசைச் சுவற்றில் செருகுவார்கள். இக்கழியின் அந்த முனையை எந்தப்பெண் பிடிக்கிறாளோ அவள் அக்கழியை உடையவனின் மனைவியாகி விடுவாள்.

மத்ய பாரத்தில் பலாஹி என்ற ஆதிவாசிகள் இருக்கிறார்கள். தாய் தந்தையரின் உறவிலே பெண் கொள்வதில்லை. ஐந்தாம் தலைமுறை வரையிலும் ரத்த சம்பந்தமும், மூன்றாம் தலைமுறை வரை சாதாரண தொடர்பும் உள்ள குடும்பங்களிலே திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய மாட்டார்கள்.

முறம், துடைப்பம் ஸ்ரீதனம்!

நீலகிரி பகுதியில் வசிக்கும் படகர்களிடையே விதவைகளே கிடையாது. ஒருவன் மனைவியாக இருந்து நீக்கப்பட்டு விட்டால், அவளை மணக்க மற்றொரு படகன் தயாராக இருப்பான். மணப்பெண்ணுக்கு திருமணத்திற்குமுன்பு மாப்பிள்ளை குறைந்தது நூறு ரூபாயாவது கொடுக்க வேண்டும். அத்தொகைக்கு வெள்ளி நகைகளாக வாங்கி பூட்டப்பட்டு விடும். முறம், உலக்கை, உரல், துடைப்பம் முதலியவைகளும் கூடுமானால் பசு, எருமை முதலியவைகளையும் பெண் வீட்டார் ஸ்ரீதனமாகக் கொடுப்பது வழக்கம்.

வங்காளத்தில் சில பழங்குடி மக்களிடையே விசித்திர வழக்கங்கள் இருந்து வருகின்றன. பாக்தி என்ற ஜாதியினரில் மணமகன் ஒரு மகிழ மரத்தை தழுவிக் கொள்வான். அன்று மாலை பெண் வீட்டுக்குச் சென்று போலிச்சண்டையில் கலந்துகொள்வான். இதில் பிள்ளை வீட்டார்கள்தான் எப்போதும் ஜெயிப்பார்கள். தாங்கட் என்ற ஜாதியார்களில் மணமகன் விவாகச் சடங்கின்போது ஒரு மரத்தின்மீது ஏறி உட்கார்ந்திருப்பான். மணப்பெண் அவனை கும்பிட்டு கீழே வரும்படி கெஞ்சுவாள். கொட்டு மேளம் முழங்க, மணமகன் மரத்திலிருந்து கீழே இறங்கி வருவான்; பின் திருமணம் நடைபெறும்.

ராஞ்சிக்கருகிலுள்ள பாலாமௌவில் வசிக்கும் கோல் ஜாதியார்கள் "போர்" புரிந்து காதலியை மனைவியாக்கிக் கொள்ளுகிறார்கள். இதை 'அசுரமணம்' என்றும் சொல்லலாம்.

வாழைக்குத் தாலி!

வில்வப் பழத்தை மணம் செய்து கொள்வது என்ற நேபாள நேவார் ஜாதி வழக்கம்போல, இந்தியாவில் வாழை மரத்திற்கும் தாலி கட்டும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்தது. கல்யாணம் செய்து கொள்ள விரும்பாத ஆண்களால் தான் இந்த முறை ஏற்பட்டதாம்.

முதல் பிள்ளைக்கு மணமாகாமலிருந்தால் வாழைக்கு தாலிகட்டச் சொல்லி பின்னரே இளைய பிள்ளைக்கு மணம் செய்ய வேண்டும்.

ஜப்பானில் முன்பெல்லாம் விவாகம் என்றால் குடும்பத்தைப் பொறுத்த விஷயமாக இருந்தது. இப்போது அப்படி யில்லை. அவரவர் சொந்த விஷயமாகிவிட்டது. இப்போதெல்லாம் பெண்கள் பெற்றோர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வதில்லை.

ஜப்பானிய மணமக்கள் ஊர்வலம் வரும்போது, இரண்டு பேர் சிவப்பு துணி ஒன்றை வீசிக் கொண்டே ஊர்வலத்துடன் வருவார்கள். சிவப்பைக் கண்டு பீடைகள் ஒழிந்துவிடுமாம்.

கிரீன்லாந்தின் கிழக்குக் கரையில் விசித்திரமாகக் கல்யாணம்



தரதரவென்று இழுத்து...

வாழைமரத்துக்கு தாலி...

நடைபெறுகிறது. மணமகன் மணப்பெண் வீட்டுக்கு திடுதிடுவென ஒருநாள் ஓடுவான். வீட்டினுள் உள்ள பெண்ணை கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் வீட்டுக்கு ஓடுவான். இதை எல்லாரும் பார்க்க வேண்டும். அப்போது தான் இத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்.

மணமான தம்பதிகளுக்கு பரிசு தருவது என்பது எல்லா நாடுகளிலும் உண்டு. ஆனால் மத்ய தரைக் கடலிலுள்ள சைப்பிரஸ்தீவில் இப் பரிசு தருவது விசித்திரமான முறையில் நடைபெறுகிறது. ஒரு பாயை விரித்து விடுவார்கள். ஒரு வருஷம் இப் பாய் இப்படியே கிடக்கும். பரிசுகளைக் கொடுப்பவர்கள் எல்லாரும் இப்பாயில் கொண்டு வந்து போடவேண்டும். மேற்கு ஆப்பிரிக்காவில் ஹோரோ வகுப்பினரில் ஒருவன் ஒருத்தியை மணக்கும் போது அவளின் சகோதரியையும் மணக்க வேண்டும்.

யுவர்கள் முதுகின்மீது நடந்து..

குக் தீவில் மணப்பெண் மணமகன் வீடு செல்லும் கோலத்தைப் போல எங்கும் பார்க்கவே முடியாது. அந்த கிராமத்திலுள்ள வாலிபர்கள் எல்லாம் மணப்பெண் வீட்டு முன் குப்புறப்படுத்திருப்பார்கள். மணப் பெண் அவர்களின் முதுகின்மீது நடந்து கணவன் வீட்டிற்குப் புறப்படுவாள். இந்த வழக்கம் இன்னும் அனுஷ்டிக்கப் படுகிறது.

தென் பஸிபிக் பிரதேசம் ஒன்றில் வசிக்கும் நிகிரிட்டோ ஜாதியில் மணமகளும் மணமகனும் குல குருவிடம் செல்வார்கள். அவர் இருவர் தலையையும் சேர்த்து முட்ட விடுவார். இது மணம் ஆகிவிட்டதாக அர்த்தம்.

ஜாவாவில் புதுமணத் தம்பதிகள் தங்கள் பற்களுக்கு கறுப்பு வர்ணம்பூசிக்கொள்கிறார்கள். ஏனென்றால் அப்போதுதான் அழகாக இருக்குமாம்.

பிணத்துக்கு மணம்

பழங்காலத்தில் பெர்ஷியாவில் மணமானவர்கள் என்றால் சமுகத்தில் அதை ஒரு கௌரவமாக மதித்திருந்தார்கள். யாராவது இறந்து விட்டால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி ஒரு ஆணையோ அல்லது பெண்ணையோ அழைத்து அவர்களுக்கு காசு கொடுத்து அப் பிணத்துக்கு மணம் செய்து வைப்பர்.

இந்த நாட்டின் பாலைவனப் பகுதியிலே ஒரு ஜாதியார் வசிக்கிறார்கள். மணப்பெண் குதிரை ஏறி மணமகன் இருக்கும் கூடாரத்தை சுற்றிவருவாள். பெண் வீட்டார் தடுப்பார்கள். கலவரத்துடன்தான் மணச்சடங்குகள் நடக்கும்.

சீனர்களின் மணச்சடங்கு இன்னும் விரிவாக இருக்கும். மணப்பெண்ணை ஒரு பல்லக்கில் வைத்து மணமகன் வீட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். அங்கு தெய்வ வணக்கத்திற்குப்பின் ஒரே கிளாஸில் மது அருந்துவார்கள். மணம் நடப்பதற்குமுன் மூன்று நாள் இவர்கள் துக்கம் கொண்டாடுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. மக்களுக்கு மணமானால் பெற்றோர்கள் இறந்து விடுவார்கள் என்ற குருட்டு நம்பிக்கை இவர்களிடையே இருந்து வருகிறது இதற்கு காரணம் எனத் தெரிகிறது. பல்லக்கில் வந்த பெண்ணை மணமகன் திரையைத் நீக்கிப் பார்ப்பான்.

தனக்குப் பிடிக்கவில்லை என்றால் பெண்ணை பல்லக்கிலேயே திருப்பி அனுப்பிவிடலாம்.

சீனாவில் மஞ்சள் நதியில் உள்ள படகோட்டிக் குடும்பங்களில் ஒரு விசித்திர சமிக்ஞை இருந்து வருகிறது. பெண்ணை மணக்க விரும்புபவன் ஒரு ஊசியை பெண்ணிடம் அனுப்புவான். ஊசியில் நூல் கோக்கப்பட்டு திரும்பி வந்து சேர்ந்தால் ''சரி'' என்று சம்மதித்ததாக அர்த்தம். வட இதாலியில் ஒரு ஜாதியினரில் பெண்ணை மணக்க விரும்புபவன் ஒரு பூச்சட்டியை அவளுக்கு அனுப்புவான். இவனை மணக்க அவளுக்கு சம்மதம் என்றால் இப் பூச்செடிக்கு அவள் தினம் தண்ணீர் ஊற்றுவாள். வேறு வாலிபனிடம் அவளுக்கு கண் என்றால் பூச்செடியை வாடிப்போகும்படி விட்டு விடுவாள்.

கிரேக்க நகரமான ஸ்பார்ட்டாவில் நல்ல தேகாரோக்கியமுள்ளவர்கள் தான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று சட்டமே இருந்தது. குழந்தைகள் நோஞ்சலாகப் பிறந்தால் அவை உயிருடன் விட்டுவைக்கப்பட மாட்டாது.

பலாத்கார முறை

பெண்ணை பலாத்காரமாக தூக்கிச் சென்று மணப்பது என்கிற முறை சில ஜாதியினரிடையே இன்னும் இருந்து வருகிறது. கிருஷ்ணன் ருக்மிணியை இப்படிதான் மணந்தான். பிருத்விராஜ் சம்யுக்தையை இம்முறையைக் கையாண்டே மணந்தான் என்று சொல்லலாம். ஆனால் பெண் இஷ்டப்பட்டே அந்த விவாகங்கள் அம்முறையில் நடந்தன என்பதை கவனிக்க வேண்டும்.

சில தேசங்களில் இந்த பலாத்கார முறையைப் பின்பற்றுவது போல் நடித்துதான் விவாகங்கள் நடத்தப்படுகின்றன. அராபிய நாட்டில் பெடுவின் ஜாதியினரிடையே இவ்வழக்கம் இருந்து வருகிறது.

அஸிரியாவில் அநேக வருஷங்களுக்கு முன்பு மணப்பெண்களை கடைவீதியில் வைத்து ஏலம் போட்டு வாலிபர்களுக்கு விற்று வந்தார்கள்.

ஸிரியாவில் முன்காலத்தில் ஒரு ஊரில் உள்ள அத்தனை யுவர்களும் அத்தனை யுவதிகளும் ஐக்யமாக மணம் செய்து கொள்வார்களாம். இதன் பலன் மனம் போனபடி அவர்கள் வாழ்ந்து வந்தனராம். ஆப்பிரிக்காவிலும் மெக்ஸிகோவிலும் அண்ணன் இறந்து விட்டால் அவன் மனைவியை தம்பிக்கு மணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்து வந்தது. சுக்ரீவன் வாலியின் மனைவியை மணந்ததாக இருப்பதால் அந்த வழக்கம் இந்த நாட்டிலும் இருந்திருக்கலாம். இம்மாதிரி வழக்கம் இப்போது எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த விசித்திர விவாகங்களை எல்லாம் கவனித்தால் ஒன்று புலனாகிறது. பெண்களை ஏதோ இன்பம் நுகரும் கருவி என்றே எண்ணப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆனால் இந்த எண்ணம் நாளடைவில் மறைந்து வருகிறது.

நிலையற்றவை!

''உதயகுமாரா! யாக்கையும் இளமையும் நிலையற்றவை. இதை நீ சதமென நம்பி ஏமாறாதே! உண்மையில் என்னை நீ காதலிக்கிறாய்...ஆனால் உன் காதலை நான் ஏற்கவில்லை. அதோ தலைநரைத்து வரும் கிழவியைப் பார்! அவள் இளமை தற்போது எங்கே?''

—மணிமேகலை.

சிறுவருக்கொரு சீரிய சிறை

ஸி. ஸ்ரீனிவாசன்

கடந்த பிப்ரவரி மாதம் பூராவும் வடகிழக்கு இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்க்கும் அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு. இந்திய சர்க்கார் அழைப்பின்பேரில், 'சுதேசமித்திர'னின் பிரதிநிதியாக, உத்தரப் பிரதேசம், பீகார், ஒரிஸா, மேற்கு வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ஐந்து ராஜ்யங்களிலும் ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகள் பல வற்றைப் பார்த்தேன். ஐஸத்நகரிலுள்ள இந்திய மிருகவர்க்க ஆராய்ச்சிக் கழகம், லக்ஷ்மணபுரியிலிருக்கும் மருந்து ஆராய்ச்சிக் கழகம், பூர்வதாவர ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல ஆராய்ச்சிக் கூடங்களைக் கண்டு அதிசயித்தேன். இந்தியாவிலேயே பெரிதான தராய் விவசாயப்பண்ணை, கீழ்திசையிலேயே பெரிதாகத் திகழப்போகும் ஹரிங்காடா பால் பண்ணை, உலகப்பெருந் திட்டங்களாக விருக்கும் தாமோதர், ஹிராகுத் அணைக்கட்டுகள் போன்ற மகத்தான சாதனைகளைக் கண்டு மலைத்தேன். கல்யாணி, கான்பூர் முதலிய பிரம்மாண்ட காலனிகளைக் கண்டு பிரமித்தேன். ஸிந்த்ரி, சித்தரஞ்சன் போன்ற இணையில்லா தொழிற்சாலைகளைக் கண்டு இறும்பூதெய்தினேன். அழகு கொழிக்கும் அஸ்ஸாமிலே காட்டையும் மேட்டையும் கடந்து காண்டா மிருகங்களை அவற்றின் இயற்கைச் சூழ்நிலையிலேயே கிட்ட நெருங்கி கண்டு களித்தேன்.

ஆயினும் இவையனைத்தையும் விட என் கருத்தை அதிகம் கவர்ந்தது, பரீல்லியில் ஒரு மூலையில் பதுங்கிக் கிடக்கும் பாலர் சிறைச்சாலைதான்! விசித்திரமாகப்படலாம், ஆயினும் இது முற்றிலும் உண்மை. இந்தியாவிலேயே இணையில்லாததொரு சிறைக்கூடம் இது—எங்கள் கோஷ்டியில் இருந்த எட்டு ராஜ்யங்களைச் சேர்ந்த பத்திரிகையாளரின் ஏக மனதான முடிவு இது.

இணையில்லாத சிறை

முதல் தேதி பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு இந்த சிறைக் கூடத்துக்குச் சென்றோம். முன்னறிவிப்பு ஏதுமில்லை; இந்திய சர்க்காரோ, உத்தரப் பிரதேச சர்க்காரோ வகுத்த பிரயாணத் திட்டத்தில் சேராத விஜயம் இது. எனவே நாங்கள் திடீரெனப் போய் நின்றபோது வாயிற் காப்பாளர்கள் எங்களை உள்ளே விட மறுத்து விட்டார்கள். நல்ல வேளையாக, எங்களுடன் உள்ளூர்ப் பிரமுகரொருவர் வந்திருந்தார்; அவர் சொல்லியனுப்பியதன் பேரில் அந்த சிறைச்சாலையின் சூபரிண்டெண்ட் அவசர மவசரமாக வந்து, 'வழிமறித்த நந்தி'களை விலகச் செய்தார். அந்த உள்ளூர்ப் பிரமுகர்மட்டும் எங்களுடன் வராதிருந்தால்... அப்படிப்பட்ட அரிய சந்தர்ப்பத்தை இழந்திருப்போம்! இதர இடங்களில் போல பத்திரிகையாளர் வருகைக்கு முன்னதாக சகலத்தையும் சீர் செய்து வைக்க அவகாசமில்லை. நாங்கள் பார்த்தது அந்த சிறைச்சாலையின் உள் வயணந்தான் என்பதற்காகவே இந்த வழிமறி படலத்தை இவ்வாறு விவரித்துள்ளேன்.

அந்த சிறைச்சாலை சூபரிண்டெண்ட் ஒரு முகமதியர். டாக்டர் முகமது ஹபீஸ் என்பது அவர்

பெயர். சாதாரணமாக சிறையதிகாரிகளிடம் நாம் காணக்கூடிய கெடுபிடியைக் கிஞ்சித்தும் காணோம். அவரிடம் அதற்கு மாறாக பண்பும் பவ்யமுமே உருவாகியவராய் எங்களை மிகுந்த அன்புடன் உபசரித்து, அந்த சிறைக்கூடத்தின் சரித்திரத்தை ஆதியோடந்தமாகக் கூறினார் அவர். 1889-ல் ஏற்பட்டதாம் அது; ஆனால் பாலர் சிறையாகவல்ல. முதலில் உத்தரப் பிரதேச சர்க்கார் தங்கள் பெண் கைதிகளுக்கென்றே இந்தக் கட்டடத்தைக் கட்டினராம். பிற்பாடு பெண்கள் சிறை லக்ஷ்மணபுரிக்கு மாற்றப்பட்டதும் தான் இக்கட்டடத்தில் பாலர் சிறை ஏற்பட்டதாம்—அந்த மட்டிலும், குமோன் மலைச்சாரலில் இதமான சீதோஷ்ணம் படைத்த பரீல்லியில் பாலரை வைத்திருப்பதற்குப் உ. பி. சர்க்காரைப் பாராட்டத்தான் வேண்டும்.



சிறையிலுள்ள தியேட்டர்.

கல்வி போதனை

சிறைச்சாலை நடைமுறை குறித்தும் சவிஸ்தாரமாகக் கூறினார் ஸ்ரீ ஹபீஸ். 19 வயதுக்குட்பட்ட குற்றவாளிகள் மட்டுமே இங்கு சேர்க்கப்படுகிறார்கள். முதல் மூன்று மாதங்களில் அவர்களுக்கு கடினமான வேலைகளே கொடுக்கப்படுகின்றன. உடலுக்கும் உள்ளத்துக்கும் உரமூட்டுவதற்காக, அப்புறம் அவர்களுக்கு நாட்டமுள்ள தொழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தினமும் காலையிலும் மாலையிலும் குறைந்தது எட்டு மணி நேர கல்வி போதிக்கப்படுகிறது.

இவ்வாறு பயனுள்ள முறையில் படித்துப் பயின்று பரீட்சைகளிலும் தேறியவர்களுக்கு பரீல்லியிலுள்ள டிராக்டர் ஒர்க்ஷாப் போன்ற தொழிற்சாலைகளில் வேலை வாங்கித்தரப் படுகிறது. 21-வது வயதில் ஒவ்வொருவனின் 'ரெகார்டு'ம் ஒரு போர்டினால் பரிசீலிக்கப்படுகிறது. திருந்திவிட்டவர்களென அது தீர்மானிக்கும் நபர்கள் உடனே விடுவிக்கப்பட்டு விடுகிறார்கள். 23 வயது வரையில் திருந்தாதவர்களை, 'உருப்படான்கள்' என்று தீர்த்துக்கட்டி மத்திய சிறைக்கு மாற்றி விடுகிறார்கள்.

ஆனால் இவ்வாறு நேர்வது வெகு அபூர்வம். விடுபட்டவர்கள் குறித்து சர்க்கார் 'விட்டேற்றி'யாக இருந்து விடுவதில்லை; விசேஷ விடுதியொன்றில் வைத்து போஷிப்பதுடன் அவர்களுக்கு இலவசமாகக் கல்வியும் அளிக்கப்படுகிறது. இதற்காக இந்த பாலர் சிறைக்கூடமும் பொருளுதவி செய்கிறது.

வெளியே வேலை பார்க்கும் கைதிகள் தங்கள் வருவாயில் ரூபாய்க்கு இரண்டணு வீதம் கொடுப்பதைக் கொண்டே இந்த உதவி. இன்றைய தேதியில் இந்த நிதியில் ரூ. 12 ஆயிரம் வரை சேர்ந்திருக்கிறது'' என்று எல்லாம் விவரமும் தந்து எங்களை வியப்புக்கடலில் ஆழ்த்திஞர் ஸ்ரீ ஹபீஸ்.

திருந்திய உள்ளம்

இதையெல்லாம்விட அவர் சொன்ன இன்ஞெரு விஷயம் இன்னும் ஸ்வாரஸ்யமாயிருந்தது. கைதிகள் வெளியே வேலைக்குச் சென்று வரும்போது காவலர் எவரும் தொடர்வதில்லையாம்! தாமாகவே சென்று, தாமாகவே ஒழுங்காகத் திரும்பிவிடுகின்றனராம்!—பரீல்லிக்குள் மட்டும்தான் என்பதில்லை, வெளியூர்களுக்கும் கூட அவர்களாகவே சென்று திரும்புகிருர்களாம். பிரசார கோஷ்டி, நாடகக்குழு, வாத்ய இசை ஜமா என்றெல்லாம் அமைத்துக் கொண்டு ஊரூராக, திருவிழாக்கள், கண்காக்ஷிகளுக்குச் செல்லுகிருர்களாம். யாரும் ஓடிப்போவதில்லை யென்பதோடு சமீபத்தில் நடந்த மற்ருெரு விந்தை நிகழ்ச்சியையும் ஸ்ரீ ஹபீஸ் விவரித்தார். நேபாள எல்லையோரப் பகுதி யொன்றில் ஒரு திருவிழாவுக்காக இவ்வாறு ஒரு கோஷ்டி தன்னந்தனியாகச் சென்றிருந்தது. குறிப்பிட்ட தினத்துக்குள்ளாகத் திரும்பவேண்டுமென அவர்களுக்கு உத்தரவு. மூடுபனிக் காலம் அது. வழி நெடுக மலைகள், அருவிகள். அவற்றை யெல்லாம் கால்நடையாகக் கடந்து 15மைல் தூரம் வந்ததும், பெருக்கெடுத்தோடிய காட்டாருென்று குறுக்கிட்டது. நள்ளிரவையும் நடுக்கும் குளிரையும் லக்ஷயம் செய்யாமல் அதை நீந்திக் கடந்து, குறித்த நேரத்துக்குள் சிறைச்சாலையில் வந்து குதித்து விட்டனராம் அந்தச் சிறுவர்கள். அவர்களில் பத்து வயது பாலகனுமொருவன் என்ருர் பெருமிதத்துடன்.

பின்னர் அந்த சிறைச்சாலையின் ஒவ்வொரு பகுதிக்கும் எங்களை அழைத்துச் சென்ருர். ''ஒளிவு மறைவு ஏதுமில்லை, நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று அவர் விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டு ஊன்றிப் பார்த்தோம். ஒருமுறைக்கு இரு முறையாகக் கண்ணைக்கசக்கி விட்டுக்கொண்டு நன்ருகப் பார்த்தோம்...என்ன ஆச்சரியம்! ஒரு இடத்திலாவது குப்பை, கூளம், தூசி, துர்க்கந்தம் என்று ஏதாவது இருக்கவேண்டுமே, ஊஹூம், கிடையாது! அது மட்டுமா, சீரான பாதைகளும், வரிசை வரிசையாக மலர்ப் பாத்திகளும் முகமன் கூறி வரவேற்று, 'இது சிறைச்சாலையல்ல, சோலையே' என்று பறைசாற்றின!

ஒரு புறத்தில் கல்விக்கூடம். மறுபுறத்தில் பயிற்சிப்பள்ளி—அதைத்தாண்டிஞல் மடைப்பள்ளி அடாடா, அதுவும்கூட எவ்வளவு துப்புறவாக இருக்கிறது? சிறை போஜனம் என்ருலே குடலைக் குமட்டும் என்பது பிரசித்தம். ஆஞல் இங்கு சுத்தமான சூழ்நிலையில் தயாரிக்கப்பட்டவற்றைப் பார்த்தபோதோ அவை வடநாட்டுப் பண்டங்களாயிருந்த போதிலும் நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்துவிட்டது! அடுத்தாற் போலிருந்த காண்டீனில் அந்த ஆவலைத் தணித்துக்கொண்டு சிறையறைகளைப் பார்வையிட்டோம்.

இரண்டு மூன்று சிறுவருக்கு ஒரு அறை வீதம் கொடுத்திருக்கிருர்கள். விசாலமான அறை. காற்று, வெளிச்ச வசதிகளெல்லாம் தாராளமாகத்தானிருக்கின்றன. ஆயினும் தடித்த கம்பிக் கதவுகளைப் பார்த்தபோது 'சிறை நெடி' அடிக்காமலில்லை. இதை ஸ்ரீ ஹபீஸிடம் நாங்கள் சுட்டிக் காட்டியதும், ''பழைய சிறையின் அறிகுறி இந்தக் கதவுகள். இவற்றை அகற்றிவிட்டு சாதாரண ஜன்னல், கதவுகள் போட பணத்துக்கு எழுதியிருக்கிறேன். அனுமதிகிடைத்துவிடும்!''என்று நம்பிக்கையுடன் சொன்ஞர். அப்படியே ஆக வேண்டுமென்று

சொல்லிவிட்டு, ஆஸ்பத்திரியைப் பார்க்கச் சென்றோம்.

ஆனால் பெயருக்குத்தான் அது ஆஸ்பத்திரி. வரிசையாகப் பல படுக்கைகள் இருந்தபோதிலும் ஒன்றில்கூட நோயாளியைக் காணோம். எப்படி இருக்க முடியும், இவ்வளவு சௌக்கியமான சூழ்நிலையில்? ''நானே ஒரு டாக்டர். நான்தான் இதை நேரிலே கவனித்துக் கொள்கிறேன். ஆனால் இங்குவந்த பிறகு வைத்தியத் தொழில் மறந்துகொண்டே வருகிறது. எனக்கு நோயாளி கிடைப்பது அவ்வளவு துர்லபமாயிருக்கிறது'' என்று சந்தோஷமும் வருத்தமும் போட்டியிடக் கூறினார் ஸ்ரீ ஹபீஸ். ''இப்படியே நீடிக்கப்பட்டு வைத்தியத்தொழிலும் மறக்கக்கூடாது'' என்று கூறிவிட்டு விளையாட்டு மைதானத்துக்கு விரைந்தோம். அங்கே அந்தச் சிறைச்சாலையிலிருந்த 188 பேரும் ஒருங்கே கூடியிருந்தார்கள். ஒழுங்காக ராணுவ தோரணையில் பாண்டு வாத்யங்கள் வாசித்ததைக் கேட்டு ரசித்துவிட்டுத் திரும்பும் வழியில் முக்கியமான மூவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார் ஸ்ரீ ஹபீஸ்.

பத்து வயது பாலகன் அவர்களிலொருவன். பால் பணம்கூட மாறவில்லை. ஆனால் அதற்குள்ளாக தோழனொருவனைக் குளத்தில் அமுக்கிக்கொன்றுவிட்டானாம் அவன். அதோடு நிற்காமல் சடலத்தை எரிக்கவும் முயன்றபோது பிடிக்கப்பட்டு ஆயுள் தண்டனைக்காளாகியிருக்கிறான். பார்த்தால் பரம சாதுவாகக் காணும் இவனா அவ்வளவு பயங்கரச் செயலில் ஈடுபட்டான்? நம்பமுடியவில்லை எங்களால். முடியாதுதான் என்றார் ஸ்ரீ ஹபீஸ். ''பையன்நல்லவன்தான். எல்லாம் விளையாட்டால் வந்த வினை'' என்று பெருமூச்சுடன் கூறினார் மேலும்.

அடுத்ததாக எங்களுக்கு அறிமுகமானவனும் ஒரு கொலைக் குற்றவாளிதான். ஆயினும் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான் இவன். ''தானாகவே ஒழுங்காகப் போய்த் திரும்பி, கருத்துடன் படிக்கிறான்'' என்று மிகவும் பெருமையுடன் கூறினார் சூபரிண்டெண்டு. ''போய்வரலாம் ஆனால் மற்ற மாணவர்கள் இவனை கைதி என்று கேலி செய்து,



சிறைச் சிறுவர்களின் கைவேலை.

ஈனப்படுத்தாமலிருக்க வேண்டுமே?'' என்று கேட்டேன். ''பேசக்கூடாது! இவன் கைதி என்ற விஷயம் இந்த நாலு மதில்களைத் தாண்டி வெளியே யாருக்குமே தெரியாது. இங்குள்ள சிப்பந்திகளில் யார் மகனோ என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் சகமாணவர்கள். வெளியே வேலைக்குச் செல்லும் மற்றவர்களைப் பற்றியும் அவ்வாறே அபிப்பிராயமேற்பட வைத்திருக்கிறோம்'' என்று பதிலளித்தார் அவர்.

தமிழ்ச் சிறுவன்

கடைசியாக அறிமுகமானவன் தான் நம்மைப் பொறுத்த வரையில் மிக முக்யமானவன். ஏழுமலை என்ற அந்தச் சிறுவன், சென்னையை யடுத்த குன்றத்தூரைச் சேர்ந்தவனும். கும்பமேளாவின் போது குருக்ஷேத்திரத்தில் பிடிபட்டானும். பல காலங் கழித்து தமிழனைக் கண்டு தாய்மொழியைக் கேட்டதாலோ என்னவோ கண்ணிலே ஜலம் ததும்ப ஆரம்பித்தது அந்தத் தமிழகச் சிறுவனுக்கு. ''ஒண்ணுமே குத்தம் செய்யலே ஸார். ஒண்டியா வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தேன்னு சந்தேகப்பட்டு இங்கே கொணந்திட்டாங்க ஸார்!'' என்று விம்மினன் அவன். ஆச்வாஸப்படுத்தி விசாரித்தேன். குன்றத்தூரில் தாய் தந்தையர் இருப்பதாகக் கூறினன். விடுதலைக்கு முயற்சி செய்யட்டுமா என்று கேட்டபோது, ''வேண்டாம், படிக்கக் கொள்ள இங்கேயே வசதியாயிருக்குது'' என்று மறுத்து விட்டான் அந்தப் பையன். சிறைச்சாலையின் சௌகர்யத்துக்கு இந்த பதில் நல்ல சான்றுதான் என்றாலும் கண்காணத இடத்தில் அனதையாக அச்சிறுவன் இருப்பதைக் காணச் சகிக்கவில்லை எனக்கு. அதிகாரிகளிடம் சொன்னேன்; அவன் விஷயத்தைப் புனர்ப்பரிசீலனை செய்வதாக வாக்களித்தார்கள். அம்மாதிரிச் செய்தார்களா என்பது எனக்குத் தெரியவில்லை; ஆனல் அந்தச் சிறுவனிடமிருந்து சென்ற மாதம் எனக்கு வந்த கடிதத்திலிருந்து அதுவரை அவன் விடுதலையாகவில்லை என்பது மட்டிலும் தெரிகிறது.

சிறைக்கூடத்தின் சிறப்புக்கு ஏழுமலை இவ்விதம் 'சர்ட்டிபிகேட்' கொடுத்த போதிலும் ஸ்ரீ ஹபீஸ் பற்றிச் சந்தேகம் தீரவில்லை எனக்கு. ''என் குழந்தைகள்'' என்று குழையக் குழையப் பேசுகிருரே, உண்மையிலேயே இந்தச் சிறுவர்களிடம் அவருக்கு அன்பு உண்டா? அல்லது வெறும் வேஷம்தானு? என்று தெரிந்து கொள்ள ஆவல் மூண்டது. ஏழுமலையிடம் கேட்டேன். ''தகப்பனையும்விட பிரியமாயிருக்கிறார்'' என்று பளிச்சென பதில் சொன்னன் அவன்—நாங்கள் பேசியது தமிழ் மொழியில். என்ன பேசுகிறோம் என்பதே ஸ்ரீ ஹபீஸுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் மிரட்டக் கூடும் என்று பயப்படவும் இடமில்லை. எனவே அவன் உண்மையைத்தான் கூறினன் என்பதில் ஐயமென்ன?

அவனையும் அழைத்துக் கொண்டு நாடக அரங்கத்துக்குச் சென்றோம். ஆம், சிறைக்குள்ளேயே அழகியதொரு கொட்டகையைக்கட்டி அதைச் சிறுவர்களே நேர்த்தியாக அலங்கரித்திருக்கிறார்கள். உள்ளே நுழைந்ததும், ''இதோ வந்துவிடுகிறேன் ஸார்'' என்று சொல்லி விட்டு நழுவிவிட்டான் ஏழுமலை. சிறிது நேரம் கழித்து மேடையிலிருந்து தமிழ்ப் பாட்டொன்று ஜம்மென்று ஒலித்தது. அதைத் தொடர்ந்து ஜிகினச்சட்டை ஜொலிக்க ராஜநடை போட்டுக் கொண்டு பாடியவண்ணமே வெளிவந்தான் ஏழுமலை! அவன் அன்று பாடிய பாட்டு இன்றும் அவனை நினைத்தால் என் காதுகளில் ஒலிப்பதாகவே தோன்றுகிறது. இதற்காகவே அவனை சிறையில் வைத்திருப்பார்களோ என்ற எண்ணத்துடன் அவனிடம் பிரியா விடைபெற்று, நான் மற்றவர்களுடன் கிளம்பமுற்பட்டேன். ★

கால் நூற்றாண்டிலே

ஆர். கே. அய்யா

25 வருஷங்களுக்கு முன் நம் நாடு அன்னியர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்தது. இன்று நாம் சுதந்திர மக்களாகி விட்டோம். ஆனால் இந்த 25 வருஷங்களில் தான் எவ்வளவு மாறுதல்கள்? முன்னேற்றம் பல துறைகளில் இருப்பினும் சில துறைகளில் தரம் மிகவும் குறைந்தே தான் இருக்கிறது. ஸ்ரீ ஆர். கே. அய்யா இவைகளை எல்லாம் இங்கு தொகுத்துத் தந்திருக்கிறார்.

இந்தக் கால் நூற்றாண்டுக்குள்... அப்பா! என்னென்ன மாறுதல்கள்!

ஒரு துறையிலா, இரண்டு துறையிலா! சமூக, பொருளாதார, கல்வி கலை, கலாசார இலக்கியத் துறை அனைத்திலும் தான் எவ்வளவு புரட்சிகரமான மாறுதல்கள்!

முற்போக்கா? பிற்போக்கா? சிந்திக்க வேண்டிய விஷயம்.

அன்னதானத்திற்குப் பிரசித்தி பெற்ற தமிழகத்திலே ரேஷனும் அதன் உடன் பிறந்த பிளாக்மார்க்கெட் பித்தலாட்டங்களும் இந்தக் கால் நூற்றாண்டில் அவதரித்தவையன்றோ? நான்கு ஆண்டுகளுக்கு முன் வரை, ஞாயிற்றுக் கிழமைகளில் சூரியோதய காலத்தில் ரேஷன் என்ற பெயரில் பாலர்கள் முதல் விருத்தர்கள் வரை யாசகம் செய்து வந்ததை இந்தக் கால் நூற்றாண்டிலல்லவா கண்டோம்!

விருந்தோம்பல் பண்பாடுடைய தமிழர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னே தங்கள் வீட்டிற்கு வராத உறவினர்களை, தங்களை மதியாதவர்கள் எனக்கருதி உறவாடுவதில்லை. ரேஷன் காலத்திலோ வந்தவர்களுடன் உறவாடினால் மீண்டும் வந்து விடுவார்களோ என்ற பயத்தால் உறவாடுவதில்லை.

ஹோட்டலுக்குப் போவதை அநாகரீகமாகக் கருதிவந்தது போக, தற்போது எங்கே, யார் புது ஹோட்டல் திறந்திருக்கிறார்கள் என்று அலையும் ஹோட்டல் அபிமானிகளின் எண்ணிக்கை இந்தக் கால் நூற்றாண்டில் எவ்வளவு பெருகிவிட்டது!

நான்கு நாள் முன்பே...

"நான்கு நாட்களுக்கு முன்னதாகவே" என்றும் விவாகபத்திரிகைகளில் எழுதுவது கால் நூற்றாண்டிற்கு முன் இருந்துவந்த சம்பிரதாயம். மனப்பூர்வமாகவே அவ்விதம் விரும்பியும் வந்தார்கள் மக்கள். விவாகம் என்பது பந்து வர்க்கங்களும் சிநேகிதர்களும் ஒன்று கூடுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. இப்பொழுது விவாகம் அரைமணி விவகாரம் ஆயிற்றே! ஆனால் வரதக்ஷிணைக் கொடுமை அதிகரித்திருக்கிறதே யொழிய குறையவில்லை.

அதுமட்டுமா? 25 ஆண்டுகளுக்கு முன்னே சாரதா சட்டம் வந்தது. 14 வயதுக்குக் குறைவான பெண்களுக்கு விவாகம் செய்விக்கக் கூடாதென்றுதான் சட்டம் வற்புறுத்தியது. இது மசோதாவாக முதலில் பிரசுரிக்கப் பட்டபோது, அடடா! ஹிந்து சமூகத்திற்கே உலைவைக்கப்பட்டு

விட்டதாகக் கிளப்பப்பட்ட கூச்சல் சொல்லத்தரமன்று! அப்பொழுது கூச்சலிட்டவர்களின் வழித்தோன்றல்களின் தற்கால நிலை என்ன? 28 வயதான பிறகு தான் இந்து வம்சங்களிலுதித்த ''கன்னிகை''களின் சுயம்வரத்தைப்பற்றிய யோசனை ஏற்படுகிறது இதற்கிடையேஇந்த ''கன்னிகைகளுக்கு'' ''பாய் பிரண்ட்ஸ்'' (ஆண் நண்பர்கள்) ஏற்படுகிறார்கள். ''லவ் அட்பர்ஸ்ட் ஸைட்'' அதாவது கண்டதும் காதல், காந்தர்வ விவாகம், உடன்ரத்து எல்லாம் ஏற்பட்டும் விடுகின்றன.

''ஹிந்து'' போன்ற பிரபல தினசரிகளில் ''மணமகன் - மணமகள் தேவை'' என்ற விளம்பர பத்தியை பார்த்தால் விநோதமான விளம்பரங்களை நாம் காணலாம். சில விளம்பரங்கள் ''டிஸ்போஸல்'' அதாவது பைசல் செய்வது என்ற பத்தியில் வருவதற்கு பதிலாக இந்த விவாக ''மாட்ரிமோனியல்'' பத்தியில் வந்திருக்கிறதே என்று நாம் சங்கடப்படுவோம்.

கால் நூற்றாண்டுக்கு முன் கதர் ஆடை புனிதத் தன்மைக்குச் சின்னமாக இருந்தது. அதைத் தரித்தவர்கள், யோக்கியர் என்று கருதப்பட்டு வந்தனர். இதில் சந்தேகமில்லை. ஆனால் தற்காலத்தில் கதர் ஜிப்பா பிளாக்மார்க்கெட், பித்தலாட்டத்தின் சின்னமாக மாறிவிட்ட கொடுமையைத்தான் என்னென்று சொல்வது!

எதற்கும் இன்ஜெக்ஷன்!

25 ஆண்டுகளுக்கு முன்பே இன்ஜெக்ஷன் அபூர்வமாகக் கையாளப்பட்டு வந்தது. இப்பொழுது ஸர்வம் இன்ஜெக்ஷன் மயம்! தும்மலா? ஒரு இன்ஜெக்ஷன், பசி இல்லையா ஒரு இன்ஜெக்ஷன், அதிகப் பசிக்கு ஒரு இன்ஜெக்ஷன், ஜலதோஷத்திற்கும் பென்ஸிலின், ஜுரதோஷத்திற்கும் பென்ஸிலின்.

நிகழ்காலத்திலே புதுப்புது நோய்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவை நாகரிகத்தின் முன்னேற்றமென்பதில் சந்தேகமில்லை. நவீன நோய்களுக்கு என்னென்ன பெயர் வைப்பதென நவீன டாக்டர்கள் தவிக்கின்றனர். அவர்களுக்கு இன்ன வியாதி என்று கண்டு பிடிப்பதும் (டயகனேஸ்) கஷ்டமாக இருக்கிறது. இந்த நவீன டாக்டர்கள் எப்பொழுதும் புதிய நோய்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால் பழைய நோய்களின் ''லட்சணங்களை இவர்கள் மறந்துவிட்டு, நோயாளிக்கு இது எந்தப் புது நோயாக இருக்கலாம் என்ற சிந்தனையில் மூழ்கி விடுகின்றனர். இறுதியில் நோயாளியின் சவப் பரிசோதனையில்தான் நோயைப்பற்றிய உண்மைகள் புலப்படுகின்றன!

முன்பு நகரங்கள் ஞாயிறன்று தான் ஜேஜே என்று இருக்கும். இப்பொழுது ஞாயிற்றுக்கிழமைகளில் நகரங்களுக்குச் சென்றால் துக்கம் கொண்டாடுகிற மாதிரியான ஒரு தோற்றம்! வாரத்திற்கு ஒருநாள் விடுமுறை - எல்லோருக்கும் ஒருநாள் விடுமுறை - அனைவருக்கும் அவசியம்தான். ஆனால் அந்தக் காலத்தில் செக்குமாடு மாதிரி உழைத்து வந்தபோதும்கூட முதலாளி—தொழிலாளி என்பது கீரி—பாம்பு, பூனை—எலி போன்ற பரஸ்பர விரோதி என்ற மனோபாவம் ஏற்பட்டிருக்கவில்லை.

'பாப்பர்' வாரம்

அந்தக் காலத்தில் 25 ரூபாய் மாதம் வருவாயுள்ளவன் மாத இறுதியில் குறைந்தது ரூ. 5 ஆவது மீதப்படுத்துவது சுலபம். ஆனால் இப்பொழுது அதே குடும்பத்திற்கு ரூ. 250 மாதம் வருமானம் வந்தாலும், கடைசி வாரத்தில்அதாவது'பாப்பர்'வாரத்தில் (முதல் வாரம் தங்கவாரம், இரண்டாவது வாரம் வெள்ளி, மூன்றாவது செம்பு, நான்காவது 'பாப்பர்' வாரம்) 10 ரூபாயாவது கைப்பற்று கடன் இருக்கும்.

முன்பு ஸ்தல ஸ்தாபனங்களில், பரம்பரை குடும்ப கௌரவமும், செல்வாக்கு மிகுந்தவர்கள் பதவி

வகித்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த பணத்தைச் சமூக நலனுக்கு செலவு செய்தார்கள். இப்பொழுது இந்த பதவிகள் பணம் சம்பாதிப்பதற்கான உபாயங்களாக உபயோகிக்கப் படுகின்றன.

கல்வித்துறையில்தான் எவ்வளவு துரித முன்னேற்றம்!

25 ஆண்டுகளுக்கு முன்னே காலேஜுகள் மாணவர்கள் இல்லாமல் காலியாகக் கிடந்தன. ஸ்கூல் பைனல் பரீட்சைக்கு ஒருவாரத்திற்கு முன்னேயே சில காலேஜுகளிலிருந்து ஆசிரியர்கள் ஹைஸ்கூல்களுக்கு "பிள்ளைகள் பிடிக்க" செல்வதுண்டு. அப்படியிருந்தும் 150 மாணவர்கள் இருக்கக்கூடிய வகுப்பில் 45 பேர்கூட இருக்கமாட்டார்கள். இப்பொழுது ஜூலை ஆரம்பமாகட்டும்; அட்மிஷன் ஜுரம் 110 டிகிரிக்கு மேல் அல்லவா போகிறது! தீயணைக்கும் என்ஜினல்கூட இந்த ஜுரத்தை அணைக்க முடியாதே! வகுப்புவாரி விகிதாசாரம் ஏற்பட்டும் கதி மோட்சமில்லையே!

படிப்பின் தரத்தில்தான் என்ன முன்னேற்றம்! ஸ்கூல்பைனல் பரீட்சை எழுதிய மாணவனுக்கு முன்பெல்லாம் ஆங்கிலம் நன்ருக எழுதவரும். நடை பிரமாதமாக இல்லாவிடினும், இலக்கணப் பிழை இருக்காது. அப்பொழுது மாணவர்கள் அதிக புஸ்தகங்களையும் சுமந்து சென்றதில்லை. இப்போது சினிமா நடிகைகளைப் போல் உடை உடுத்துக் கொண்டு, தலையில் ஒரு சுமைப்பூவுடனும் இடுப்பில் ஒரு மூட்டை புஸ்தகங்களுடனும் பள்ளிக்கும் காலேஜுகளுக்கும் செல்லும் நாரீ மணிகளைக் கண்டு எந்த வாலிபனுல்தான் ரஸிக்காமல் இருக்க முடியும்? தற்கால பி. ஏ. க்களின் கல்வி அறிவும், உலக விஷயங்களில் உள்ள ஞானமும், பப்ளிக் ஸர்விஸ்கமிஷன் அறிக்கைகளிலிருந்து அம்பலமாகிறதே! சர்க்கார் உத்யோகங்களுக்காக இக்கமிஷன் நடத்தும் பரீட்சைகளில் ஸ்கூல் பைனல்கள் முதல்,எம்.ஏ.க்கள் வரை ஆஜராகின்றனர்; தங்களுடைய ஞான சூனியத்தையும் அம்பலப்படுத்துகின்றனர்.

முன்பெல்லாம் கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிக்கூடம் திறக்கப்படும் சம்பவம், குடும்பங்களில் அவ்வளவு கடுமையான பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணுது. ஆனுல் இப்பொழுதுதோ, பள்ளிக்கூடம் போகும் குழந்தைகள் உள்ள ஒரு மத்யதர குடும்பத்திற்கு ஜூலை என்ருல் கிலிதான். ஏனெனில் அம்மாத பட்ஜெட்டில் ரூ. 100 தனியாக ஒதுக்கியாகவேண்டும். சர்க்காருக்கு மட்டும்தான் இந்த "டெபிஸிட்பைனுன்ஸிங்" முறை (பற்ருக்குறையை சரிக்கட்டாமல் அப்படியே விட்டுவைக்கும் பட்ஜெட் முறை) சாத்யம்; பிரஜைகளை இந்தமுறை திவாலில் அல்லவா கொண்டு விடுகிறது?

ஸ்டிரைக் ஜுரம்

மாணவர்களிடையே இப்பொழுது இருந்துவரும் ஸ்டிரைக் மோகம் இருக்கிறதே இது ரொம்ப அபாரம். பரீட்சை கேள்வி பேப்பர் கடினம்—ஸ்டிரைக், தேவிகுளம் பீர்மேடு தமிழகத்திற்கு இல்லை—ஸ்டிரைக். என். ஜி. ஓ. களுக்காக— அனுதாப ஸ்டிரைக். தொழிலாளர்களுக்காக அனுதாப ஸ்டிரைக். ஒழுங்கீனமாக நடந்ததற்காக ஒரு மாணவனை தண்டித்ததற்கு ஸ்டிரைக்—இப்படி பலரகம்.

மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தாலும்கூட, ஆசிரியர்கள் தங்கள் தொழிலின் மேன்மையில் ஒரு திருப்தியைக் கண்டு வந்தனர். இப்பொழுது பணத்திற்காக எதையும் செய்யும் துணிவு ஏற்பட்டிருக்கிறது. பரீட்சைக் கேள்வித்தாள்கள் 'அவுட்' ஆவது இப்பொழுது சர்வ சகஜம். முன்பெல்லாம் இது அபூர்வம்.

கலை, கலாசாரத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தைத்தான் வருணிக்க முடியுமா?

கால் நூற்றாண்டுக்கு முன்பு பேசும் படம் இல்லை. பயாஸ்கோப்—அதுதான் பேசாப் படம் ஓரிரு பெரிய நகரங்களில், அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இருட்டறைகளில் காட்டப்பட்டு வந்தன. படம் ஓடிக்கொண்டிருக்கையில் ஒருவன் தொண்டை கிழிய கதை சொல்லிக் கொண்டிருப்பான். கிராமங்களிலும் சிறிய கிராமங்களிலும் ஆட்டகால சட்டத்தை அனுசரித்து இரவு 9 மணியிலிருந்து காலை 4 மணி வரை, சம்பூர்ண ராமாயணம், தசாவதாரம், பவளக்கொடி போன்ற நாடகங்கள் நடைபெறும். இந்த நாடகங்களில் ராவண வேஷம் தாங்கியவன், ''ராம நீ ஸமானமெவரு'' என்ற தியாகராஜ கீர்த்தனையை ''என்ட்ரன்ஸ் ஸாங்காக'' (மேடை பிரவேசப் பாட்டு) பல ஸ்வரங்களுடன் வெளுத்து வாங்குவதும், அரிச்சந்திர நாடகத்தில் மயானத்தில் சந்திரமதி அழுவது போன்ற கட்டங்களுக்கு ''ஒன்ஸ்மோர்'' சமயோஜிதம் போல் அங்கீகரிக்கப்பட்டு வந்ததும், லக்ஷ்மணன் மூர்ச்சை போட்டு விழுந்திருக்கையில் ராமன் வேஷம் போட்டவர், ராக ஆலாபனை, ஸ்வரம் நிரவலுடன் அழுவதும், கொட்டகையில் கலகம் செய்தவர்கள் போலீஸாரிடம் ஒப்புவிக்கப்பட்டு வந்ததும் சம்பிரதாயங்களாகும். அத்துடன் ஆண்கள்தான் பெண் வேஷம் பூண்டு நடித்து வந்தனர். பெண்ணைப் போலவே ஆண் நடிப்பது தானே நடிப்புக்கலை. இக்கலையில் சிகரம் வகித்து வந்தவர்களுக்குக் கூட அந்தக் காலத்தில் சமூகத்தில் கௌரவஸ்தானம் கொடுக்கப்படவில்லை. கூத்தாடிகள் என்றுகூட கேவலமாகச் சொல்வதுண்டு. ஆனால் இப்பொழுது? சினிமா நடிகர்கள் கிடக்கட்டும். நடிகைகளின் ''பேட்டி''க்கு தவம் கிடப்போர் எத்தனை பேர்!

கோடம்பாக்கம்தான் சென்னையில் ஹாலிவுட்! சினிமாத் தொழிலில் இந்தியா உலகிலேயே இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது. அதாவது பிரிட்டனைக்கூட மிஞ்சிவிட்டது! அமெரிக்காவுக்கு அடுத்தபடி இந்தியாதான் என்பதில் நமக்கு இன்னும் சந்தேகம் ஏற்படுவானேன்?

இப்பொழுது டான்ஸ் ஆடாத பெண்கள் இல்லை எனலாம். எல்லாரும் நாட்டியக் கலையை பழகக்கூடிய தகுதியுடையவர்களா என்பது கவனிக்க வேண்டியதில்லை. குழந்தை பிறக்கும் போதே சினிமா பாட்டை பாடிக்கொண்டும் டான்ஸ் ஆடிக்கொண்டும் பிறக்கையில், கலைத்துறையில் முன்னேற்றமில்லை என்று சொல்ல யாருக்குத்தான் துணிவு வரும்?

இப்பொழுது விவாகத்தை அரை மணியில் முடித்து விடுகிறோம். விவாகரத்துக்கும் இப்பொழுது சட்டம் இடம் கொடுத்து விட்டது. அரைமணியில் நடைபெற்ற விவாகத்தை அரைவிநாடியில் ரத்து செய்து கொள்ளும் சந்தர்ப்பம் வெகு தொலைவில் இல்லை. அடுத்த கால் நூற்றாண்டில் முன்னேற்றம் மின்னல் வேகத்தில் இருக்குமென்பதில் என்ன சந்தேகம்?

முன்பெல்லாம் இரண்டு மைல் நடந்து போவது சகஜம். இப்பொழுது ஒரு பர்லாங்கு கூட நடப்பதற்கு பலமில்லாமல் ஒரு மணி நேரம் 'கியூவில்' காத்திருந்தாவது பஸ்களில்தான் போகிறோம். இதெல்லாம் முன்னேற்றத்தின் அறிகுறிகளல்லவா?

இந்த முன்னேற்றம் எழுத்தாளர்களிடையிலும் ஏற்படாமலில்லை. அவர்கள் மட்டும் என்ன விதிவிலக்கா? எதில் முன்னேற்றமென்று கேட்கிறீர்கள்? பொறாமையில்தான்! ஒருவன் எழுதுவது மற்றவனுக்குப் பிடிக்காது. ''என்ன ஸார் எழுதுகிறான்; வெறும் 'ஷாலோ' என்று தீர்ப்பளிப்பார் அந்த நிலைமையில் ஒரு எழுத்தாளர்.

இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் இக்கட்டுரையைப் படித்து முடிக்க கால் நூற்றாண்டு ஆகிவிடுமோ என்று ஆசிரியர் பொறுமை யிழந்துவிட்டால்? ஆகவே, கட்டுரையை சுருக்கமாகவே முடித்துவிட்டேன். ★

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப் படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

நல்ல பாடம்!

எங்கள் ஆபீஸ் தலைமை குமாஸ்தா எப்போதும் 'சிடுசிடு' வென்று முகத்தை வைத்துக் கொண்டு குமாஸ்தாக்களிடம் ஏதாவது குற்றம் கண்டுபிடித்த வண்ணம் இருப்பார். சிறிய பிழைகளுக்கெல்லாம் தாசில்தாரிடம் கோள் சொல்லி குமாஸ்தாக்களை அழ வைப்பார். அதனால் குமாஸ்தாக்களுக்கெல்லாம் இவரை ஒரு நாள் மட்டந்தட்ட வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

எங்கள் ஆபீஸில் அல்லூர் ராமுடு என்ற ஒரு குமாஸ்தா இருந்தான். அவன் எங்கள் எல்லோரையும் விடத் துணிச்சலான பேர்வழி. அவனுக்கும் தலைமை குமாஸ்தாவுக்கும் எப்போதும் 'தகராறுதான்'தான். ஒரு நாள் ராமுடு எங்கள் எல்லோரையும் அழைத்து ஒரு திட்டம் போட்டான். அதன்படி நாங்கள் எல்லோரும் செய்ய வேண்டிய வேலை மிகவும் சுலபந்தான். அதாவது அவன் மறுநாள் தலைமை குமாஸ்தாவிடம் பேசும்போது நாங்கள் அவர் மேஜையருகில் வந்து கூடி விட வேண்டும். அதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம்.

மறுநாள் காலையில் ராமுடு வேண்டுமென்றே ஆபீஸுக்கு தாமதமாக வந்தான். தலைமை குமாஸ்தா அவனைக் கூப்பிட்டு அனுப்பினர். நாங்களும் தயாராக அவர் மேஜையருகில் கூடினேம். தலைமை குமாஸ்தா ராமுடுவைப் பார்த்து, ''ஏனய்யா, இவ்வளவு லேட்? இது ஆபீஸா உங்கள், அப்பன் வீடா? தாசில்தாரிடம் ரிப்போர்ட் செய்யப் போகிறேன்'' என்று கத்தினர்.

ராமுடு பதில் சொன்னன். ''என்ன ஸார் செய்வேன்! நான் முடிந்தமட்டும் சொல்லிப் பார்த்தேன். அந்த 'லெவல் கிராசிங்' கேட் வாச்மேன் ''முடியாது'' என்று சொல்லி விட்டான். கதவைத் திறக்கமாட்டேன் என்றதால் நான் சைகிளை வைத்துக் கொண்டு ரயில் வரும் வரையில் காத்துக் கொண்டிருந்தேன். எங்கள் தலைமை குமாஸ்தா கோபித்துக்கொள்வார் என்றுகூட சொல்லிப் பார்த்தேன். அவன் அதற்கு கொஞ்சம் கூட மரியாதை கொடுக்காமல், ''உங்கள் தலைமைகுமாஸ்தாவாவது மண்ணாங்கட்டியாவது! நீரே புத்தி யில்லாமல் இவ்வளவு அவசரப்படுகிறீரே. உங்கள் தலைமை குமாஸ்தா எவ்வளவு பெரிய புத்திசாலியோ!'' என்று ஒரே இரைச்சலோடு, வாட்ச்மேன் கூறியதாக பதில் சொன்னன் ராமுடு.

அதாவது அவன் என்னவெல்லாம் அவரை பேசவேண்டி நினைத்தானே, அவற்றை வாட்சுமேன் சொன்னதாகச் சொல்லிமட்டந் தட்டி விட்டான். தலைமை குமாஸ்தா அவமானம் தாங்காமல் தலைகுனிந்தார்.

சீமா,
சென்னை-5.

ஆத்திரக்காரனுக்கு...

என்னுடைய அண்ணு கிச்சாமிக்கு முன்கோபம் அதிகம். காரியத்தை முடித்துவிட்டு பின்பு அதன் பலாபலன்களைப் பார்க்கும் போது, அவன் திகைப்படைவது சகஜம். இப்படித்தான் சில நாட்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

புத்தக அலமாரியிலிருந்த ஒரு புத்தகத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு கார்டு என்மேலே விழுந்தது. அதைப் பார்த்து எனக்கு சிரிப்பு வந்தது. குடு குடு வென்று அண்ணுவிடம் கொண்டுபோய் அதைக் கொடுத்தேன்.

அது ஒரு 'பிராகிரஸ் ரிபோர்ட்'. ஐந்தாம் வகுப்பில் மார்க்குகள் வாங்கினதைப் பதியப்பட்டிருந்தது. ஆங்கிலம் 15, தமிழ் 24, கணக்கு 7½, சரித்திரம் 45, விஞ்ஞானம் 26. இதைப்பார்த்தவுடன் அண்ணுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. கோபத்தால் சிவந்த அவனது கைகள் பளாரென்று என் கன்னத்தில் பதிந்தன. அழுவதா, சிரிப்பதா என்ற நிலைமையில் மிகுந்த கஷ்டத்துடன், ''அண்ணு! அதிலுள்ள பெயரைப் பாரேன். என்றேன்!'' 'கே. கிருஷ்ணஸாமி. 5-ம் கிளாஸ்' என்று போடப்பட்டிருந்ததைக் கண்டு அவன் நடந்ததை மறந்து விழுந்து விழுந்து சிரித்தான். ஆம், அது அவன் ஐந்தாம் வகுப்பு படித்தபோது வாங்கிவந்த 'பிராகிரஸ்' ரிப்போர்ட்தான்!

கி. ஜயராமன்,
மதுரை.

பெயர் செய்த உதவி

உலகில் ஒரே பெயரினுல் நன்மையும் உண்டாகிறது, அதே சமயம் சில அவதிகளும் உண்டாகிறது.

ஒரு சமயம் நானும் எனது சகோதரியும் திருச்சிக்கு அருகிலுள்ள கிராமத்தில் நடந்த ஒரு கல்யாணத்திற்குப் போனேம். விடியற்காலை 4-மணிக்கு திருச்சி ஜங்ஷன் வந்ததும், போர்டரைக் கூப்பிட்டு, நாங்கள் போக வேண்டிய இடத்தைச்சொல்லி அங்கு செல்லும் வண்டியேற எந்த பிளேட்பாரத்திற்கு போகவேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கையில், ஒரு ஆள் எங்களிடம் வந்தான். ''நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்? உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டான். அதற்கு என் சகோதரி, ''என் பெயர் ராஜம்மா, நான் மதருஸிலிருந்து வருகிறேன்'' என்று பதிலுரைத்தாள். உடனே அந்த ஆள் எங்களை மிக்க மரியாதையோடு அழைத்துப் போய் ஊரில் விட்டுவிட்டான். நாங்களும் அந்தக் கல்யாண வீட்டில் எங்களுக்காக ஆள் அனுப்பியதை நினைத்து மிகவும் மகிழ்ந்தோம். நாங்கள் போய்ச் சேர்ந்து ஓர் அரை மணி நேரம் கழித்து மற்ருெரு ராஜம்மாவும் மதருஸிலிருந்து வந்து விட்டாள். அந்த ராஜம்மா வந்ததும் வராததுமாய் ஒரு கலவரத்தைக் கிளப்பி விட்டாள். ''நான் தனிமையில் வருகிறேன், ஆள் அனுப்பு, என்று சொல்லியும் அனுப்பவில்லையே!'' என்று ஆத்திரத்தில் பேச ஆரம்பித்து விட்டாள்.

''நான் தவறுதலாக வேறு வண்டியேறி அலைந்து திரிந்து வந்து சேர்ந்தேன்'' என்ருள் அவள். வீட்டிலுள்ள ஸ்திரீ, அனுப்பிய ஆளைக் கூப்பிட்டு விசாரித்ததில் அவன் பெயரை சரியாய் சொன்னுன். ஆளை நேரில் காட்டும்படி சொன்னதில் என் சகோதரியைக் காட்டினுன். பிறகுதான் விஷயம் தெரிந்தது. அதற்கு இரண்டாவது ராஜம்மா சொன்னுள். ''பெயரை மாத்திரம் நீ சொல்லியனுப்பியது தப்பு! ஆள் அடையாளமும் சொல்லி அனுப்பி இருக்கவேண்டும்! அது உன் தப்பு!'' என்று சீறினுள். நாங்கள் இந்த விஷயத்தை இன்று நினைத்தாலும் சிரிக்காமலிருக்க முடிவதில்லை!

கே. பொன்னம்மாள்,
சென்னை-6.

ஆர். எஸ். பதி மருந்து (ரிஜிஸ்டர்டு)

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி, வாய்வுக் குத்து, கை, கால் வலி, காலரா முதலிய அநேக வியாதிகளை குணமாக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10. தபால் செலவு வேறு

எச்சரிக்கை: போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். எங்கள் ஆறுமுக முத்திரையையும், டாக்டர் போட்டோவையும் கவனித்துப் பார்த்து வாங்குங்கள். விரிவான கேட்லாக் வேண்டுவோர் விண்ணப்பிக்கவும்.

ஆர். எஸ். பதி அண்டு கோ.,

(ஸ்தாபிதம்: 1909)

தபாற்பெட்டி நிர்: 99, மதுரை.

கோவை, சேலம் ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் **K. V. S. B & சன்ஸ்,**

ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ் அண்டு கெமிஸ்ட்ஸ்,

ஈரோடு.

விரைவில் வருகிறது!

சியாமளா &
நளினி பிக்சர்ஸ்
படித்த
பெண்
(தாம்பரம்) லலிதா
ராஜ சுலோசனா
கண்ணப்பா
நம்பியார்
மற்றும்
பலர்
டைரக்ஷன்: M. திருவேங்கடம்
கதை வசனம்: A.S. முத்து, B.A. * ஸ்டுடியோ: சியாமளா
PSR